# முன்னேற்ற அறிக்கை

# 2024

## போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு

### துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரிவு

**இல : 19, சைத்திய வீதி, கொழும்பு 01**
**தொலைபேசிகள் : 011-2439352, 011-2435161**
**இணையத் தளம்; : www.portmin.gov.lk**
**மின்னஞ்சல் முகவரி : secretary@portmin.gon.lk**

**உள்ளடக்கம்** **பககம்**


பகுதி I

1. துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரிவு — 92-121
   - 1.1. தாபனப் பிரிவு — 96-101
   - 1.2. கணக்குப் பிரிவு — 101-105
   - 1.3. அபிவிருத்தி பிரிவு — 105-106
   - 1.4. கணக்காய்வுப் பிரிவு — 107-109
   - 1.5. விமான சேவைகள் பிரிவு — 109-121

பகுதி I I

2. வணிகக் கப்பல் செயலகம் — 122-129
3. இலங்கை துறைமுக அதிகாரசபை — 130-145
4. வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் — 146-151
5. ஜய கன்டேனர் டர்மினல்ஸ் லிமிடெட் — 152-155
6. சிவில் விமானச் சேவைகள் அதிகாரசபை — 156-169
7. வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமானச் சேவைகள் (இலங்கை)(தனியார்) நிறுவனம் — 170-179

2024 ஆம் ஆண்டில் சனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் இறுதி வரை துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரிவுச்சின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் குறிப்பிடும், இவ்வறிக்கை 2025 ஆம் ஆண்டில் வரவுசெலவு செயற்குழு சந்தர்ப்பத்தில் சமர்ப்பிப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

## பகுதி I

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரிவுச்சின் பொது தகவல்கள், முழுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## பகுதி I I

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரிவுச்சின்விடயவெல்லைக்கு உரியதாகும் பின்வரும் நிறுவனங்கள்,

- வணிகக் கப்பல் செயலகம்
- இலங்கை துறைமுக அதிகார சபை
- வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்
- ஜய கன்டேனர் டர்மினல்ஸ் கம்பெனி
- சிவில் விமானச் சேவைகள் அதிகாரசபை
- வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமானச் சேவைகள் (இலங்கை)(தனியார்) நிறுவனம்

ஏற்புடைய காலப்பகுதியில் எய்துக்கொண்ட பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தொடர்பான விபரங்களும் எதிர்கால திட்டங்களும் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

# பகுதி I

## துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரிவு

## நோக்கு

“தெற்காசிய வலயத்தில் உயர் போட்டிமிகு கடல்சார் சேவைகளை வழங்கும் மத்திய நிலையமாக இலங்கையை அபிவிருத்தி செய்வதனூடாக அனைத்து சேவை பயன்பாட்டாளர்களுக்கும் நட்புரீதியான உயர் மட்டத்திலான கடல்சார் சேவைகளை வழங்குதல்”

மற்றும்

“பிராந்தியத்தின் முதன்மை விமானப் போக்குவரத்து நிலையமாக இலங்கையை நிலைப்படுத்தல்.”


## பணிக்கூற்று

“தேசிய பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் கடல்சார் போக்குவரத்து துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படும் பொருட்டு போட்டி நிலைமைக்கு ஈடுகொடுக்கக்கூடிய துறைமுகங்கள், அத்துடன் கப்பற்றுறையில் தரமான சேவைகளை வழங்குவதற்கு ஏதுவான வகையில் மிகவும் பொருத்தமான கொள்கை வரையறையொன்றினை தயாரித்தல் மற்றும் செயற்திறனான பொறிமுறையொன்றினை உருவாக்குதல்”


மற்றும்

“ஏற்புடைய பொருளாதார பிரிவுகளில் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்கத்தில், விமானப் போக்குவரத்து சேவைகளின் திறன், பாதுகாப்பு மற்றும் பயன்பாட்டாளரின் நற்புறவுடன் கூடிய சேவையாக்குதல்.”

## துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரிவு விடையவெல்லைக்கு உரியதாகும் நிறுவனங்கள்



## பிரதான பிரிவுகள்




2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் பதவியணி தகவல்கள் - போக்குவரத்துஇ பெருந்தெருக்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு (துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரிவு)

| பதவி | சேவை | தரம் | சம்பள கோவை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போ-துள்ள பதவியணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| செயலாளர் | இ.நி.சே | சிறப்பு | எஸ்எல் 4 | 01 | 01 | - |
| மேலதிக செயலாளர் (நிருவாகம் மற்றும் நிதி) | இ.நி.சே | சிறப்பு | எஸ்எல் 3 | 01 | - | 01 |
| மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) | இ.நி.சே | சிறப்பு | எஸ்எல் 3 | 01 | 01 | - |
| மேலதிக செயலாளர் (விமானச் சேவைகள்) | இ.நி.சே | சிறப்பு | எஸ்எல் 3 | 01 | 01 | - |
| பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) | இ.தி.சே | சிறப்பு | எஸ்எல் 3 | 01 | - | 01 |
| பணிப்பாளர் நாயகம் | இ.பொ.சே | சிறப்பு | எஸ்எல் 3 | 01 | 01 | - |
| பிரதான நிதியாளர் | இ.க.சே | சிறப்பு | எஸ்எல் 3 | 01 | 01 | - |
| சிரேட்ட உதவிச் செயலாளர் | இ.நி.சே | I | எஸ்எல் 1 | 02 | 02 | - |
| பிரதான கணக்காளர் | இ.க.சே | 1 | எஸ்எல் 1 | 01 | 01 | - |
| பணிப்பாளர் (அபிவிருத்தி) | இ.நி.சே | I | எஸ்எல் 1 | 01 | 01 | - |
| பணிப்பாளர் (திட்டமிடல்) | இ.தி.சே | I | எஸ்எல் 1 | 01 | 01 | - |
| பணிப்பாளர் (பொறியியலாளர்) | இ.பொ.சே | I | எஸ்எல் 1 | 01 | 01 | - |
| பிரதான உள்ளக கணக்காய்வாளர் | இ.க.சே | I | எஸ்எல் 1 | 01 | 01 | - |
| உதவிச் செயலாளர் | இ.நி.சே | III/II | எஸ்எல் 1 | 01 | - | 01 |
| கணக்காளர் | இ.க.சே | III/II | எஸ்எல் 1 | 02 | 02 | - |
| உள்ளக கணக்காய்வலாளர் | இ.க.சே | III/II | எஸ்எல் 1 | 01 | - | 01 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பிரதி / உதவி பணிப்பாளர் | இ.நி.சே | III/II | எஸ்எல் 1 | 01 | 01 | - |
| பிரதி /உதவி பணிப்பாளர் (திட்டமிடல்) | இ.தி.சே | III/II | எஸ்எல் 1 | 01 | 01 | - |
| பிரதி /உதவி பணிப்பாளர் (திட்டமிடல்) | இ. பொ.சே | III/II | எஸ்எல் 1 | 01 | - | 01 |
| சட்ட அலுவலர் | திணைக்களத்துடனான | III/II | எஸ்எல் 1 | 01 | 01 | - |
| செயலாளர் அவர்களின் ஒருங்கிணைப்புச் செயலாளர் | தற்காலிக | - | ரூபா. 41,410 /- (மாதாந்தம்) (அ.நி.சு. இலக்கம் 03/2016 இன் iv படி) | 01 | - | 01 |
| நிருவாக அலுவலர் | மு.உ.சே | அதி சிறப்பு தரம் | எம்என் 7 | 01 | 01 | - |
| மொழிபெயர்ப்பாளர் | மொழிபெயர்ப்பாளர் சேவை | II/I | எம்என் 6 | 01 | - | 01 |
| தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்ப அலுவலர் | இ.த.தொ.மற்றும் தொ.சே | 2 வகுப்பு II/I | எம்என் 6 | 01 | - | 01 |
| அபிருத்தி அலுவலர் | அபி.உ.சே | III/II | எம்என்4 | 40 | 34 | 06 |
| முகாமைத்துவ சேவையின் அலுவலர்கள் | அ.ப.சே | III/II/I | எம்என்2 | 20 | 14 | 06 |
| தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்ப அலுவலர் | இ.த.தொ.மற்றும் தொ.சே | 3 வகுப்பு III/II/I | எம்டீ 1 | 01 | - | 01 |
| சாரதி | இணைந்த சாரதிகள் சேவை | III/II/I/ சிறப்பு | பீஎல் 3 | 13 | 13 | - |
| அலுவலக பணியாளர்கள் | அ.ப.சே | III/II/I/ சிறப்பு | பீஎல் 1 | 14 | 12 | 02 |
| வீடியோ புகைப்படக் கலைஞர்கள் | தற்காலிகம் | - | ரூபா. 29.840/- +ரூபா. 7800 (மாதாந்தம்) | 01 | - | 01 |
| அசையா புகைப்படக் கலைஞர் | தற்காலிகம் | - | ரூபா. 29.840/- +ரூபா. 7800 (மாதாந்தம்) | 01 | 01 | - |
| புகைப்படக் கலைஞர் உதவியாளர் | தற்காலிகம் | - | ரூபா. 29.840/- +ரூபா. 7800 (மாதாந்தம்) | 01 | - | 01 |

# துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரிவின் கீழ் இயங்கும் பிரிவுகளால் மேற்கொள்ளப்படும் பணிகள்

## 1.1 தாபனப் பிரிவு

### 1.1.1 நிறைவேற்றிய பணிகளும் அவற்றின் முன்னேற்றமும்.

#### i.) சட்டங்கள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள்

- அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுகையில் எழுந்த சட்டத்துடனான பிரச்சினைகள் தொடர்பில் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட 76 வழக்குகள் தொடர்பில், சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஆலோசனைகள் பெற்றுக்கொண்டு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- Association of Container Depot Operators (ACDO) நிறுவனம் தொடர்பிலான புதிய சட்டம் பொருட்டு சட்ட வரையுள் திணைக்களத்தால் இறுதி வரையுள் தயாரித்தல் மற்றும் குறித்த செயற்பாடுகளை முன்னெடுத்தல் தொடர்பில், 2024

பாராளுமன்ற தேர்தலின் பின்னர் நியமனம் செய்யப்பட்ட புதிய அமைச்சரவையின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்வதற்கு புதிய அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்தல்.

- வரையறுக்கப்பட்ட மாகம்புர துறைமுக முகாமைத்துவ தனியார் கம்பெனியின் பணிப்பாளர் சபையிடம் மற்றும் ஆலோசகருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழங்கிய ஆலோசனைகள் பிரகாரம், இலஞ்சம் அல்லது புலனாய்வு ஆணைக்குழுவிடமும் குற்ற விசாரணை திணைக்களத்திடமும் முறைப்பாடு செய்யுமாறு இலங்கை துறைமுக அதிகார சபையிடம் அனுப்பி வைக்கப்படுதல்.

- 2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளை தயாரித்தல் மற்றும் குறித்த ஒழுங்குவிதிகளை பாராளுமன்றத்திடம் அனுமதிக்காக முன்வைத்தல்.

- 1979 ஆம் ஆண்டு 51 ஆம் இலக்க வணிக கப்பற் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளை தயாரித்தல் மற்றும் குறித்த ஒழுங்குவிதிகளை பாராளுமன்றத்திடம் அனுமதிக்கு சமர்ப்பித்தல்.

- 1982 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க துறைமுகங்கள் தொடர்பான அதிகார சபை (கடற்றொழில் படகு மற்றும் வலை பயன்பாடுகளை கட்டுப்படுத்தல்) கட்டளைகளை திருத்தம் செய்வதற்கான ஒழுங்குவிதிகளை சட்ட வரைஞர் திணைக்களத்திடம் அனுப்பி வைத்தல்

### ii.) மோட்டார் வாகன உரிமப்பத்திரங்களை வழங்குதல்

2024 ஆம் ஆண்டுக்காக பொது நிருவாக சுற்றறிக்கை 01/2018 இன் கீழ் 26 இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஓய்வு பெற்றுக்கொள்கின்ற அலுவலர்களுக்காக 22/99 சுற்றறிக்கையின் கீழ் உரிமப் பத்திரங்கள் பெற்றுக்கொள்வதற்காக 04 விண்ணப்பங்களை வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்திடம் அமைச்சினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

### iii.) துறைமுக கட்டணங்களின் பொருட்டு சலுகை பெற்றுக்கொள்வதற்கு ஏற்புடையதான வேண்டுகோள்கள்

இது தொடர்பாக அமைச்சிடம் கிடைக்கப்பெற்ற 26 வேண்டுகோள்கள் தொடர்பில் இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவரிடம் வினவப்பட்டுள்ளதுடன், அவை தொடர்பாக பின்வரும் வகையில் பணியாற்றப்பட்டுள்ளன.

| **முன்னேற்றம்** | **எண்ணிக்கை** |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட வேண்டுகோள்களின் எண்ணிக்கை | 23 |
| அங்கீகரிக்கப்படாத வேண்டுகோள்களின் எண்ணிக்கை | 01 |
| CICT/ SAGT/ Hambanthota Port மூலம் நிருவகிக்கப்படும் கொள்கலன்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ள வேண்டுகோள்கள் | 02 |
| அறிக்கை கிடைக்கப்பெறாத வேண்டுகோள்கள் | - |

### iv.) விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திற்கான பதிவு

ஏற்புடைய காலப்பகுதியில் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்தின் பொருட்டு நிகழ்நிலை பதிவுகள் செய்யப்படவில்லை.

பல்நோக்கு அபிவிருத்தி பணியாளர்களில், இணைந்த சேவையின் சாரதி சேவையில் 04 பதவிகளுக்கும், அலுவலக பணியாளர் சேவையின் 04 பதவிகளுக்கும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டது. இவர்களுக்கு அமைச்சினால் தற்காலிக நியமனக கடிதங்கள் வழங்கியதுடன், எதிர்வருங் காலங்களில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது. முறையான நியமனக் கடிதங்கள் கிடைத்த பின்னர் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் பொருட்டு பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

### v.) ஓய்வூதிய நடவடிக்கைகள்

அமைச்சின் 04 அலுவலர்கள் ஓய்வு பெற்றதுடன், ஓய்வூதிய முகாமைத்துவ முறைமை ஊடாக குறித்த அலுவலர்களின் ஓய்வூதியம் துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### vi.) வாய் மொழிமூலமான பதில்களை எதிர்பார்க்கும் பாராளுமன்ற கேள்விகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனஙகளின் விடயவெல்லைக்கு ஏற்புடையதாக இதுவரை இவ்வமைச்சிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள வாய்மொழி பதில்கள் எதிர்பார்க்கப்படும் பாராளுமன்ற வினாக்களுக்கான பதில் அனுப்பி வைக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ன.

### vii.) மனித உரிமைககள் ஆணைக்குழு சம்பந்தமான பணிகள்

மனித உரிமைகள் ஆணைக்குழுவால் இவ்வமைச்சிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளை, அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களிடம் அனுப்பி வைத்து அறிக்கைகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் உரிய அறிக்கைகளுடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன் தோற்றுதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தக் காலப் பகுதியில் மனித உரிமைகள் ஆணைக்குழுவால் அமைச்சிடம் முறைப்பாடுகளை முன்வைக்கப்படவில்லை.

### viii.) பாராளுமன்ற பொது மனு செயற்குழு சம்பந்தமான நடவடிக்கைகள்

அமைச்சிலும், அத்துடன் இணைந்துள்ள நிறுவனங்களிலும் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள், ஈடுபட்டிருந்த அலுவலர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்புகளின் முறைப்பாடுகள் தொடர்பாக பணியாற்றுதலும், நிவாரணம் வழங்குதலும் இச் செயற்குழுவால் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த ஆண்டில் பாராளுமன்ற பொது மனு செயற்குழுவிடமிருந்து 10 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

### ix.) வீசா பரிந்துரை வழங்குதல்

பின்வரும் வகையில் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் அலுவலர்களுக்கு வீசா பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

| நிறுவனம் | அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|
| இலங்கை துறைமுக அதிகார சபை | 270 |
| இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் | 192 |
| சிவில் விமான சேவைகள் அதிகார சபை | 230 |
| வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பெனி | 28 |

### x.) சனாதிபதி செயலகத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்

சனாதிபதி செயலகத்திடமிருந்து கிடைக்கப்பெறும் பொது மக்களின் வேண்டுகோள்கள், முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகள் இந்த அமைச்சிடம் முன்வைக்கப்பட்டதன் பின்னர், அமைச்சிடம் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்களிடம் குறித்த பிரச்சினைகளை சமர்ப்பிக்கப்படும். அதேபோன்று குறித்த அமைச்சின் விடயவெல்லைக்கு ஏற்புடையதாகாத பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட விடயவெல்லை உரித்தாகும் அமைச்சுக்களிடம் சமர்ப்பிக்கப்படும்..

சனாதிபதி செயலகத்தால் இவ்வாண்டில் அமைச்சிடம் அனுப்பி வைக்கப்பட்டுள் முறைப்பாடுகளின் எண்ணிக்கை 69 ஆவதுடன், குறித்த முறைப்பாடுகளில் 39 ஐ இலங்கை துறைமுக அதிகார சபையிடமும், 3 ஐ வணிக கப்பற் செயலகத்திடமும், 01 ஐ கப்பற் கூட்டுத்தாபனத்திடமும், 14 ஐ விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் கம்பெனியிடமும், (தனியார்) (இலங்கை) 05 ஐ சிவில் விமான சேவைகள் அதிகார சபையிடமும், 05 ஐ ஸ்ரீலங்கன் எயார்லயின் கம்பெனியிடமும், 01 ஐ ஸ்ரீ லங்கா கேடரின் (தனியார்) கம்பெனியிடமும், 01 ஐ இலங்கை துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் ஆலோசனை சேவைகள் (தனியார்) கம்பெனியிடமும் என்ற வகையில் வெவ்வேறாக குறிப்பிடலாம்.

சனாதிபதி அலுவலகத்திடம் கிடைக்கப்பெறும் பொது மக்களின் முறைப்பாடுகளை அமைச்சிடம் முன்வைக்கப்பட்டதன் பின்னர் அமைச்சினால், உரிய இணைந்த நிறுவனங்களிடம் குறித்த பிரச்சினைகளை சமர்ப்பிக்கும்போது உரிய பதில்கள் தொடர்பில் இவ்வமைச்சிடமும் சனாதிபதி செயலகத்திடமும் பிரதிகள் சகிதம் மேன்முறையீட்டாளரை அறிவுறுத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
மேன்முறையீட்டாளரின் வேண்டுகோள் தொடர்பில் அமைச்சிடம் மட்டும் பதில்கள் கிடைக்கப்பெறும். அதன்போது அமைச்சு மூலம் குறித்த பதில்களை சனாதிபதி அலுவலகத்திடம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**xi.) வெளிநாட்டு லீவுக்கான அனுமதி**

இந்த அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அலுவலர்களுக்கு பின்வரும் தேவைகளின் பொருட்டு வெளிநாட்டு லீவுகள் வழங்கப்பட்டுள்ளன.

| **நிறுவனம்** | **தொகுதி** | **அலுவலர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| இலங்கை துறைமுக அதிகார சபை | தனிப்பட்ட லீவு (நிறைவேற்று)<br>தனிப்பட்ட லீவு (நிறைவேற்று அல்லாத)<br>கடமை<br>வேலைவாய்ப்பு<br>விளையாட்டுகளுக்கான லீவுகள் | 56<br>156<br>128<br>5<br>42 |
| இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் | தனிப்பட்ட லீவு | 02 |
| வணிக கப்பற் செயலகம் | கடமை | 20 |
| ஜெயா கன்டேனர் டர்மினல்ஸ் | தனிப்பட்ட லீவு<br>கடமை | 07<br>03 |
| இலங்கை துறைமுகங்கள், முகாமைத்துவ மற்றும் ஆலோசனை சேவைகளின் தனியார் கம்பெனி | தனிப்பட்ட லீவு | 07 |

**xii.) அமைச்சு அலுவலர்களின் பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகள்**

உள்நாட்டு பயிற்சி

| **தொடர் இலக்கம்** | **பயிற்சி செயலமர்வின் பெயர்** | **பயிற்சி செயலமர்வு நடாத்திய நிறுவனம்** | **பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 01 | கலைமாணி பரீட்சை | சர். ஜோன் கொத்தலாவளை பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 01 |
| 02 | பட்டநிலை பின்படிப்பு கற்கைநெறி | கொழும்பு பல்கலைக்கழகம் | 01 |
| 03 | தகவல் தொழில்நுட்பம் மற்றும் ப.உ. முகாமைத்துவம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கைநெறி | இலங்கை மன்றம் | 01 |
| 04 | Secretarial Practices | நிபுணதா பியஸ | 01 |
| 05 | போக்குவரத்து முகாமைத்துவம் | பிராக் நிறுவனம் | 01 |
| 06 | ஓய்வூதியம் தொடர்பான செயலமர்வு | SDFL | 01 |
| 07 | செலவினம் மற்றும் கொடுப்பனவு செயற்றிட்டம் | பிராக் நிறுவனம் | 01 |
| 08 | அரச பெறுகை திட்டம் | பிராக் நிறுவனம் | 05 |
| 09 | வருடாந்த களஞ்சிய ஆய்வு மற்றும் பொருட் அகற்றல் | பிராக் நிறுவனம் | 02 |
| 10 | கணக்காய்வு சட்டம் மற்றும் அரசாங்க ஊழியர்களின் பொறுப்பு | பிராக் நிறுவனம் | 03 |
| 11 | வருடாந்த களஞ்சிய ஆய்வு | Metropolitan Campus | 01 |
| 12 | அலுவலக பணியாளர்களின் | நிபுணதா பியஸ | 02 |

| | | | |
|---|---|---|---|
| | கடமைப் பொறுப்பு தொடர்பான பயிற்சி செயலமர்வு | | |
| 13 | அரசாங்க அலுவலர்களின் சம்பளம் தயாரித்தல் | Metropolitan Campus | 01 |
| 14 | ஆங்கில சான்றிதழ் கற்கைநெறி (அடிப்படை) | மகாபொல துறைமுகம் மற்றும் சமுத்திர அகடமி | 04 |
| 15 | மனிதவள திட்டம் தயாரித்தல் தொட்பான பயிற்சி செயலமர்வு | அரசாங்க நிருவாகம், மாகாண சபைகள் மற்றும் உள்@uhl;rp mikr;R | 02 |

வெளிநாட்டு பயிற்சி

| தொடர் இலக்கம் | பயிற்சி செயலமர்வு நடாத்திய நிறுவனம் | பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | 1st Trade Facilitation Capacity Building Program for BIMSTEC Countries | 01 |
| 02 | Program of Diplomacy & International Relations from 05th to 13th August 2024 | 01 |
| 03 | seminar on Maritime Transport Management for Developing Countries | 04 |
| 04 | Navigating Global Conflicts | 01 |
| 05 | Smart Port Visit to the USA - Capacity Development Project | 01 |
| 06 | Advanced Seminar on Infrastructure Connectivity | 01 |
| 07 | Spacecraft Dynamics and Control | 01 |
| 08 | Seminar on Free Trade Zone (Port) Construction fo Sri Lanka | 02 |
| 09 | South Asia Sub regional Economic Cooperation (SASEC) Program’s Working Group Meetings and Senior Officials Meeting for 2024 being held in Thimphu in November 2024 | 02 |

## 1.2 கணக்குப் பிரிவு

### 1.2.1 நிறைவேற்றிய பிரதான கடமைப்பொறுப்புகள்மற்றும் அவற்றின் முன்னேற்றம்

- வரவு செலவு மதிப்பீடுகளை தயாரித்தல்
- கட்டுநிதி கணக்கை தயாரித்தல்
- வருடாந்த கட்டுநிதி எல்லை தயாரித்தல், மாதாந்த கட்டுநிதி விண்ணப்பபடிவம் சமர்ப்பித்தல் மற்றும் கட்டுநிதி கணக்குகளை தயாரித்தல்.
- முற்பண பி கணக்கு தயாரித்தல் மற்றும் கணக்கிணக்க கூற்றினை மாதாந்தம் தயாரித்தல்.
- வங்கி நடவடிக்கைகளை கையாளுதல் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்
- ஊழியர்களின் வேதனம், மேலதிக நேர கொடுப்பனவு. ஏனைய கொடுப்பனவுகள்

- வழிகாட்டல்களுக்கமைவாக பெறுகை செயற்றிட்டம் தயாரித்தல், சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் தயாரித்தல்.
- வழங்கல் முகாமைத்துவம்
- நிலையான சொத்துக்களின் பதிவேடை பேணுதல்.
- பொருட் மீளாய்வை உரிய திகதியில் மேற்கொள்ளுதல் மற்றும் அறிக்கைகளை தயாரித்தல்
- கணக்காய்வு உசாவுதல்களுக்கு பதில் வழங்குதல்
- பணப் பேரேடை பேணுதல் மற்றும் நாளாந்தம் தீர்த்தல்
- நிதி நிலை அறிக்கைகளை தயாரித்தல்
- ஒதுக்கீட்டு செலவு பேரேடை பேணுதல்
- அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திடம் சமர்ப்பித்தல்
- துறைமுக கருத்திட்டங்களுக்கு ஏற்புடையதான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்
- அரச கணக்கு செயற்குழு மற்றும் அரச வியாபார கணக்கு செயற்குழுவிற்கு ஏற்புடையதான பணிகள்
- ஓய்வூதிய கோவை ஆவணங்களை பேணுதல்
- சிறாப்பர் கடமைகள்
- ITMIS (Integrated treasury Management information System) முறைமை மூலம் கணக்கு நடவடிக்கைகளை பராமரித்தல்.
- CIGAS முறைமையில் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குதல் மற்றும் மாதாந்த கணக்கீட்டு சாராம்சங்களை அரச கணக்கீட்டு திணைக்களத்திடம் சமர்ப்பித்தல்.

## 1.2.2 செலவின அறிக்கை - 2024.12.31 ஆம் திகதியில்

**176 துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

| 1 – தொழில்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்<br>01 – அமைச்சர் அலுவலகம் | | | | |
|---|---|---|---|---|
| **திருத்தம் செய்யப்பட்ட வரவு செலவு மதிப்பீடு (ரூபா)** | **திரட்டிய செலவினம்** | **செலவின சதவீதம் %** | **திருத்தம் செய்யப்பட்ட வரவு செலவு மதிப்பீடு (ரூபா)** | **திரட்டிய செலவினம் %** |
| | **மீண்டுவருஞ் செலவினம்** | **69,419,327.44** | **52,801,072.90** | **76.06** |
| | **ஆளுக்குரிய வேதனாதிகள்** | **28,000,000.00** | **20,314,778.97** | **72.55** |
| **1001** | சம்பளம் மற்றும் வேதனம் | 15,700,000.00 | 10,275,716.74 | 65.45 |
| **1002** | மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் லீவு தின சம்பளம் | 5,500,000.00 | 3,284,080.59 | 59.71 |
| **1003** | ஏனைய படிகள் | 6,800,000.00 | 6,754,981.64 | 99.34 |
| | **பிரயாணச் செலவுகள்** | **5,000,000.00** | **3,475,754.36** | **69.52** |
| **1101** | உள்நாட்டு | 2,000,000.00 | 1,610,314.00 | 80.52 |
| **1102** | வெளிநாட்டு | 3,000,000.00 | 1,865,440.36 | 62.18 |
| | **வழங்கல்** | **23,100,000.00** | **19,659,411.69** | **85.11** |
| **1201** | எழுதகருவி பொருட்கள் மற்றும் அலுவலக தேவைகள் | 2,000,000.00 | 1,991,455.45 | 99.57 |
| **1202** | எரிபொருள் | 21,000,000.00 | 17,667,956.24 | 84.13 |
| **1203** | உணவு மற்றும் சீருடை | 100,000.00 | - | - |
| | **பராமரிப்புச் செலவு** | **4,900,000.00** | **4,708,706.78** | **96.10** |

| | | | | |
|---|---|---|---|---|
| **1301** | வாகனங்கள் | 4,400,000.00 | 4,324,155.88 | 98.28 |
| **1302** | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 500,000.00 | 384,550.90 | 76.91 |
| | **சேவைகள்** | **8,169,327.44** | **4,642,421.10** | **56.83** |
| **1401** | போக்குவரத்து | 1,938,527.44 | 799,784.93 | 41.26 |
| **1402** | அஞ்சல் மற்றும் தொடர்பாடல் | 3,000,000.00 | 1,855,992.97 | 61.87 |
| **1403** | மின்சாரம் மற்றும் நீர் | 730,800.00 | - | 0.00 |
| **1404** | குத்தகை மற்றும் tup | 500,000.00 | - | - |
| **1409** | ஏனைய | 2,000,000.00 | 1,986,643.20 | 99.33 |
| | மாற்றுதல் | 250,000.00 | - | - |
| **1502** | மாற்றுதல் | 250,000.00 | - | - |
| | மூலதன சொத்துக்களின் புனர்வாழ்வு மற்றும் மேம்படுத்தல் | **21,650,000.00** | **18,754,265.20** | **86.62** |
| | மூலதன சொத்துக்கள் | 19,650,000.00 | 18,607,200.30 | 94.69 |
| **2002** | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 1,000,000.00 | - | 0.00 |
| **2003** | வாகனங்கள் | 18,650,000.00 | 18,607,200.30 | 99.77 |
| | **நிலையான சொத்துக்களை சுவீகரித்தல்** | **2,000,000.00** | **147,064.90** | **7.35** |
| **2102** | தளவாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1,000,000.00 | 96,088.90 | 9.61 |
| **2103** | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 1,000,000.00 | 50,976.00 | 5.10 |
| | **மொத்தம்** | **91,069,327.44** | **71,555,338.10** | **78.57** |

| 1 – **தொழில்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**<br>02 – **நிருவாக மற்றும் நிறுவனச் சேவைகள்** | | | | |
|---|---|---|---|---|
| **விடய இலக்கம்** | **தொகுதி/விடயம்** | **திருத்தம் செய்யப்பட்ட வரவு செலவு மதிப்பீடு (ரூபா)** | **திரட்டிய செலவினம்** | **செலவின சதவீதம்** % |
| | **மீண்டுவருஞ் செலவினம்** | **326,930,672.56** | **242,003,828.29** | **74.02** |
| | **ஆளுக்குரிய வேதனாதிகள்** | **90,450,000.00** | **86,207,376.64** | **95.31** |
| **1001** | சம்பளம் மற்றும் வேதனம் | 51,000,000.00 | 49,378,564.81 | 96.82 |
| **1002** | மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் லீவு தின சம்பளம் | 4,200,000.00 | 2,320,516.00 | 55.25 |
| **1003** | ஏனைய படிகள் | 35,250,000.00 | 34,508,295.83 | 97.90 |
| | **பிரயாணச் செலவுகள்** | **2,360,000.00** | **1,654,021.69** | **70.09** |
| **1101** | உள்நாட்டு | 700,000.00 | 562,308.00 | 80.33 |
| **1102** | வெளிநாட்டு | 1,660,000.00 | 1,091,713.69 | 65.77 |
| | **வழங்கல்** | **24,180,000.00** | **15,026,024.20** | **62.14** |
| **1201** | எழுதகருவி பொருட்கள் மற்றும் அலுவலக தேவைகள் | 5,000,000.00 | 3,503,135.73 | 70.06 |
| **1202** | எரிபொருள் | 19,100,000.00 | 11,466,888.47 | 60.04 |
| **1203** | உணவு மற்றும் சீருடை | 80,000.00 | 56,000.00 | 70.00 |
| **1205** | **ஏனைய** | - | - | - |
| | **பராமரிப்புச் செலவுகள்** | **8,550,000.00** | **5,446,387.50** | **63.70** |
| **1301** | வாகனங்கள் | 7,500,000.00 | 4,399,402.08 | 58.66 |
| **1302** | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 1,050,000.00 | 1,046,985.42 | 99.71 |
| | **சேவைகள்** | **74,821,472.56** | **66,032,009.43** | **88.25** |
| **1401** | போக்குவரத்து | 5,000,000.00 | 4,636,729.47 | 92.73 |

| | | | | |
|---|---|---|---|---|
| **1402** | அஞ்சல் மற்றும் தொடர்பாடல் | 2,500,000.00 | 2,134,020.66 | 85.36 |
| **1403** | மின்சாரம் மற்றும் நீர் | 2,550,000.00 | 294,654.99 | 0.00 |
| **1404** | வாடகை மற்றும் குத்தகை | 53,100,000.00 | 48,293,929.66 | 90.95 |
| **1405** | ஏனைய | 4,000,000.00 | 3,459,037.50 | 86.48 |
| **1408** | போக்குவரத்து | 1,750,000.00 | 1,642,560.00 | 93.86 |
| **1409** | அஞ்சல் மற்றும் தொடர்பாடல் | 5,921,472.56 | 5,571,077.15 | 94.08 |
| | மாற்றல்கள் | **126,100,000.00** | **67,171,951.58** | **53.27** |
| **1503** | அரச நிறுவனங்கள் | 125,000,000.00 | 66,463,806.69 | 53.17 |
| **1506** | அரச ஊழியர்களின் சொத்துக்களுக்கான கடன் வட்டி | 1,000,000.00 | 672,144.89 | 67.21 |
| **1508** | ஏனைய | 100,000.00 | 36,000.00 | 36.00 |
| | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 469,200.00 | 466,057.25 | 99.33 |
| **1701** | கடன் பதிவழித்தல் | 119,200.00 | 119,200.00 | 100.00 |
| **1703** | அரச மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் | 350,000.00 | 346,857.25 | 99.10 |
| | மூலதனச் செலவுகள் | **14,000,000.00** | **13,454,070.52** | **96.10** |
| | மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்தல்கள் | **11,500,000.00** | **11,439,141.67** | **99.47** |
| **2002** | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 700,000.00 | 639,542.02 | 91.36 |
| **2003** | வாகனங்கள் | 10,800,000.00 | 10,799,599.65 | 100.00 |
| | நிலையான சொத்துக்களை கைப்பற்றுதல் | **2,000,000.00** | **1,516,928.85** | **75.85** |
| **2102** | தளவாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1,209,345.75 | 1,204,304.85 | 99.58 |
| **2103** | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 790,654.25 | 312,624.00 | 39.54 |
| | ஆற்றல் அபிவிருத்தி | **500,000.00** | **498,000.00** | **99.60** |
| **2401** | பயிற்சி மற்றும் ஆற்றல் விருத்தி | 500,000.00 | 498,000.00 | 99.60 |
| | **முழு மொத்தம்** | **340,930,672.56** | **255,457,898.81** | **74.93** |

2 - **அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**
04 **– துறைமுக அபிவிருத்தி**

| விடய இலக்கம் | **தொகுதி/ விடயம்** | **திருத்தம் செய்யப்பட்ட வரவுசெலவு மதிப்பீடு (ரூபா)** | **திரட்டிய செலவினம்** | **செலவின சதவீதம் %** |
|---|---|---|---|---|
| | **மீண்டுவரும் செலவினம்** | **850,000,000.00** | **353,755,493.93** | **41.62** |
| **23-1509 11** | இலங்கை துறைமுக அதிகார சபை சூரியவெவ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானம் | 850,000,000.00 | 353,755,493.93 | 41.62 |
| | மூலதன செலவினம் | **7,934,000,000.00** | **991,165,700.34** | **12.49** |
| **21-2104 17** | காங்கேசன்துறை துறைமுகத்தின் புனர்வாழ்வு வருத்திட்டம் பொருட்டு ஆலோசனை சேவைகளை வழங்கும் கருத்திட்டம் | 765,000,000.00 | - | - |
| **21-2302 12** | கடன் வழங்குதல் | 3,826,000,000.00 | - | - |
| **24-2302** | தூண்களின் மீது நிருமாணிக்கப்படும் துறைமுகத்தின் நுழைவு அதிவேக வீதி | 400,000,000.00 | 158,930,723.04 | 39.73 |

| | | | | |
|---|---|---|---|---|
| **12**<br><br>**24-2104 17** | கருத்திட்டம் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி கட்டிடங்களை நிருமாணித்தல் | 53,000,000.00 | - | - |
| **28-2105 12** | மேற்கு கொள்கலன் முனையம் II இற்காக மேற்கு அணைகரை நீடிக்கும் பொருட்டான விபரமான திட்டம் - காணி மற்றும் காணி மேம்படுத்தல் | 560,000,000.00 | 2,506,739.30 | 0.45 |
| **29-2 104** | ஹிங்குரக்கொடை சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்தி திட்டம் | 2,000,000,000.00 | 500,490,000.00 | 25.02 |
| **26-2509 11** | சூரியவெவ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானம் (கடன் மீள செலுத்தல்)<br>ஏனைய – மொத்தம் | 330,000,000.00 | 329,238,238.00 | 99.77 |
| | **முழுமொத்தம்** | **8,784,000,000.00** | **1,344,921,194.27** | **15.31** |

## 1.3 அபிவிருத்தி பிரிவு

### 1.3.1 திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவால் மேற்கொள்கின்ற பிரதான கடமைகள்

- அமைச்சின் நோக்கு பிரகாரம் ஏற்புடைய குறிக்கோள்களை அடைந்துக்கொள்வதற்கு முடியுமான வகையில் புதிய கொள்கையுடனான விடயங்கள் தொடர்பில் அமைச்சரவை பத்திரங்களை சமர்ப்பித்தல், அதற்காக அனுமதி பெற்றுக்கொள்ளுதல், அபிவிருத்தி நடவடிக்கைகளின் மேற்பார்வை மற்றும் முன்னேற்றம் ஆராய்தல் இவற்றுக்கிடையில் முக்கியமான பணிகளாகும். 101 அமைச்சரவை பத்திரங்கள் 2024.12.31 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 93 பத்திரங்களின் பொருட்டு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. 08 அமைச்சரவை பத்திரங்களுக்கு அனுமதி கிடைக்கப் பெறவுள்ளது.

- ஏனைய நிரல் வரிசை அமைச்சுகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட 23 அமைச்சரவை பத்திரங்களுக்கு அவதானிப்புகள் முன்வைக்கப்பட்டுள்ள.

- 2023 ஆம் ஆண்டின் செயலாற்றுகையை மும்மொழிகளிலும் தயாரித்து பாராளுமன்றத்திடம் சமர்ப்பித்தல்

- 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயற்றிட்டத்தை தயாரித்து தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய வரவு செலவு திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல்

- 2024 ஆம் ஆண்டுக்கான அமைச்சின் முன்னேற்ற அறிக்கை மற்றும் 2025 ஆம் ஆண்டுக்கு எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடக்கிய, வரவு செலவு செயற்குழு சந்தர்ப்பம் பொருட்டு தயாரிக்கப்படும் அறிக்கையை பாராளுமன்றத்திடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்

- முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்தல். மாதாந்த/மும்மாத/வருடாந்த முன்னேற்ற மீளாய்வு அறிக்கைகளை தயாரித்தல், முன்னேற்றம் தொடர்பாக மீளாய்வு செய்தல், தொடர்புடைய நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல்

## 1.3.2 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

| | கருத்திட்டத்தின் பெயர் | நிதி ஆதாரம் | நடைமுறைப்படுத்தும் நிறுவனம் | திருத்தம் செய்யப்பட்ட மதிப்பீடு | 2024.12.31 ஆம் திகதியில் செலவினம் |
|---|---|---|---|---|---|
| 1 | துறைமுக நுழைவாயில் அதிவேக விமான வீதி கருத்திட்டம் வேலைதளங்களை மீள்தாபித்தல்) | ADB | இலங்கை துறைமுக அதிகார சபை | ரூபா.மில் 2,039 | ரூபா.மில் 1,659 |
| 2 | காங்கேசன்துறை துறைமுகத்தின் மறுசீரமைப்ப கருத்திட்டம் | Exim Bank India | இலங்கை துறைமுக அதிகார சபை | ரூபா.மில் 18,326.9 | ரூபா.மில் 197.48 |

### 1.3.3 கொள்முதல் பிரிவின் முன்னேற்ற அறிக்கை (துறைமுக) 2024.01.01 – 2024.12.31

| **நிறுவனம்** | **பெறுகை/ செய்திட்டம்** | **பெறுகை செயன்முறை** | **ஒப்பந்தத்தின் ஆகுசெலவு / பெறுமதி வட் இன்றி (ரூபா.மில்லியன்)** |
|---|---|---|---|
| வணிக கப்பற் செயலகம் | இலங்கைக் கொடியின் கீழ் கப்பல்களை பதிவுசெய்வதை ஊக்குவித்தல் | விலை மனுக்கோரல் (ICB) | எழவில்லை |
| இலங்கை துறைமுக அதிகாரசபை | கிழக்கு கொள்கலன் முனையத்தில் பொருத்தப்பட்டுள்ள கப்பலிலிருந்து கரைவரை இயக்கங்களை முன்னெடுக்கின்ற பாரந்தூக்கிகள் (STS Cranes) மூன்றினை (03) (J-17,J-18,J-19J) ஜய கொள்கலன் முனையம் - V இற்கு கொண்டு செல்லல் | விலை மனுக்கோரல் (ICB) | அமெரிக்க டொலர் 1,220,000+ இலங்கை ரூபா 379,791,823.53( exch.rate 1 USD= இலங்கை ரூபா.321.94865 விலைமனு திறக்கும் திகதிக்கு) ஒப்பந்தத்தின் ஆகுசெலவு இலங்கை ரூபா.772,569,176.53<br><br>**மொத்த பெறுமதி - ரூபா. மில்லியன் 772.569** |
| | கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தின் கட்டம் II – மேடைப் பிரதேசத்தின் மண்ணை இறுக்கி அழுத்தி அபிவிருத்தி செய்யும் எதிர்பாராத மேலதிகப் பணிகளை நிறைவேற்றுதல் - சிவில் வேலைகள் | ஏனைய (தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரரிடமிருந்து பிரேரணைகள் கிடைத்துள்ளன) | இலங்கை ரூபா. 611,010,653.748<br>**மொத்த பெறுமதி - ரூபா. மில்லியன் 611.010** |
| வ/ப இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் | 2023-2024 வரையிலான ஆண்டினுள் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்குரிய உலர் தொகை போக்குவரத்து கலங்களை சேவையில் ஈடுபடுத்துதல் | விலை மனுக்கோரல் (ICB) | வாடகை அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள பெறுமதி தினமொன்றிற்கு ஒரு கப்பல் தொடர்பில் **அமெரிக்க டொலர். 18,217/-** |

## 1.4 கணக்காய்வுப் பிரிவு

### 1.4.1 நிறைவேற்றிய பிரதான கடமைப்பொறுப்புகள்

- வீண்விரயம் மற்றும் குறைபயன்பாடுகளை தவிர்த்தல், வெளிப்படுத்திக் கொள்வதற்காக நடைமுறைப்படுத்தப்படும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் திருப்திகரமான தன்மையை மதிப்பிடல்
- வேலைகளை நடைமுறைப்படுத்துவதற்கு காரணமாக அமையும் பிரச்சினைகளை அடையாளம் காணுதல் மற்றும் அதற்கு தீர்ப்புகளை கண்டறிதல்
- சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் சிக்கனத்துடன் பயன்படுத்தப்படுகின்றதா என பரிசோதனை செய்தல்
- சொத்துக்களை பாதுகாப்பதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை மதிப்பிடல்
- பணிற்றொகுதியின் செயலாற்றுகையில் பண்புசார் தன்மையினை மதிப்பிடல்
- உள்ளக பரிசோதனைகள் மற்றும் நிருவாக முறை வெற்றிகரமாக திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுகின்றதா என்று கண்டறிதல்
- பயன்படுத்தும் கணக்கு முறைமூலம் சரியான நிதிக் கூற்றுகள் தயாரிப்பதற்கு தேவையான தகவல்கள் உள்ளதா என்று கண்டறிதல்
- கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டங்களை நடாத்தல், அதன் அறிக்கைகளை சம்பந்தப்பட்ட பிரிவுகளிடம் அனுப்பி வைத்தல்
- வேலை பிரேரணை முறை மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்
- கணக்கு மற்றும் ஏனைய அறிக்கைகளில் நம்பிக்கைத் தன்மையை தீர்மானித்தல்
- தாபன விதிக் கோவை, நிதி ஒழுங்குவிதி, ஏனைய சுற்றுநிருபங்களின் ஆலோசனைகள் என்பவற்றை பின்பற்றப்படுகின்றதா என்று கண்டறிதல்
- தேவையான சந்தர்ப்பங்களில் விசேட ஆய்வுகளை நடாத்தல்.

### 1.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நடாத்தல் தொடர்பான விபரங்கள்

| கூட்ட அமர்வு | திகதி | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| முதலாவது | 2024.02.28 | 2024.06.19 |
| இரண்டாவது | 2024.06.26 | 2024.10.24 |
| மூன்றாவது | 2024.10.29 | ஆம் திகதியில் தயாரிக்கப்படுகிறது. |

### 1.4.3 காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட திகதிகள்

| காலாண்டு | திகதி |
|---|---|
| முதலாவது | 2024.04.19 |
| இரண்டாவது | 2024.07.15 |
| மூன்றாவது | 2024.10.14 |
| நான்காவது | திகதியில் தயாரிக்கப்படுகிறது. |

### 1.4.4 2024.12.31 ஆம் திகதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு உசாவுதல்

| இலக்கம் | சமர்ப்பிக்கப்பட் கணக்காய்வு உசாவுதல் தொடர்பான விபரங்கள் | | |
|---|---|---|---|
| | திகதி | விடயம் | நிறுவனம் |
| 01 | 2024.02.02 | விமானநிலைய சேவைகளின் அதிகாரி பதவிக்கு தரமுயர்த்துவதற்காக நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் நிகழ்ந்ததாக குறிப்பிடப்படும் ஊழல்கள் தொடர்பில், மேற்கொண்ட உள்ளக கணக்காய்வு விசாரணை அறிக்கை (விசேட புலனாய்வு) | விமான நிலைய மற்றும் விமான சேகைள் (இலங்கை) தனியார் கம்பெனி |
| 02 | 2024.02.21 | இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தால் ‘‘கொள்முதல் செயற்பாட்டின் போது மேற்கொண்ட தொடர்பின் இசைவு தன்மை’’ என்ற தலைப்பில் முன்வைக்கப்பட்டுள்ள மனு தொடர்பில் நடாத்திய உள்ளக ஆய்வ அறிக்கை (விசேட புலனாய்வு) | இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை |
| 03 | 2024.03.14 | தீயணைப்பு பிரிவு தலைவர் பதவிக்கான பெயர் பட்டியலில் தகுதியற்றவர்களை சேர்த்தல் தொட்பாக, பாதிக்கப்பட்ட காத்திருப்புப் பட்டியலின் நபர்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் தெடர்பில் மேற்கொண்ட உள்ளக கணக்காய்வு விசாரணை அறிக்கை (விசேட புலனாய்வு) | விமான நிலையம் மற்றும் விமான சேவகள் (இலங்கை) தனியார் கம்பெனி |
| 04 | 2024.03.28 | விமான நிலையம் மற்றும் விமான சேவகள் (இலங்கை ) தனியார் கம்பெனியின் விமான நிலைய சேவை அதிகரி பதவியில் தரம் உயர்த்துதல் தொடர்பான கணக்காய்வு அறிக்கை | விமான நிலையம் மற்றும் விமான சேவகள் (இலங்கை) தனியார் கம்பெனி |
| 05 | 2024.03.28 | விமான நிலையம் மற்றும் விமான சேவகள் (இலங்கை) தனியார் கம்பெனியின் தீயணைப்பு பிரிவுகளின் தலைவர் பதவிக்கு பதவி உயர்த்துதல் தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வு விசாரணை அறிக்கை | விமான நிலையம் மற்றும் விமான சேவகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | (இலங்கை) தனியார் கம்பெனி |
| 06 | 2024.04.29 | அலுவலர்கள் குழுவால் நிறுவனத்தின் பொறுப்புகளை கவனத்தில் கொள்ளாது, தமது தற்றுணிப்பின் படி Dev Marine Agencies (Pvt) Ltd நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைகளை பிற மூன்றாவது தரப்பு நிறுவனத்திடம் அனுப்பி வைக்கப்படுதல் தொடர்பில் மேற்கொண்ட முறைப்பாடுகளுக்கமைவாக மேற்கொண்ட விசாரணை அறிக்கை (விசேட புலனாய்வு) | வணிக கப்பல் செயலகம் |
| 07 | 2024.06.05 | நிருவாகப் பிரிவில் சுயவிபரக் கோவைகள் தொடர்பில் மேற்கொண்ட உள்ளக கணக்காய்வு விசாரணை அறிக்கை | துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சு |
| 08 | 2024.06.20 | மத்திய சமயலறை பிரிவிடம் அரிசி வழங்குதல் தொடர்பில் ஸ்ரீ ஜய ட்ரேடர்ஸ் நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வு விசாரணை (விசேட புலனாய்வு) | இலங்கை துறைமுக அதிகார சபை |
| 09 | 2024.07.05 | துறைமுக ஊழியர்களின் பாதுகாப்பை கவனத்தில் கொள்ளாது கேள்வி நடைமுறை மீறப்பட்டு, பாதுகாப்பு பாதணிகள் கொள்வனவு செய்வதனை தவிர்க்குமாறு முன்வைக்கப்பட்ட வேண்டுகோள் தொடர்பில் மேற்கொண்ட கணக்காய்வு விசாரணை அறிக்கை (விசேட புலனாய்வு) | இலங்கை துறைமுக அதிகார சபை |
| 10 | 2024.08.09 | 2023.12.31 ஆம் திகதியில் இறுதி நிதி ஆண்டுக்கு ஏற்புடையதாக பொருட் மீளாயவு தொடர்பான உள்ளக கணக்காய்வு அவதானிப்பு அறிக்கை | துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சு |
| 11 | 2024.09.30 | வணிக கப்பற் செயலகத்தின் கொடுப்பனவு வவுச்சர் தொடர்பாக மேற்கொண்ட உள்ளக கணக்காய்வு அறிக்கை | வணிக கப்பல் செயலகம் |
| 12 | 2024.12.30 | 2024 ஆம் ஆண்டில் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் செயலாற்றுகை தொடர்பாக உள்ளக கணக்காய்வு அவதானிப்பு அறிக்கை | இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை |

# 1.5 விமான சேவை பிரிவு

## 1.5.1 கடமைகளும் முன்னேற்றமும்

- சர்வதேச மற்றும் உள்நாட்டு விமான நிலையங்களின் அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறை செயற்பாடுகள்.
- விமான நிலையங்களால் வழங்கப்படும் சேவைகளின் கட்டணங்கள் மற்றும் தரத்தை ஒழுங்குபடுத்துதல்.

- இலங்கையில் வெளிநாட்டு செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக ஏனைய நாடுகளுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்வதில் பின்தொடர்தல் நடவடிக்கைகள்.
- இலங்கை விமான நிலையங்களை வேறு அரசாங்கங்கள் பயன்படுத்துவதை ஊக்குவித்து ஒழுங்குபடுத்துதல்.
- விமான சரக்கு ஏற்றுமதியை விரிவுபடுத்துதல்.
- உள்நாட்டு விமானங்களை ஊக்குவித்தல்.
- தனியார் விமான நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதல்.
- விமானப் பதிவுகளை செயன்முறைப்படுத்தல்.
- இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை (CAASL), வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீலங்கா) (தனியார்) நிறுவனம் (AASL), வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் (SLA) மற்றும் அதன் துணை நிறுவனங்களின் கீழ் விமானப் போக்குவரத்து தொடர்பான விடயங்களைச் செயன்முறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல்.

## 1.5.2 இருதரப்பு உறவுகள்

### 1.5.2.1 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்

✓ 2024 ஜனவரி 29 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம், 1950 02.24 ஆந் திகதி நடைமுறைக்கு வந்த உறுப்புரை 23 இன் படி இலங்கை அரசுக்கும் தாய்லாந்து அரசுக்கும் இடையேயான திருத்தப்பட்ட விமான சேவைகள் ஒப்பந்தத்தில் (ASA) கையொப்பமிடுவதற்கான இணக்கத்தையும் அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தம் 2024.02.03 ஆந் திகதி ஒவ்வொரு தரப்புகளினதும் அங்கீகாரம் பெற்ற உறுப்பினர்களால் கைச்சாத்திடப்பட்டது.

✓ விமான போக்குவரத்து உடன்படிக்கையில் திருத்தங்கள் தொடர்பான இலங்கை அரசாங்கத்திற்கும் இஸ்ரேல் அரசாங்கத்திற்கும் இடையிலான நெறிமுறை 2024 பெப்ரவரி 15ஆந் திகதி கொழும்பில் இரு தரப்புகளின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளின் பங்கேற்புடன் கைச்சாத்திடப்பட்டது.

✓ 2013.11.26 ஆந் திகதி நடைமுறைக்கு வந்த இரு நாடுகளுக்கிடையிலான உடன்படிக்கையின் கீழும், 2007.02.07 அன்று கன்பெர்ராவில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழும் இலங்கை அரசாங்கத்திற்கும் அவுஸ்திரேலியா அரசாங்கத்திற்கும் இடையில் கலந்துரையாடல் பதிவு 2024.02.07 ஆந் திகதி மெய்நிகராக கைச்சாத்திடப்பட்டுள்ளது.

### 1.5.2.2 விமான நிறுவனங்களை பெயரிடல்

✓ ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் மற்றும் எதிஹாட் ஏர்வேஸ் ஆகியவை தற்காலிகமாக அபுதாபி வழியாக கொழும்பு மற்றும் மொஸ்கோ இடையே கோரப்பட்ட வர்த்தக ஏற்பாட்டினை செய்ய (codeshare) கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன.

- ✓ ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் மற்றும் கத்தார் ஏர்வேஸ் ஆகியவை தற்காலிகமாக டோஹா வழியாக கொழும்பு மற்றும் மொஸ்கோ இடையே கோரப்பட்ட வர்த்தக ஏற்பாட்டினை செய்ய (codeshare) கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன.

- ✓ ரஷ்யா - இலங்கை இருதரப்பு விமான சேவைகள் ஒப்பந்தத்தின் உறுப்புரை 04 இற்கு அமைவாக, ரஷ்ய கூட்டமைப்பில் உள்ள பல நகரங்களில் பயணிகள், பொதிகள், சரக்கு மற்றும் அஞ்சல் ஆகியவற்றின் போக்குவரத்துக்கான வழக்கமான சர்வதேச விமான நடவடிக்கைகளை மேற்கொள்ள ‘Azur Air’ நியமிக்கப்பட்டது.

- ✓ இலங்கை மற்றும் ஈரான் அரசாங்கங்களுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட விமான சேவைகள் உடன்படிக்கை (ASA) மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஆகியவற்றின் படி விசேட மற்றும் சரக்கு விமான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஈரான் Airtour அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- ✓ கொழும்பில் இருந்து மாலைத்தீவுக்கு (சரக்கு செயற்பாடுகள்) இந்தோனேசியப் பதிவு செய்யப்பட்ட விமானச் சேவை நிறுவனமான BBN ஏர்லைன்ஸின் செயற்பாடுகள் 2024 நவம்பர் 30 வரை (ஒரு நாளைக்கு ஒரு விமானம், ஒரு விசேட விமான சேவைத் திட்டம்) விமானங்களை செயற்படுத்தியது.

### 1.5.2.3 விமான வழிகள் மற்றும் ஐந்தாவது சுதந்திர உரிமைகள்

- ✓ கொழும்பு மற்றும் சீனாவில் உள்ள இடங்களுக்கு இடையில் ஏர் சீஷெல்ஸின் வான் சுதந்திரத்திற்கான அங்கீகாரம். இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான தற்காலிகமாக கொழும்பு வழியாக 05வது சுதந்திர போக்குவரத்து உரிமைகள்.

- ✓ மொஸ்கோ - கொழும்பு வழித்தடம் மற்றும் எதிர்மாறாகவும் Rossiya Airlines (செயற்படுத்தல் பங்குதாரர்) மற்றும் Aeroflot Russian Airlines (சந்தைப்படுத்தல் பங்குதாரர்) ஆகியவற்றுக்கான கோரப்பட்ட வர்த்தக ஏற்பாட்டினை செய்ய (codeshare) இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

- ✓ துருக்கி ஏர்லைன்ஸுக்கு MLE - CMB v.v துறையில் தற்காலிகமாக ஐந்தாவது சுதந்திர போக்குவரத்து உரிமைகள் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- ✓ இலங்கை அரசாங்கத்திற்கும் ரஷ்ய அரசாங்கத்திற்கும் இடையிலான விமான சேவைகள் ஒப்பந்தத்தின் பிரிவு 3 இற்கு அமைவாக, JSC ரெட் விங்ஸ் (ரெட் விங்ஸ் ஏர்லைன்ஸ்) ரஷ்யாவில் உள்ள 13 வெவ்வேறு வழித்தடங்களில் வாரத்தில் 3,6மற்றும் 7 விமானப் பயணங்கள் பயணிகள், பொதிகள், சரக்குகள் மற்றும் அஞ்சலுக்கான திட்டமிடப்பட்ட சர்வதேச விமான சேவைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளது.

- ✓ Gulf Air செயற்பாடுகளுக்கு ஆடுநு - CMB v.v துறையில் தற்காலிகமாக ஐந்தாவது சுதந்திர போக்குவரத்து உரிமைகள் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- ✓ JSC ரெட் விங்ஸ் (ரெட் விங்ஸ் ஏர்லைன்ஸ்) மூலமான வழக்கமான சர்வதேச விமானங்கள் செயற்படுத்தல், மினரல்னி வோடி-மத்தளை இடையேயான பாதை

வழியாக பயணிகள், சரக்கு, பொதிகள் மற்றும் அஞ்சல் ஆகியவற்றிற்கு வழக்கமான சர்வதேச விமான சேவைகளை வாரத்திற்கு 7 விமானப் பயணங்களுடன் நடத்த நியமிக்கப்பட்டுள்ளது.

### 1.5.2.4 உடற்கூற்றை அடிப்படையாக கொண்ட தனிப்பட்ட தரவுகளின் சேகரிப்பு

- ✓ வெளிநாட்டு பிரஜைகள் மற்றும் நாடற்ற நபர்களின் நுழைவு மற்றும் வெளியேறுதலை நிர்வகிக்கும் விதிகள் மற்றும் நிபந்தனைகளை பரிசோதிக்க ரஷ்ய அதிகாரிகள் ஒரு பரிசோதனையை திட்டமிட்டனர்.

### 1.5.2.5 மியான்மருக்குள் நுழையும் பயணிகளுக்கான பொது சுகாதாரத் தேவைப்பாடுகள்

- ✓ மியான்மர் சுகாதார அமைச்சு அறிவித்தபடி, புதுடில்லியில் உள்ள மியான்மர் குடியரசின் தூதரகம், சர்வதேச விமான நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் எல்லை தாண்டிய நுழைவுப் புள்ளிகள் (PoEs) வழியாக மியான்மருக்குள் நுழைந்த பயணிகளுக்கான பொது சுகாதார தேவைப்பாடுகளை அனுப்பியது.

### 1.5.2.6 இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ஏழாவது சுற்று இருதரப்பு அரசியல் கலந்தாய்வுகள் (BPC)

- ✓ இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு விமான சேவைகள் ஒப்பந்தத்தை தொடர்ந்து, பயணிகள் சேவைகளின் பயணத் தடவைகள் மேம்பாட்டிற்காக முன்மொழியப்பட்ட / இலங்கைக்கான பாகிஸ்தான் ஏர்லைன் (PIA) விமானங்களை மீண்டும் தொடங்குவதற்கான கோரிக்கை / செயற்படுத்தல்களுக்காக மத்தளை சர்வதேச விமான நிலையத்திற்கு (MRIA) வழங்கப்பட்ட திறந்த வான் வெளியைப் பயன்படுத்துவதை பரிசீலிக்க பாகிஸ்தானை கோருதல் / விமானம் தொடர்பான பயிற்சி வசதிகளை பாகிஸ்தான் மாணவர்கள் பயன்படுத்தல் இலங்கை மற்றும் கராச்சி மற்றும் லாகூர் இடையே இணை முனைய உரிமைகளை உள்ளடக்குவதற்கான கோரிக்கை.

### 1.5.2.7 பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான (JCETC) இலங்கை துர்க்கி கூட்டு ஆணைக்குழுவின் 03வது கூட்டத்தொடர்

- ✓ பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான (JCETC) இலங்கை துர்க்கி கூட்டு ஆணைக்குழு என்பது ஒரு அமைச்சர்கள் மட்ட கூட்டமாகும். தற்போது இரு நாடுகளுக்கும் இடையேயான விமான சேவை உடன்படிக்கையின் (ASA) கீழ் பேச்சுவார்த்தைகளில் ஐந்தாவது சுதந்திர போக்குவரத்து உரிமைகள் தற்காலிகமாக அங்கீகரிக்கப்பட்டதுடன், சுங்க வரி விலக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### 1.5.2.8 ஆசிய பசிபிக் அமைச்சர் மட்ட மாநாடு (புது டில்லி 2024 செப்டம்பர் 11-12)

- ✓ சிவில் விமான சேவை தொடர்பான இரண்டாவது ஆசிய பசிபிக் அமைச்சர் மட்ட மாநாட்டிற்கு (புது டில்லி, இந்தியா, 11-12 செப்டம்பர் 2024) ICAO அழைப்பு

இலங்கையில் கிடைக்கப்பெற்றது. APMC 2024 இல் பங்கேற்க இலங்கையிலிருந்து இரண்டு பிரதிநிதிகள் பரிந்துரைக்கப்பட்டனர்.

**1.5.2.9 இணைப்பு தொடர்பான 3வது மற்றும் 4வது ஆசிய ஒத்துழைப்பு உரையாடல் செயற்குழுக் கூட்டம் - மெய்நிகர் முறையில்**

- ✓ ஆசிய ஒத்துழைப்பு உரையாடல் (ACD) இணைப்பிற்கான செயற்குழுவின் (WGC) ஆரம்பம் ACD புளூபிரிண்ட் 2021-2030 கட்டமைப்பிற்குள் உருவாக்கப்பட்டதுடன், இது 2021 நவம்பர் 17 ஏற்றுக்கொள்ளப்பட்டது. இணைப்பிற்கான செயற்குழுவின் (WGC) கலந்துரையாடல் மன்றத்தில் அமைச்சும் அதன் முகவர் அமைப்புகளும் பங்கேற்றன.

**1.5.2.10 இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் (FTA) பொருளாதார ஒத்துழைப்பு அத்தியாயத்தை நடைமுறைப்படுத்துதல்**

- ✓ வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் ஆகியவற்றின் முன்மொழிவுகள் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் சேர்க்கப்படுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

**1.5.2.11 இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை (SLTFTA) நடைமுறைப்படுத்துதல்**

- ✓ இலங்கையும் தாய்லாந்தும் இரு நாடுகளுக்கும் இடையே தடையின்றி விமானங்களை செயற்படுத்த அனுமதிக்கும் தற்போதைய இருதரப்பு விமான சேவைகள் ஒப்பந்தத்தின் (ASA) கீழ் திறந்த வான்வெளி ஒப்பந்தத்தை பேணுகின்றன. தற்போது, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் கொழும்பு மற்றும் பேங்கொக் இடையே வாராந்தம் 11 விமானங்களை செயற்படுத்துகிறது.
- ✓

**1.5.2.12 பூட்டானுக்கும் இலங்கைக்கும் இடையில் வெளியுறவு செயலாளர் மட்டத்தில் இருதரப்பு அரசியல் கலந்தாய்வுகளின் (BPC) இரண்டாவது சுற்று**

- ✓ இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு மற்றும் அரசியல் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் நவம்பர் மாதம் திம்புவில் இருதரப்பு அரசியல் கலந்தாய்வு (BPC) நிகழ்ச்சித்திட்டத்தின் 02வது சுற்று நடைபெற்றது.

**எதிர்கால இருதரப்பு பேச்சுவார்த்தை பிரதிநிதிகள் குழுவில் பின்பற்றப்படவுள்ள முக்கிய விடயங்கள்***

01. 2014 இல் கைச்சாத்திடப்பட்ட ஹங்கேரி அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான திருத்தப்பட்ட விமான சேவைகள் உடன்படிக்கையில் (ASA) கையொப்பமிடுவதற்கான புதிய அமைச்சரவை அனுமதியைப் பெறுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் (AGD) மீளாய்வு.

02. 2024.04.29 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் கசகஸ்தான் குடியரசிற்கும் இடையிலான இருதரப்பு விமான சேவைகள் உடன்படிக்கையைத் தொடங்குதல்.

03. விமான ஊர்திகளுக்கான மூன்றாம் தரப்பு வர்த்தக ஏற்பாட்டு (Codeshare) உரிமைகளைச் சேர்ப்பது தொடர்பாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையிடமிருந்து முறையான பரிமாற்றத்தை மீளாய்வு செய்தல்.

04. கொழும்பு மற்றும் சீனாவில் உள்ள முக்கிய இடங்களுக்கு இடையே ஏர் சீஷெல்ஸ் சுதந்திரத்திற்கான அங்கீகாரத்திற்காக இலங்கை அரசாங்கம் (இருதரப்பு குழு பேச்சுவார்த்தையாளர்கள்) இருந்து மீளாய்வு/இணக்கம்.

05. ரஷ்ய கூட்டமைப்புக்கும் இலங்கைக்கும் இடையே நேரடி விமான சேவையை மீண்டும் தொடங்குதல் மற்றும் ரஷ்ய கூட்டமைப்பின் Vnukovo சர்வதேச விமான நிலையத்திற்கு விமான நிகழ்ச்சித்திட்டத்தை தொடங்குதல்.

06. ஆர்மீனியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளுக்கு FITS Air ஐ நியமித்தல்.

07. மியான்மரில் உள்ள தொடர்புடைய இராஜதந்திர அமைப்புகளின் அங்கீகாரத்திற்குப் பின்னர் இலங்கைக்கும் மியான்மருக்கும் இடையிலான விமான இணைப்பைத் தொடங்குதல்.

08. துருக்கி அரசுக்கும் இலங்கைக்கும் இடையே 2008.12.02 அன்று கைச்சாத்திடப்பட்ட திருத்தப்பட்ட நெறிமுறை இருதரப்பு விமானப் போக்குவரத்து ஒப்பந்தத்தை முன்னெடுத்தல்.

09. குவாங்சூ சர்வதேச விமான நிலையத்திற்கும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கும் இடையில் விசேட விமானச் செயற்பாடுகளை ஆரம்பித்தல் (முன்மொழியப்பட்ட CAN – HRI – CAN இலிருந்து Hainan Airlines இன் செயற்பாடுகள்.

10. ஹங்கேரி அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான இருதரப்பு விமான சேவைகள் ஒப்பந்தத்தை முன்னெடுத்தல்.

11. இந்திய அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் செயற்படுத்தப்படும் விமான ஊர்திகளில் விமான பாதுகாப்பு முகவர்களை (Sky Marshalls) ஈடுபடுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (MoU) முன்னெடுத்தல்.

12. இலங்கைக்கும் கரீபியன் பிராந்தியத்திற்கும் இடையில் விமான இணைப்பை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்களைச் ஆராய்தல்

13. இந்தியாவுடனான தற்போதைய விமான சேவைகள் ஒப்பந்தத்தின் (ASA) கீழ் இலங்கையின் நியமிக்கப்பட்ட விமான நிறுவனமாக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸை மீண்டும் நியமித்தல்.

14. இலங்கை அரசாங்கத்திற்கும் எத்தியோப்பியாவிற்கும் இடையில் முன்மொழியப்பட்ட விமான இணைப்பு.

15. 2008 டிசம்பர் 2 அன்று கையொப்பமிடப்பட்ட இலங்கை அரசாங்கத்திற்கும் துர்க்கி அரசாங்கத்திற்கும் இடையிலான இருதரப்பு விமான சேவைகள் ஒப்பந்தத்தை (BASA) திருத்துவதற்கான நெறிமுறை.

16. இலங்கை மற்றும் ஆஸ்திரியா அரசாங்கங்களுக்கு இடையிலான விமான சேவைகள் உடன்படிக்கையை பின்பற்றி இலங்கைக்கும் ஸ்லோவேனியாவிற்கும் இடையில் விமான சேவைகளை ஆரம்பிப்பதற்கு வசதி செய்தல்.

17. ஜெட்ஸ்டார் ஏசியா ஏர்வேஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் ஸ்கூட் பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றை சிங்கப்பூரின் நியமிக்கப்பட்ட ஏர்லைன்ஸாக நியமிப்பதற்காக கோருதல்.

18. இலங்கையில் சுற்றுலாவை மேம்படுத்த ரஷ்ய விசேட விமானங்களுக்கான ஊக்கத்தொகை.

19. இலங்கை அரசுக்கும் பல்கேரியா அரசுக்கும் இடையே புதிய விமானப் போக்குவரத்து ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான முன்மொழிவு.

20. மாலைத்தீவு குடியரசுக்கும் இலங்கை ஜனநாயக குடியரசுக்கும் இடையே தேடல் மற்றும் மீட்பு (SAR) ஒப்பந்தம்.

21. 1996 இல் கையொப்பமிடப்பட்ட விமான சேவைகள் ஒப்பந்தத்தின் 15 வது பிரிவுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை திருத்துதல்.

***அனைத்து கோரிக்கைகளும் நிரல் அமைச்சிலிருந்து மேலும் முன்னேற்றத்திற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. * **

## 1.5.3 பாதுகாப்பு அனுமதி மற்றும் வெளிநாட்டு விடுமுறை அங்கீகாரம்

### 1.5.3.1 பாதுகாப்பு அனுமதிகள

| **ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட்** | | | | |
|---|---|---|---|---|
| **இல.** | **சேவை/ வகை** | **அனுமதிகளின் எண்ணிக்கை** | **அங்கீகாரம்** | **வேறு** |
| 01 | ஊழியர்கள் | 693 | 688 | நிராகரிக்கப்பட்டவை 05 |
| 02. | விமான ஊழியர்கள் | 45 | 45 | - |
| 03. | பிரதம விமானிகள்<br>கணிஷ்ட/ பயிற்சிபெறும் விமானிகள்<br>முதலாவது உத்தியோகத்தர் | 07<br>14<br>03 | 07<br>14<br>03 | -<br>-<br>- |
| **சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை** | | | | |
| 01. | விமானி | 210 | 757 | 2023 தாமதமான அனுமதிகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. |
| 02. | ஊழியர்கள் | 163 | | |

#### 1.5.3.2 வெளிநாட்டு விடுமுறை அங்கீகாரம

| ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் | | |
|---|---|---|
| விடுமுறை வகை | | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
| 01. | உத்தியோகபூர்வ கடமை பயணம் | 205 |
| **வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீலங்கா) (தனியார்) நிறுவனம்** | | |
| 01. | உத்தியோகபூர்வ கடமை பயணம் | 84 |
| 02 | தனிப்பட்ட பயணம் | 38 |
| **சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை** | | |
| 01. | உத்தியோகபூர்வ கடமை பயணம் | 36 |

### 1.5.4 கொள்முதல் பிரிவின் முன்னேற்ற அறிக்கை (விமான சேவை) – 01.01.2024 – 31.12.2024

கொள்முதல் குழுக்களின் பணிகளை ஒருங்கிணைத்தல், கொள்முதல் குழு கூட்டங்களை நடத்துதல், அமைச்சரவைப் பத்திரங்களை தயாரித்தல், அமைச்சரவை முடிவுகளைத் தெரிவித்தல் மற்றும் விமான சேவைத் துறை தொடர்பான கொள்முதல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான பின்தொடர்தல்களை செய்தல். (2024 ஆம் ஆண்டு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கொள்முதல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களின் எண்ணிக்கை கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது).

| | நிறுவனம் | SCAPC | MPC | CANC | CPCM | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| 01 | இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை | - | - | - | - | - |
| 02 | வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீலங்கா) (தனியார்) நிறுவனம் | 18 | 20 | 06 | 01 | 05 |
| 03 | வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் | 28 | 28 | - | - | - |

மேற்கூறிய 03 நிறுவனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பின்வரும் கொள்வனவுகள் மற்றும் கருத்திட்டங்களுக்கு 2024 ஆம் ஆண்டு சம்பந்தப்பட்ட கொள்முதல் குழுக்கள் மற்றும் அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

| கொள்முதல் / கருத்திட்டம் | கொள்முதல் முறைமை | ஒப்பந்த செலவு /பெறுமதி (ரூ. மில்.) |
|---|---|---|
| **வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீலங்கா) (தனியார்) நிறுவனம்** | | |
| புறப்படும் பயணிகள், செக்-இன் (Check-In) மற்றும் செட்டலைட் போர்டிங் வாயில்கள் (Satellite Boarding Gates) தொகுதி 02 இற்கான கொள்ளளவை மேம்படுத்துவதற்காக புதிய கட்டிடங்களை நிர்மாணித்தல், புறப்படும் பகுதி பொதி கையாளுகை சுழற்சி இயந்திரம் மற்றும் இணைந்த சிவில் பணிகளுக்கான மீளொழுங்குபடுத்தல், புதுப்பித்தல், விரிவாக்கம். | விலைமனு கோரல் (சர்வதேச போட்டித்தன்மையான விலைமனு) | 852.2 |
| பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தித் திட்டம் பகுதி II கட்டம் 2 தொடர்பான பிரதான முனைய கட்டிடம் (MTB), பையர் 2 மற்றும் பையர் 3 இல் வேலைப் பரப்பை அடையாளங் காணல்- பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க. | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 3255.5 |
| நிர்மாணித்தல், செயற்படுத்தல் மற்றும் உரிமை மாற்றுதல் (BOT) அடிப்படையில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் (BIA) பல அடுக்கு வாகனத் தரிப்பிடம் மற்றும் வர்த்தக இடத்தை நிர்மாணித்தல் | முன்மொழிவுக்கான கோரிக்கை | ஐ,அ. டொலர் 50 மில்லியன் |
| கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் (BIA) வருகைக்கு பிந்திய சுங்கப் பகுதியில் நாணய மாற்று கருமபீடங்களின் செயற்பாடு. | விலைமனு கோரல் (வரையறுக்கப்பட்ட தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 3259.1 |
| கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் (BIA) புறப்பாடு நடைபாதை பகுதியில் நாணய மாற்று கருமபீடங்களின் செயற்பாடு. | விலைமனு கோரல் (வரையறுக்கப்பட்ட தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 2337.5 |
| கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வருகைதரும் பொது வாயிற்கூடப்பகுதியில் பயணச் சேவை கருமபீடங்களை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டித்தன்மையான விலைமனு கோரல் | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 664 |
| கட்டுநாயக்கா, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்பாடு/இடைமாறல் பகுதியில் தேயிலை கடைகளை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டித்தன்மையான விலைமனு கோரல் | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 631.2 |
| கட்டுநாயக்கா, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வருகை முனையம் மற்றும் அதன் வளாகத்திற்கான துப்புரவு மற்றும் சுத்தம் செய்யும் சேவைகளை வழங்குதல் | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 323.3 |

| | | |
|---|---|---|
| கட்டுநாயக்கா, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்பாடு முனையம் மற்றும் அதன் வளாகத்திற்கான துப்புரவு மற்றும் சுத்தம் செய்யும் சேவைகளை வழங்குதல் | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 344.3 |
| கட்டுநாயக்கா, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வலையமைப்பு அடிப்படையிலான பொது முகவரி முறைமையை வழங்கல், நிறுவுதல், சோதனை செய்தல் மற்றும் ஆரம்பித்தல் | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 319.8 |
| கட்டுநாயக்கா, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் CCTV முறைமை மேம்பாட்டினை வழங்கல், நிறுவுதல், சோதனை செய்தல் மற்றும் ஆரம்பித்தல் | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 328.2 |
| கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வருகைதரும் பொது வாயிற்கூடப்பகுதியில் ஹோட்டல் சேவை கருமபீடங்களை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டித்தன்மையான விலைமனு கோரல் | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 248 |
| கட்டுநாயக்கா, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வருகைதரும் பொது வாயிற்கூடப்பகுதியில் மொபைல் தொடர்பாடல் சேவை கருமபீடங்களை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டித்தன்மையான விலைமனு கோரல் | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 370 |
| கட்டுநாயக்கா, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்பாடு/இடைமாறல் பகுதியில் மரமுந்திரி கடைகளை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டித்தன்மையான விலைமனு கோரல் | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 205 |
| கட்டுநாயக்கா, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்பாடு/இடைமாறல் பகுதியில் புதிய வியாபார முயற்சியை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டித்தன்மையான விலைமனு கோரல் | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 256.5 |
| கட்டுநாயக்கா, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்பாடு/இடைமாறல் பகுதியில் தனிப்பட்ட மற்று அழகு பராமரிப்பு கடைகளை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டித்தன்மையான விலைமனு கோரல் | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 367 |
| கட்டுநாயக்கா, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்பாடு/இடைமாறல் பகுதியில் தரச்சின்ன உதிரிப்பாகங்கள் கடைகளை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டித்தன்மையான விலைமனு கோரல் | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 118 |
| கட்டுநாயக்கா, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்பாடு/இடைமாறல் பகுதியில் மொபைல் தொடர்பாடல் சேவை கருமபீடங்களை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டித்தன்மையான விலைமனு கோரல் | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 218 |

| | | |
|---|---|---|
| கட்டுநாயக்கா, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்பாடு/இடைமாறல் பகுதியில் உள்நாட்டு உணவு மற்றும் குடிபான நிலையங்களை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டித்தன்மையான விலைமனு கோரல் | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 209 |
| கட்டுநாயக்கா, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்பாடு நடைபாதை பகுதியில் கைவினைப் பொருட்கள், கைத்தரிகள், பத்திக் மற்றும் ஆடை கடைகளை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டித்தன்மையான விலைமனு கோரல் | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 318 |
| கட்டுநாயக்கா, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்பாடு/இடைமாறல் பகுதியில் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண கடைகளை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டித்தன்மையான விலைமனு கோரல் | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 203 |
| **வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம** | | |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (AUH) அபுதாபி சர்வதேச விமான நிலையத்தில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸிற்கான பயணிகள் மற்றும் சாய்வுப் பேருந்து கையாளுதல் சேவை வழங்குநரைத் தேர்ந்தெடுத்தல் | நேரடி ஒப்பந்தம் | 787.48 |
| இந்தியாவின் மதுரை சர்வதேச விமான நிலையத்தில் (IXM) தரை கையாளுதல் முகவர் தேர்வு | விலைமனு கோரல் (வரையறுக்கப்பட்ட சர்வதேச விலைமனு) | 663 |
| லண்டன்-ஹீத்ரோ சர்வதேச விமான நிலையத்தில் (LHR), ஐக்கிய இராச்சியம்) பயணிகள், சாய்வுப் பேருந்து கையாளுகை முகவர் தேர்வு. | விலைமனு கோரல் (வரையறுக்கப்பட்ட சர்வதேச விலைமனு) | 3409 |
| ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் இணைக்கும் புள்ளி சேவைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட கையாளுதல் முகவரை நியமித்தல் | விலைமனு கோரல் (தேசிய போட்டித்தன்மையான விலைமனு) | 3340 |
| ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸிற்கான தானியங்கி இருக்கை மேம்படுத்தல் விலைமனுகோரல் சேவைகள் மற்றும் தொடர்புடைய துணை சேவைகளை வழங்குதல் | விலைமனு கோரல் (சர்வதேச போட்டித்தன்மையான விலைமனு) | 3662.18 |
| ஜப்பானின் டோக்கியோ-விமான நிலையத்தில் (NRT) தரை கையாளுதல் சேவை வழங்குநரைத் தேர்ந்தெடுத்தல் | நேரடி ஒப்பந்தம் | 1442.21 |
| புதுப்பிக்கப்பட்ட அணுகுமுறையுடன் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் விமான பதிலீட்டு நடவடிக்கை (Re-fleeting) | குத்தகை | |
| சவுதி அரேபியாவில் உள்ள தம்மாம் (DMM), ஜித்தா (JED) மற்றும் ரியாத் (RUH) விமான நிலையங்களில் பயணிகள் மற்றும் சாய்வுப் பேருந்து கையாளும் சேவை வழங்குநரைத் தேர்வு செய்தல் | விலைமனு கோரல் (வரையறுக்கப்பட்ட சர்வதேச விலைமனு) | 2043.87 |
| குவாங்சு விமான நிலையத்தில் (CAN) தரை கையாளுதல் சேவை வழங்குநரைத் தேர்ந்தெடுத்தல் | விலைமனு கோரல் (வரையறுக்கப்பட்ட சர்வதேச விலைமனு) | 1001.29 |

| | | |
|---|---|---|
| ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தொகுதிக்கு அதிவேக செயற்கைக்கோள் இணைய இணைப்பு தீர்வை வழங்குதல் | நேரடி ஒப்பந்தம் | 1658.88 |
| உலகெங்கிலும் உள்ள 04 இடங்களில் (விமான நிலையங்கள்) ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸிற்கான விமான எரிபொருள் கொள்முதல் | விலைமனு கோரல் (வரையறுக்கப்பட்ட சர்வதேச விலைமனு) | 35,973 |
| A320 விமானத்தின் குத்தகை நீடிப்பு (MSN 4694 | குத்தகை | |
| கன்டனில் விமானிகள் மற்றும் விமான ஊழியர்களுக்கு ஹோட்டல் தங்குமிட வசதி மற்றும் போக்குவரத்து வசதி வழங்குதல் | விலைமனு கோரல் (சர்வதேச போட்டித்தன்மையான விலைமனு) | 307 |
| ஜித்தாவில் விமானிகள் மற்றும் விமான ஊழியர்களுக்கு ஹோட்டல் தங்குமிட வசதி மற்றும் போக்குவரத்து வசதி வழங்குதல் | விலைமனு கோரல் (சர்வதேச போட்டித்தன்மையான விலைமனு) | 464 |
| நரிட்டா விமானநிலையத்தில் (NRT) உணவு மேம்பாட்டிற்காக உணவு வழங்குபவரைத் தேர்ந்தெடுத்தல் | விலைமனு கோரல் (சர்வதேச போட்டித்தன்மையான விலைமனு) | 353 |
| பெரிஸில் விமானிகள் மற்றும் விமான ஊழியர்களுக்கு ஹோட்டல் தங்குமிட வசதி மற்றும் போக்குவரத்து வசதி வழங்குதல் | விலைமனு கோரல் (சர்வதேச போட்டித்தன்மையான விலைமனு) | 441 |
| ஜேர்மனி பிராங்பர்ட் சர்வதேச விமானநிலையத்தில் (FRA) உணவு மேம்பாட்டிற்காக உணவு வழங்குபவரைத் தேர்ந்தெடுத்தல் | விலைமனு கோரல் (சர்வதேச போட்டித்தன்மையான விலைமனு) | 285 |
| ஒரு கனரக பராமரிப்பைச் செய்ய தகுதிவாய்ந்த பராமரிப்பு பழுதுபார்க்கும் நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்தல் | முன்மொழிவுக்கான கோரிக்கை | 345 |
| ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸிற்கான Trent 700 இயந்திரத்தை (ESN 41109) பழுதுபார்ப்பதற்காக ஒரு திறமையான பராமரிப்பு பழுதுபார்ப்பு அமைப்பை (MRO) தெரிவு செய்தல் | முன்மொழிவுக்கான கோரிக்கை | 365 |
| ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸிற்கான Trent 700 இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்காக ஒரு திறமையான பராமரிப்பு பழுதுபார்ப்பு அமைப்பை (MRO) தெரிவு செய்தல் | முன்மொழிவுக்கான கோரிக்கை | 450 |

# பகுதி II

# 2. வணிகக் கப்பற் செயலகம்


வணிகக் கப்பல் செயலகமானது, கடலில் செல்கின்ற உயிர்களினதும் ஆதனங்களினதும் பாதுகாப்பை உறுதி செய்தல், கப்பற்றுறைக் கல்வி, பயிற்சி, பரீட்சை நடாத்திய பின்னர் மதிப்பிடப்பட்டு சான்றிதழ்களை வழங்குதல், இலங்கை தேசியக் கொடியின் கீழ் கப்பல்களைப் பதிவு செய்தல், கப்பல் முகவர்களுக்கும், கொள்களன் நிலைய இயக்குனர்களுக்கும் மற்றும் கொள்களன் கப்பற்சரக்கு நிலையங்களுக்கும், கப்பற்சரக்கு காவுனர்களுக்கும் அல்லது கப்பல் இயக்காமல் பொதுப் போக்குவரத்தில் ஈடுபவோர்களுக்கும் உரிமம் வழங்குதல் அத்துடன் ஏற்புடைய சகல தேசிய மற்றும் சர்வதேச கடற்றுறை உடன்படிக்கைகள், தேசிய ஒழுங்குவிதிகள் என்பவற்றின் ஏற்பாடுகளை அமுல்படுத்தல் என்பன பிரதான செயற்பாடுகளாகும். இலங்கையில் வணிகக் கப்பல் செயலகம் அதன் அதிகப்படியான பொறுப்புக்களை நிறைவேற்றுவதால், அது அரசாங்கத்தின் கப்பற்றுறைப் பாதுகாப்புக் கொள்கையை விருத்தி செய்து அமுல்படுத்துகின்றது.

## 2.1 தொழில்பாட்டு முன்னேற்றம்

### 2.1.1 சான்றிதழ் வழங்குதல் - 2024

#### 2.1.1.1 தொடர் தேர்ச்சி விடுகை சான்றிதழ்

| மாதம் | புதிய CDC எண்ணிக்கை | இற்றைப்படுத்திய CDC எண்ணிக்கை |
|---|---|---|
| சனவரி | 229 | 230 |
| பெப்ருவரி | 312 | 259 |
| மார்ச் | 255 | 217 |
| ஏப்ரல் | 227 | 183 |
| மே | 267 | 223 |
| யூன் | 249 | 216 |
| யூலை | 402 | 263 |
| ஆகஸ்ட் | 305 | 237 |
| செம்தெம்பர் | 187 | 252 |
| ஒக்டோபர் | 272 | 277 |
| நவம்பர் | 202 | 227 |
| திசெம்பர் | 386 | 234 |
| **மொத்தம்** | **3293** | **2818** |




ஆதாரம்: உள்ளக புள்ளிவிபரங்கள், வணிகக் கப்பல் செயலகம்

### 2.1.1.2 தேர்ச்சி சான்றிதழ்கள்/கண்காணிப்பில் ஈடுபடுத்திய சான்றிதழ்களின் எண்ணிக்கை

**I. கப்பல் பிரிவு**

| சான்றிதழ் வகை | வழங்கிய சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|
| கப்பற் தளபதி (வகுப்பு 1) | 28 |
| கப்பற் தளபதி அலுவலர் (வகுப்பு 2) | 36 |
| கப்பற் தளபதி அலுவலர் (வகுப்பு 3) | 85 |
| கப்பல் தளக் கண்காணிப்புச் சான்றிதழ்கள்( அலுவலர்/ அலுவலரல்லாத) | 915 |
| திறன் சான்றிதழ் | 393 |

ஆதாரம்: உள்ளக புள்ளிவிபரங்கள், வணிகக் கப்பல் செயலகம்

**II. பொறியியற் பிரிவு**

| சான்றிதழ் வகை | வழங்கிய சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|
| பிரதான பொறியியலாளர் | 30 |
| இரண்டாவது பொறியியலாளர் | 36 |
| மூன்றாவது பொறியியலாளர் | 84 |
| பொறியியல் கண்காணிப்புச் சான்றிதழ்கள்( அலுவலர்.'. அலுவலரல்லாத) | 223 |
| திறன் சான்றிதழ்கள் | 109 |

ஆதாரம்: உள்ளக புள்ளிவிபரங்கள், வணிகக் கப்பல் செயலகம்

## 2.2 கப்பல் துறை முகவர்கள், கொள்கலன் நிலைய தொழிற்பாட்டாளர்கள், கலங்கள் அல்லாத பொது தொழில்பாட்டுச் சுமைகாவிகள் ஆகியோருக்கு வருடாந்த உரிமப் பத்திரங்களை வழங்குதல் - 2024

| உரிமப் பத்திரங்களின் வகை | வழங்கிய உரிமப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கப்பல் துறை முகவர்கள் | 212 |
| கொள்கலன் நிலைய தொழிற்பாட்டாளர்கள் | 23 |
| கப்பற் சரக்குகளை கையாளுநர்கள், பொது தொழில்பாட்டுச் சுமைகாவிகள் | 476 |
| கப்பல் உரிமப் பத்திரங்கள் | 76 |
| கப்பல் கம்பெனிகளை இணைத்தல் | 563 |
| ஷிப்பிங் கம்பெனி வசூல் | 48 |

ஆதாரம்: உள்ளக புள்ளிவிபரங்கள், வணிகக் கப்பல் செயலகம்


## 2.3 கொள்கலன்களில் நிறை ஒப்பாய்வு செய்யும் சான்றிதழ்களை வழங்குதல - 2024

| உரிமப் பத்திரங்களின் வகை | வழங்கிய உரிமப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|
| வெஹி பிரிட்ஜ் பொருட்டு (Weigh Bridge) | 32 |
| பொருட் ஏற்றுமதியாளர்கள் (Shipper) | 66 |
| ப்ரய்முவர் (Prime Mover) | 03 |
| ட்ரேலர் (Trailer) | 05 |
| லொறி வண்டிகள் ( Lorry) | 01 |

ஆதாரம்: உள்ளக புள்ளிவிபரங்கள், வணிகக் கப்பல் செயலகம்

## 2.4 கடற்படை அடையாள ஆவணங்கள் (SID) வழங்கப்பட்டன. 2024

| மாதம் | அடையாள எண்ணிக்கை |
|---|---|
| சனவரி | 438 |
| பெப்ருவரி | 656 |
| மார்ச் | 528 |
| ஏப்ரல் | 389 |
| மே | 449 |
| யூன் | 340 |
| யூலை | 467 |
| ஆகஸ்ட் | 436 |
| செம்தெம்பர் | 239 |
| ஒக்டோபர் | 373 |
| நவம்பர் | 291 |
| திசெம்பர் | 307 |
| **மொத்தம்** | **4913** |




ஆதாரம்: உள்ளக புள்ளிவிபரங்கள், வணிகக் கப்பல் செயலகம்

## 2.5 வருமானக் கூற்று – 2024

வணிகக் கப்பல் செயலகத்தால் வழங்கப்படும் சேவைகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் பின்வருமாறாகும்.

| மாதம் | வருமானம் (ரூபா) |
|---|---|
| சனவரி | 17,135,845.30 |
| பெப்ருவரி | 16,824,472.29 |
| மார்ச் | 16,371,847.50 |
| ஏப்ரல் | 19,037,273.18 |
| மே | 15,129,792.54 |
| யூன் | 18,651,365.02 |
| யூலை | 21,989,226.08 |
| ஆகஸ்ட் | 14,105,702.98 |
| செம்தெம்பர் | 16,332,688.92 |
| ஒக்டோபர் | 12,142,363.70 |
| நவம்பர் | 24,588,016.18 |
| திசெம்பர் | 32,676,214.76 |
| **மொத்தம்** | **224,984,808.45** |

ஆதாரம்: உள்ளக புள்ளிவிபரங்கள், வணிகக் கப்பல் செயலகம்

## 2.6 பெற்றக்கொண்டுள்ள சாதனைகள்

### 2.6.1 மனித வளங்களின் அபிவிருத்தி

- 2024 ஆம் ஆண்டு சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரை வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 09 இற்காக 08 அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர்.
- 2024 ஆம் ஆண்டு சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரை உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 18 இற்காக நிறுவனத்தின் அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர்.

## 2.7 எதிர்கால திட்டங்கள்

- IMO மற்றும் ILO உடன்படிக்கைகள் பிரகாரம் உள்நாட்டு சட்டவிதிகளை தயாரித்தல் மற்றும் தேவைக்கேற்ப இற்றைப்படுத்தல்.
- ஈ -அரச கருத்திட்டம் நடைமுறைப்படுத்தல்
- இலங்கை கொடியின் கீழ் கப்பல் பதிவுகளை மேம்படுத்தல்
- வெளிநாட்டுக் கொடியுடன் கூடிய கப்பல்களில் பணியாற்றுவதற்கு, கடற்படையினறுக்கு தேவையான Equality Certificate வழங்குவதற்கு ஏற்ற வெளிநாட்டு அரசுகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடல்.

- கரையோர கடல்சார் நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதான ஒழுங்குவிதிகளை தயாரித்தல்.
- பொது மக்களின் பொருட்டு வெளிப்படைத் தன்மையுடன்கூடிய, வினைத்திறமையான சேவையினை வழங்குவதற்கு தர முறைமைகளை அறிமுகப்படுத்தல், இற்றைப்படுத்தல் மற்றும் மீள்கட்டமைத்தல்.
- கப்பற் துறையில் புதிய உளகலாவிய போக்குகளுக்கு தேவையான சட்டதிட்டங்களை தயாரித்தல்

## 2.8 செலவின அறிக்கை – 2024.12.31 ஆம் திகதியில

336 – கப்பற் வணிகச் செயலகம்

| செலவு விடயம் | உருப்படிகளின் விபரம் | மீள் திருத்தம் செய்யப்பட்ட மதிப்பீடு | மொத்த செலவினம் | செலவின சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| | **மீண்டுவருஞ் செலவினம்** | | | |
| | **ஆளுக்குரிய வேதனாதிகள்** | | | |
| 1001 | சம்பளம் மற்றும் வேதனம் | 32,000,000.00 | 31,663,380.74 | 99% |
| 1002 | மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் லீவு தின சம்பளம் | 1,500,000.00 | 1,131,668.44 | 75% |
| 1003 | ஏனைய படிகள் | 28,360,000.00 | 27,716,120.70 | 98% |
| | **பிரயாணச் செலவுகள்** | | | |
| 1101 | உள்நாட்டு | 500,000.00 | 102,615.00 | 21% |
| 1102 | வெளிநாட்டு | 2,200,000.00 | 1,336,128.76 | 61% |
| | **வழங்கல்** | | | |
| 1201 | எழுதகருவி பொருட்கள் மற்றும் அலுவலக தேவைகள் | 18,580,000.00 | 18,569,144.65 | 100% |
| 1202 | எரிபொருள் | 6,000,000.00 | 4,922,084.31 | 82% |
| 002 | எரிபொருள் படி | 4,000,000.00 | 3,989,308.03 | 100% |
| 009 | ஒதுக்கத்தின் வாகனங்களுக்கான எரிபொருள் | 1,500,000.00 | 781,051.28 | 52% |
| 010 | ஏனைய நடவடிக்கைகளுக்கான எரிபொருள் | 500,000.00 | 151,725.00 | 30% |
| 1203 | உணவு மற்றும் சீருடை | 100,000.00 | 12,000.00 | 12% |
| 002 | சீருடை | 100,000.00 | 12,000.00 | 12% |
| 1205 | ஏனைய | 200,000.00 | 195,914.20 | 98% |
| | **பராமரிப்பு செலவினம்** | | | |
| 1301 | வாகனங்கள் | 2,157,000.00 | 2,156,927.00 | 100% |
| 1302 | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 2,000,000.00 | 994,862.71 | 50% |
| 1303 | கட்டிடங்கள் மற்றும் நிருமாணிப்புகள் | 500,000.00 | 294,010.00 | 59% |
| 1304 | மென்பொருள் பராமரிப்பு | 4,800,000.00 | 4,754,431.71 | 99% |
| | **சேவைகள்** | | | |
| 1401 | போக்குவரத்து | 3,625,000.00 | 3,623,580.65 | 100% |
| 1402 | அஞ்சல் மற்றும் தொடர்பாடல் | 1,400,000.00 | 1,203,107.93 | 86% |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 9,220,000.00 | 8,403,724.48 | 91% |
| 1404 | வாடகை மற்றும் வரி | 23,900,000.00 | 23,887,884.23 | 100% |
| 1405 | துப்பரவு மற்றும் சுத்திகரிப்பு சேவைகள் | 3,000,000.00 | 3,000,000.00 | 100% |
| 1407 | பாதுகாப்பு சேவைகள் | 3,600,000.00 | 3,539,326.37 | 98% |
| 1409 | ஏனைய | 2,300,000.00 | 1,197,280.85 | 52% |
| 138 | இயந்திரங்கள் மற்றும் அலுவலக | 558,000.00 | 94,529.80 | 17% |

| | | | | |
|---|---|---|---|---|
| | உபகரண சேவைகள் | | | |
| 139 | வாகன காப்புறுதி | 260,000.00 | 258,050.23 | 99% |
| 140 | பல்வேறு சேவைகளின் செலவினம் | 1,000,000.00 | 844,700.82 | 84% |
| | **மாற்றுதல்** | | | |
| 1505 | பங்களிப்பு மற்றும் உதவுதொகை | 11,000,000.00 | 10,718,175.77 | 97% |
| 1506 | அரசாங்க ஊழியர்களுக்கான சொத்துக் கடன் | 300,000.00 | 264,987.60 | 88% |
| | **ஏனைய மீண்டுவருஞ் செலவினம** | | | |
| 1703 | அரச கரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தல | 100,000.00 | 63,000.00 | 63% |
| | **மீண்டுவருஞ் மொத்த செலவினம்** | | **149,655,806.10** | |
| | **மூலதன செலவினம்** | | | |
| | **மூலதன சொத்துக்களை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல்** | | | |
| 2001 | கட்டிடங்கள் மற்றும் நிருமாணிப்புகள் | 1,000,000.00 | - | 0% |
| 2002 | இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 200,000.00 | - | 0% |
| 2003 | வாகனங்கள் | 200,000.00 | 184,600.00 | 92% |
| | **மூலதன சொத்துக்களை கைப்பற்றுதல்** | | | |
| 2103 | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 20,575,000.00 | 20,574,167.45 | 100% |
| | **ஆற்றல் விருத்தி** | | | |
| 2401 | பதவியணி பயிற்சி | 600,000.00 | 470,770.00 | 78% |
| | **அனைத்து அலுவலர்களையும் இணைத்து, அரச கருத்திட்டம் தரிபத்தல்** | | | |
| 2106 | மென்பொருள் அபிவிருத்தி | 20,000,000.00 | - | 0% |
| | **மூலதன மொத்த செலவினம்** | | **21,229,537.45** | |
| | **மொத்த செலவினம்** | | **170,885,343.55** | |

# 3. இலங்கை துறைமுக அதிகாரசபை

இலங்கை துறைமுகங்களின் எதிர்காலம் தொடர்பில் கவனம் செலுத்தி சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்களை விரிவுபடுத்தும் சர்வதேச வர்த்தக உருவாக்கத்தை எதிர்பார்த்து, இலங்கை துறைமுக அதிகாரசபை அதன் உன்னத கொள்கலன் கேந்திரத்தளம் எனும் கருத்திலிருந்து விசேட உலகளாவிய சேவை வழங்கலின் கேந்திரத் தளமாக நகர்த்திச் செல்கின்றது. இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதாரம் அபிவிருத்தி செய்யப்படுதலிலான தேசிய மற்றும் சர்வதேச சிறந்த அனைத்து துறைகளினது செயற்பாடுகளை மேலும் முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு, சகல தகவலும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளும் சேவை வழங்கலை முறையான ஓட்டமாக வலுப்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை எதிர்பார்க்கின்றது.

# 1.1 அபிவிருத்தி கருத்திட்டங்கள்

## 1.1.1 கிழக்கு கொள்கலன் முனையம் - கட்டம் II

### 3.1.1.1 இலங்கை துறைமுக அதிகாரசபையின் கிழக்கு கொள்கலன் முனையத்திற்கான உபகரணங்களை கொள்வனவு செய்தல்

கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பாக கப்பலில் இருந்து கரைவரை இயக்கங்களை மேற்கொள்ளுகின்ற 12 பாரம் தூக்கிகளையும், புகையிரத பாதை மீது பொருத்தப்பட்ட 40 தன்னியக்க கென்றி பாரம்தூக்கிகளையும் மீள் திருத்தம் செய்வதற்கான ஒப்பந்தத்துக்கு ஒப்பந்ததாரரான Shanghai Zhenhua Heavy Industries Co Ltd. கம்பனியுடன் 2021.12.31 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது. இக்கால எல்லையினுள் நாட்டிலிருந்த பொருளாதார சிக்கல் காரணமாக இலங்கை வங்கியினால் முற்பணம் செலுத்துவது தாமதமாகியதால் மீள் திருத்தப் பணிகள் 2022.12.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை, முதல் தொகையில் கப்பலில் இருந்து கரைவரை இயக்கங்களை மேற்கொள்ளுகின்ற 06 பாரம் தூக்கிகளும், புகையிரத பீலி மீது பொருத்தப்பட்ட 20 கென்றி பாரம் தூக்கிகளும் கிடைத்துள்ளதோடு. இரண்டாவது பாரம்தூக்கித் தொகையாக (கப்பலில் இருந்து கரைவரை இயக்கங்கள் மேற்கொள்ளுகின்ற 03 பாரம் தூக்கிகளும் புகையிரத பீலி மீது பொருத்தப்பட்டுள்ள 06 தன்னியக்க பாரம்தூக்கிகளும்) 2025 சனவரி மாதத்தில் கிடைக்கவுள்ளதோடு மிகுதி மீள் திருத்தப்பட்ட அட்டவணைக்கு ஏற்ப 2025 நடுப்பகுதியில் கிடைக்கவுள்ளது. தற்போது கிடைத்துள்ள கப்பலில் இருந்து கரைவரை இயக்கங்களை மேற்கொள்ளுகின்ற பாரம் தூக்கிகளை பொருத்தும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதோடு, முன்னர் பாவிக்கப்பட்ட இறப்பர் டயர் பொருத்தப்பட்ட கென்றி பாரம் தூக்கிகள் மற்றும் பிறைம் மூவர் வண்டிகளுடன் தற்போதிருக்கும் மேடையில் கையாளல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கிழக்கு கொள்கலன் முனைய செய்திட்டத்தில் சிவில் வேலைகள் ஒப்பந்ததாரரினால் புதிய மேடையில் தன்னியக்க கென்றி பாரம்தூக்கிகள் தொடர்பாக புகையிரத பீலிகள் பொருத்தி முடிவடைந்ததன் பின் புகையிரத பீலி மீது பொருத்தப்பட்டுள்ள புதிய தன்னியக்க கென்றி பாரம் தூக்கிகள் பொருத்துதல் படிப்படியாக 2025 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2024.12.31 திகதிக்கு ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| **செய்திட்டத்தின் பெயர்** | **செய்திட்ட ஆகு செலவு (ரூ.மில்லியன்)** | **2024.12.31 திகதிக்கு ஒன்று திரட்டிய பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்** | |
|---|---|---|---|
| | | **பௌதீக முன்னேற்றம் %** | **நிதி முன்னேற்றம் (அ.டொ. மில்லியன்)** |
| கிழக்கு கொள்கலன் முனையம் உபகரணங்களை கொள்வனவு செய்தல் - கப்பலில் இருந்து கரைவரை இயக்கங்கள் மேற்கொள்ளுகின்ற 12 பாரம் தூக்கிகள் மற்றும் புகையிரத பீலி மீது பொருத்தப்பட்டுள்ள 40 தன்னியக்க பாரம் தூக்கிகள் | அமெரிக்க டொலர் 282 மில்லியன் | 89% (மீளமைக்கப்பட்ட 68%) | அமெரிக்க டொலர் 183.664 மில்லியன் |

**3.1.1.2 கிழக்கு கொள்கலன் முனையம் கட்டம் - II - சிவில் வேலைகள்**

| **இல** | **எதிர்பார்க்கும் முடிவு** | **பௌதீக முன்னேற்றம் (%)** | | |
|---|---|---|---|---|
| | | **2023 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னேற்றம்** | **2024 வருடத்தினுள் முன்னேற்றம்** | **2024 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னேற்றம்** |
| 1 | பொதுவான பொருட்கள் | 77% | 11% | 88% |
| 2 | அகழ்வு மற்றும் நிரப்புதல் | 67% | 12% | 79% |
| 3 | மேடைச்சுவரை நிர்மாணித்தல் | 19% | 42% | 61% |
| 4 | தரைப் பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கிரேன் பீம் பாரந்துாக்கின் பீம் (Beam) | 5% | 22% | 27% |
| 5 | தடுப்பு சுவரை நிர்மாணித்தல் | 0% | 0% | 0% |
| 6 | கொள்கலன் முனையத்தை நிர்மாணித்தல் | 8% | 23% | 31% |
| 7 | நீர் மற்றும் தீயணைப்பு சேவைகள் | 0% | 62% | 62% |
| 8 | மின்சார, தரவு மற்றும் தொடர்பாடல் தொகுதி | 2% | 19% | 21% |
| 9 | மழை நீர் வழிந்தோடுவதற்கான வாய்கால்களை நிர்மாணித்தல் | 6% | 18% | 24% |
| | **மொத்த முன்னேற்றம்** | **25%** | **20%** | **45%** |

**3.1.1.3 கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பாக இயக்கக் கட்டிடமொன்றினை நிர்மாணித்தல் - - சிவில் வேலைகள்**

அண்ணளவாக 4,500 சதுர மீட்டர் பரப்புடன் கூடிய நான்கு மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்றாகும். ரூபா 499 மில்லியன் டென்டரை ASSET –AMSK கூட்டு வியாபாரத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் நிர்மாணப்பணிகள் 2023 ஜூன் 21 ஆம் திகதி பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, சுமார் 97% பணிகள் பூர்த்திசெய்யப்பட்டு செய்திட்டம் பூர்த்தியாகும் மட்டத்தில் உள்ளது. கூரையின் மொட்டை மாடியின் எஞ்சிய வேலைகள் நடைபெறுகிறது.

**3.1.1.4 கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பாக இயக்கக் கட்டிடமொன்று நிர்மாணித்தல் - பூர்த்திசெய்வதற்கான பல்வேறு பணிகள்**

ஒப்பந்தம் ரூபா 202 மில்லியன் ஒப்பந்த விலைக்கு M'S. S.D.S. Construction கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் நிர்மாணப் பணிகள் 2023.11.02 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, உயர்த்தியின் பணிகள், நிலத்தை மட்டப்படுத்தும் பணிகள், உட்கூரை பொருத்துதல் மற்றும் கட்டிடத்தின் உள்ளகப் பகுதியை பிரிக்கும் வேலைகள் (Partitioning) பூர்த்திசெய்யப்பட்டுள்ள பிரதான பணிகாளாகும். 97% பணிகள் நிறைவு செய்து செய்திட்டம் பூர்த்தியாக்கும் மட்டத்தில் உள்ளது. சுவர்களுக்கு வர்ணம் பூசும் எஞ்சிய வேலைகள் நடைபெறுகின்றன.

**3.1.1.5 பகுதியாக தன்னியக்கமயப்படுத்தப்பட்ட கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பான முனைய இயக்கத் தொகுதி** (TOS)

- இச்செய்திட்டம் 2022 செத்தெம்பர் மாதத்தில் வழங்கப்பட்டுள்ளதோடு, 16 மாத காலத்தின் பின் 2024 ஏப்பிரல் மாதத்தில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- முனைய வாயில்களுக்கு தேவையான வன்பொருட்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் உத்தரவாதக் காலத்தின் 6 மாதங்கள் கழிந்ததன் பின் இலங்கை துறைமுக அதகாரசபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

- வீதிகள்,வாயில்கள் மற்றும் கிழக்குகொள்கலன் முனையத்தின் நிருவாகக் கட்டிடம் உட்பட சிவில் நிர்மாணப்பணிகளின் தாமதம் காரணமாக சேர்வர்ஸ் ஸ்தாபித்தல் மற்றும் அமுல்படுத்தும் நிலைக்கு (Configuration) தாக்கமொன்று ஏற்பட்டுள்ளது.

- பகுதியான தன்னியக்க முனையமொன்றாக, ஸ்ரெடல் கெரியர்ஸ், கப்பலில் இருந்து கரைவரை இயக்கங்கள் மேற்கொள்கின்ற பாரம்தூக்கிகள், புகையிரத பீலி மீது பொருத்தப்பட்ட தன்னியக்க பாரந்தூக்கிகள் போன்ற உபகரணங்கள் இயக்கங்களுக்கு தயார் நிலையில் வைத்திருப்பது இயக்கத் தொகுதியை செயற்படுத்துவதற்கான பூர்வாங்க தேவைப்பாடாகும்.

- இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவத்தினால் 2025 ஜூன் மாதமாகும் போது கிழக்கு கொள்கலன் முனையத்தின் இயக்கங்கள் ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளது.

- தகவல் பொறிமுறை பகுதியினால் மீள் திருத்தம் செய்யப்பட்ட காலவரையறையில் செயல்படுத்துவதற்கு முயற்சிப்பதோடு, கிழக்கு கொள்கலன் முனையத்தின் செயற்பாடுகளை மீள்திருத்தம் செய்யத் தேவைப்படுகிறது.

### 3.1.2 மேற்கு கொள்கலன் முனையம் - I (WCT- I)

இலங்கை துறைமுக அதிகாரசபை, Adani Ports Special Economic Zone Ltd கம்பனி மற்று தமது உள்நாட்டு கூட்டுரிமை கம்பனியான John Keells Holdingd PLC கம்பனி (APSEZ Consortium) உள்ளடங்கியுள்ள கூட்டு வியாபாரமொன்றினால் அரசாங்க தனியார் கூட்டுரிமையொன்றாக நிர்மாணித்து, இயக்கி, கையளிக்கும் (BOT) அடிப்படையின் கீழ் 35 வருட காலத்தில் மேற்கு கொள்கலன் முனையம் - 1 இனை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கு கொள்கலன் முனையம் - 1 இனை அபிவிருத்தி செய்தல் மற்றும் இயக்குவதற்கு முனைய இயக்குனராக ‘‘களம்பு வெஸ்ட் இன்டர்நெசனல் டேர்மினல் (தனியார்) கம்பனி’’ (CWIT) பெயரில் கம்பனியொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது, நிர்மாணித்து, இயக்கி, கையளிக்கும் ஒப்பந்தம் 2021 செப்தெம்பர் மாதத்தில் அமுல்படுத்தப்பட்டதோடு, பங்குதாரர்களின் ஒப்பந்தம் காணிகள் குத்தகை வாடகை ஒப்பந்தம் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட நேரடி ஒப்பந்தம் 2022 பெப்ரவரி மாதத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கு கொள்கலன முனையம் - 1, 400 மீட்டர் அல்லது அதைவிடக் கூடிய நீளமுள்ள பாரிய மூன்று கொள்கலன் கப்பல்களுக்கு நங்கூரமிடும் வசதிகள் வழங்கக் கூடியவாறு, 20 மீட்டர் ஆழமான நங்கூரத்தளமொன்றுடன் மற்றும் 1400 மீட்டர் நீளமான மேடைச்சுவரொன்றுடன் கூடிய முனையமொன்றாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. முனைய பிரதேசம் அண்ணளவாக 65 ஹெக்டயார் பூமிப் பிரதேசத்துடன் கூடியதோடு , இதன் வருடாந்த கொள்கலன் கையாளல் கொள்திறன் இருபதின் சம அலகு 3.0 மில்லியனாகும்.

மேற்கு கொள்கலன் முனையம் - 1 இன் சீர்திருத்தப்பணிகள் தற்போது பூரணமாக நிறைவடைந்துள்ளது. மேடைச்சுவர், தடுப்புச்சுவர், பூமியை மேம்படுத்தி ஆயத்தப்படுத்தும் நடவடிக்கைள், கட்டிட வேலைகள் மற்றும் மேற்கு கொள்கலன் முனையம் - 1 இன் காப்பு மேடையின் வேலைகள் அமுல்படுத்தப்படுகின்றது. தற்போது 65% மொத்த நிர்மாணிப்பில் முன்னேற்றமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

| கட்டங்கள் | பூர்த்தி செய்யப்பவுள்ள வேலைகள் | பூர்த்தி செய்யப்படவுள்ள காலம் |
|---|---|---|
| கட்டம் 1 | நிர்மாண ஒப்பந்தத்தை பெற்றுக் கொடுத்தல் | - |
| கட்டம் 2 | உபகரணங்கள் மற்றும் வசதிகள், போதிய மூலதனம், பாதுகாப்பான கடலகப் போக்குவரத்து மற்றும் அகழும் பணிகளுடன் 600 மீட்டர் நீளமான மேடைச் சுவர் மற்றும் முனையப் பிரதேசத்துக்கு பின்பக்க பிரதேசம் | அமுலாகும் திகதியான 2025.02.26 திகதி முதல் 36 மாத காலங்கள் |
| கட்டம் 3 | மேடைச் சுவரின் மொத்த நீளம் (1400 மீட்டர்) மற்றும் பிரதான அகழ்வுகளை நிறைவு செய்தல் | அமுலாகும் திகதியான 2026.02.26 திகதி முதல் 48 மாத காலம் |
| கட்டம் 4 | நிர்மாணப் பணிகளை நிறைவு செய்தல் | அமுலாகும் திகதியான 2027.02.26 திகதி முதல் 60 மாத காலம் |

### 3.1.3 மேற்கு கொள்கலன் முனையம் - II இற்கான அலைதாங்கியை நீடித்தல்

2019 தேசிய துறைமுக பிரதான திட்டத்திற்கு அமைவாக மேற்கு கொள்கலன் முனையம் - II இணை ஸ்தாபிப்பதற்காக கொழும்பு தெற்கு துறைமுகத்தின் அலைதாங்கியை நீடித்தல் அதற்கடுத்த உத்தேசித்த அபிவிருத்தி திட்டமாவதோடு, அதன் மூலம் மேற்கு கொள்கலன் முனையம் 1 இன் மேடைச்சுவர் நீடிக்கப்படும்.

தற்போதுள்ள மேற்கு அலைதாங்கியை ஆழமான கடல் பக்கமாக மேற்கொண்டும் நீடிப்பதற்கு மேற்கு கொள்கலன் முனையம் - II திட்டத்தில் உள்ளடங்குவதோடு அதில் மேற்கு கொள்கலன் முனையம் - II பூமியின் பின்பக்க பிரதேசத்தினால் மேற்கு திசையாக 50 – 70 ஹெக்டயார் குறைந்த இடப் பிரதேசமொன்று இணைவதோடு மேற்கு கொள்கலன் முனையம் - 1 இனை அடுத்து கொள்கலன் இருபதின் சம அலகு 3.5 மில்லியன் கொள்திறனுடன் கூடியவாறு 20 மீட்டர் ஆழமான மற்றும் 1200 மீட்டர் - 1400 மீட்டர் ஆவதோடு, நீளமான மேடைச் சுவரொன்றுடன் தெற்கு துறைமுக தடாகமொன்று உருவாகின்றது. இச்செய்திட்டம் பூர்தத்தியடைந்ததன் பின், மேற்கு கொள்கலன் முனையம் - 1 என ஆழம் 18 -20 மீட்டர் ஆவதோடு, 2600 – 2800 மீட்டர் நீளத்துடன் கூடிய நேரடி மேடைச் சுவரொன்று மற்றும் சேவை வழங்கல் வசதிகள் தொடர்பாக மேற்கு கொள்கலன் முனையம் - II முனையத்தின் பின்பக்கமாக 50 – 70 ஹெக்டயார் பூமிப் பிரதேசமொன்று கொழும்பு துறைமுகத்துக்கு உரித்தாகும்.

அலைதாங்கியின் குறித்த நீடிக்கும ் கால எல்லை நிறைவடைவதற்கு செய்திட்டம் ஆரம்பம் முதல் 05 வருடங்கள் வரையான காலமொன்று செல்லுகின்றது. அலைதாங்கியை நீடித்தல் பகுதியாக நிறைவடைவதுடன் மேற்கு கொள்கலன் முனையம் - II நீடிக்கும் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட முடியும். எனவே, 2028 ஆண்டின் பின் வர்த்தக நடவடிக்கைகள் இழக்கப்படுவதற்கு காரணமாகக் கூடிய திறன் குறைவடைவதை தவிர்ந்து கொள்வதற்காக மேற்கு கொள்கலன் முனையம் II இன் இயக்கங்கள் 2030 ஆம் ஆண்டுக்கு முன் ஆரம்பிப்பதனை இலக்காகக் கொண்டு, அதன் நிர்மாணிப்புகள் 2025 ஆண்டில் ஆரம்பிக்கும் தேவைப்பாடு எழுந்துள்ளது.

இத்தேவையினை கவனத்திற்கொண்டு இலங்கை துறைமுக அதிகாரசபை, நெரொத்த அமைச்சுடன் இணைந்து மேற்கு கொள்கலன் முனையம் - II இல் அலைதாங்கியை நீடிக்கும் விபரமான திட்டம் தொடர்பாக ஆலோசகரொவரை தெரிவு செய்யும் பெறுகை செயற்பாடு நிறைவு செய்யப்பட்டுள்ளது. தேவையான அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொண்ட உடனேயே ஆலோசனைப் பணிகள் தரப்படுத்தலின் முதல் இடத்துக்கு வந்த ஆலோசகருக்கு வழங்கப்படுவதுடன் ஆய்வு ஆரம்பிக்கப்படும்.

### 3.1.4 காலி துறைமுக அபிவிருத்தி செய்திட்டம்

காலி துறைமுகத்தை வலயத்தின் வணிக துறைமுகமொன்றாக அதன் இயக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இணையாக சுற்றுலாதொழில் சார்ந்த துறைமுகமொன்றாக அபிவிருத்தி செய்தவற்கு காலி துறைமுக அபிவிருத்தி செய்திட்டம் அடையாளங் காணப்பட்டுள்ளது. காலி துறைமுகத்தின் விசேட புவியியல் அமைப்பினை கருத்திற்கொண்டு காலிக் குடாவுடன் தொடர்பான பொழுதுபோக்கு மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி சந்தர்பங்களிற்காக தனியார் துறையின் முதலீடுகளை கவர்ந்து கொண்டு, மரபுரீதியான துறைமுக சேவைகளிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல் நிறைபேறான அபிவிருத்தி மாதிரயொன்றாக நிர்மாணிப்பது உத்தேசித்த காலி துறைமுக அபிவிருத்தி செய்திட்டத்தில் உள்ளடங்குகின்றது.

இச்செய்திட்டத்தில் ஆழமான பயணிகள் முனையம் மற்றும் அதனுடன் தொடர்புடைய தடுப்புச் சுவரொன்றை நிர்மாணித்தல், அலைதாங்கியை நிர்மாணித்தல், பிரவேச கால்வாய் பாதை மற்றும் தடாகத்தை அகழ்தல் மற்றும் ஏனைய வசதிகளை நிர்மாணித்தல் உள்ளடங்குகின்றது. இச்செய்திட்டம் நிறைவடைந்ததன் பின் அதன்

அனுகூலங்களை காலி பிரதேசத்துக்கு மட்டுமன்றி முழு நாடும் பொருளாதார அபிவிருத்தியை பெற்றுக்கொள்ளும்.

2024 மார்ச் மாதம் கிடைக்கப்பெற்ற அமைச்சரவை அங்கீகாரத்திற்கேற்ப, விருப்பம் தெரிவித்தல் மற்றும் பிரேரணைகளிற்கான மனுக் கோருவதற்கான பெறுகைச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரேரணைகளிற்கான மனுக் கோருதல் 2025 சனவரி மாதத்தில் நிறைவடையவுள்ளது.

காலி துறைமுக அபிவிருத்தி செய்திட்டத்திற்கான முதலீட்டாளரொருவர் 2025 ஆண்டில் தெரிவு செய்யப்படவுள்ளார்.

### 3.1.5 திருகோணமலை துறைமுகத்தில் துறைமுகம் சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்.

அதிவேக மேம்பால பாதை கட்டமைப்பு விரிவாக்குவதுடன் கொழும்பு துறைமுகத்துடன் துரிதமாக தொடர்பு கொள்ளக் கூடிய தரைவழி தொடர்பு, கைத்தொழில்களை உருவாக்குவதற்காக பாரிய சமுத்திரம் சார் கரையோரமொன்று, ஆழமான துறைமுக வசதிகள் மற்றும் அமைப்பின் அனுகூலமான நிலையை கருத்திற் கொண்டு இவ்விசேட பொருளாதார வலயத்தினுள் பிரதான பங்களிப்பொன்றை நிறைவேற்றுவதற்கு திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய முடிகின்றது.

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் திருகோணமலை துறைமுகம் தொடர்பாக அங்கு காணப்படும் காணிகளும் உள்ளடங்கலாக குறுகிய கால மற்றும் நீண்டகால திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

கைத்தொழில் அபிவிருத்திக்காக புகையிரத பாதைகள் மற்றும் பெருந்தெருக்களின் தொடர்புடன் காணிகளை ஒதுக்கும் பணிகள் தேசிய துறைமுக பிரதான செய்திட்டத்தில் திருகோணமலை வலயத் திட்டத்திற்கு மற்றும் திருகோணமலை மாவட்ட பிரதான திட்டத்திற்கேற்ப தற்போது அடையாளங் காணப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகத்தின் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரம் தற்சமயம் கோரப்பட்டுள்ளது. மேலும் , மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கண்காணிப்பிற்கேற்ப, தேவைப்படும் சுற்றுச் சூழல் வழிகாட்டுதல்களை பெற்றுக்கொள்வதற்கு மூலோபாய சூழல் மதிப்பீட்டு கணிப்பீடொன்று (SEA) இலங்கை துறைமுக அதிகாரசபையினால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்ப, எதிர்காலத்தில் பயனுறுதியாகக்கூடுமென எதிர்பார்க்கும் கைத்தொழில்களை, அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கேற்ப, இலங்கை துறைமுக அதிகாரசபையினால் அல்லது அரச தனியார் கூட்டுரிமையொன்றின் மூலம் ஆரம்பிப்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை தயார் நிலையில் உள்ளது.

### 3.1.6 தெற்காசிய வணிக மற்றும் சேவை வழங்கல் நிலையம் (SAC &LH)

தெற்காசிய வணிக மற்றும் சேவை வழங்கல் நிலையம், சைனா மேர்சன்ட் போர்ட் ஹோல்டிங்ஸ் (CM Ports) கம்பனியால் செயல்படுத்தப்படும் முதலீட்டாளர்களின் இணக்கப்பாடொன்றின் மூலம் நிர்மாணிக்கப்படும். இச்செய்திட்டத்தின் கீழ், 150,000 சதுர மீட்டரை உள்ளடங்கும் வகையில் ஐந்து மாடிகளைக் கொண்ட கட்டிடத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்படுவதுடன், அது தெற்காசியாவின் மாபெரும் வணிக மற்றும் சேவை வழங்கல் நிலையமாக இருக்கும்.

தெற்காசிய வணிக மற்றும் சேவை வழங்கல் நிலையத்தின் நிர்மாண ஒப்பந்தம் 50 ஆண்டுகளிற்கு நிர்மாணித்து இயக்கி, கையளிக்கும் திட்டமொன்றாக சைனா மேர்சன்ட் போர்ட் ஹோல்டிங்ஸ் (CM Port), இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் எக்சஸ் என்ஜினியரிங் பி.எல்.சி கம்பனி ஆகிய மூன்று முதலீட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளினால் கொழும்பில் முறையாக கைச்சாத்திடப்பட்டுள்ளது.

காணி குத்தகை வாடகை ஒப்பந்தம் 2023 ஜுலை மாதம் கைச்சாத்திடப்பட்டது. செய்திட்ட நிர்மாணிப்புக் காலம் 42 மாதங்காளகும்.

தெற்காசிய வணிக மற்றும் சேவை வழங்கல் நிலைய செய்திட்டம் தொடர்பான நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பூர்வாங்க திட்டங்கள் விடுவிப்பு மற்றும் கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன், புவியியல் ஆய்வுச் செயற்பாடுகள் 2024 நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### 3.1.7 தலைமன்னார் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல்

இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் காணப்படும் இரு தரப்பு ஒத்துழைப்பின் முக்கியத்துவதை கருத்திற்கொண்டு, இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையே பயணிகள் போக்குவரத்து சேவையொன்றை ஆரம்பிப்பதற்கு இலங்கை அரசாங்கம் மற்றும் இந்திய அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

உத்தேசித்த அபிவிருத்தி செய்திட்டத்தின் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்து செல்வதனை தீர்மானிக்கும் நோக்கத்துடன் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் சாத்தியவள ஆய்வொன்றை முன்னெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், இத்துறைமுகத்தை, அரச தனியார் கூட்டுரிமை மாதிரியொன்றின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை ஆலோசனை வழங்கியுள்ளதுடன், இதனை கருத்திற்கொண்டு முதலீட்டாளரொருவரை தெரிவு செய்வதற்கு ஆர்வம் தெரிவித்தல் மற்றும் பிரேரணைக்கான மனுகோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆர்வம் தெரிவிக்கும் நடவடிக்கைகள் நடைமுறையிலுள்ளதோடு, தெரிவு செய்யப்படும் விலைதாரர்கள் 2025 ஆண்டின் பிரேரணைக்கான மனு கோரப்படுகின்றது.

### 3.1.8 ஜயா கொள்கலன்முனையம் V செய்திட்டத்தில் ஆழமான நங்கூரதள கொள்திறனை விஸ்தரித்தல் - சிவில் வேலைகள்

ஜயா கொள்கலன் முனையத்தின் நங்கூரதள வசதிகள் 120 மீட்டரினால் நீடிக்கப்பட்டுள்ளது. இதன் நிர்மாணப்பணிகள் 2020.11.23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, 2024.05.15 ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. இச்செய்திட்டம் அளவிடப்பட்ட முறையில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதோடு, இலங்கை துறைமுக அதிகாரசபையினால் பொறுப்பேற்றுள்ளது. இதன் ஒப்பந்த விலை ரூபா 5,035 மில்லியன் ஆகும்.

### 3.1.9 திருகோணமலை துறைமுகத்தில் பொறியியல் வேலைத்தளக் கட்டிடத்தை நிர்மாணித்தல்.

டென்ரரை இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுதாபனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் நிர்மாணப் பணிகள் 2023 ஏப்பிரல் 03 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, 2024.08.15 ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. செய்திட்டம் அளவிடப்படத்தக்க

முறையில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதோடு, இலங்கை துறைமுக அதிகாரசபையினால் திருகோணமலை துறைமுகத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த விலை ரூபா 252,851,266.93 ஆகும்.

### 3.1.10 திருகோணமலை துறைமுகத்தின் நீர் வழங்கும் தொகுதி மற்றும் நீர் பம்பும் நிலையத்தை நிர்மாணித்தல் - நீர் பம்பும் நிலையத்தை அமைத்தல்

ஒப்பந்தத்தை M/S Puritas (Pvt)Ltd, கம்பனிக்கு வழங்கியதோடு, ஒப்பந்ததாரரினால் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரரினால் 2023.12.02 ஆம் திகதி வேலைத்தளத்துக்கு ஊழியர்கள் மற்றும் உபகரணங்கள் அனுப்பியுள்ளதோடு, செய்திட்டம் 2024.08.17 ஆம் திகதி அளவுரு மட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதன் ஒப்பந்த விலை 44,040,795.80 ரூபாவாகும்.

### 3.1.11 காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைத்தல்

இச்செய்திட்டம் தொடர்பாக நிதி பெற்றுக்கொடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் 2018 சனவரி 10 ஆம் திகதி இந்தியாவின் எக்ஸ்போர்ட் இம்போர்ட் வங்கியுடன் டொலர் கடன் ஒப்பந்தமொன்றுக்கு வந்துள்ளதோடு இப்பணிகளை மேற்கொள்வதற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 45.27 மில்லியன் நிதி உதவியொன்று பெற்றுக்கொண்டுள்ளது. இச்செய்திட்டம், ஆலோசனை ஒப்பந்தம் மற்றும் நிர்மாண ஒப்பந்தமென இரு ஒப்பந்தங்களை உள்ளடக்கியுள்ளது.

இச்செய்திட்ட பணிகளை அமுல்படுத்துவதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையின் திட்டமிடல் மற்றும் ஆலோசனை சேவையை பெற்றுக்கொள்ளும் பொருட்டு, 2020 ஜுன் 30 திகதி Haskoning DHV Consulting Pvt Ltd கம்பனியுடன் செய்திட்ட முகாமைத்துவ ஆலோசனை சேவை ஒப்பந்தமொன்றில் உள்ளடக்கப்ட்டுள்ளதுடன் இதன் வேலைகள் 2020 ஒக்தோபர் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2024 திசெம்பர் மாத இறுதியில் ஆரம்ப திட்டமிடல் வேலைகள், பூர்வாங்க தகுதிகான ஆவணங்களை தயாரித்தல் மற்றும் விபரமான செய்திட்ட அறிக்கையை தயாரிக்கும் பணிகளை நிறைவு செய்து ஆலோசக ஒப்பந்தத்தில் 47% முன்னேற்றத்தை அடைந்துள்ளது. எவ்வாறாயினும், இம் மதிப்பிடப்பட்ட ஆகுசெலவினை தாண்டி செல்லல் மற்றும் பூர்வாங்க தகுதிகான் ஆவணங்களிற்காக இந்தியாவின் எக்சீம் வங்கியின் அனுமதி கிடைக்காமையின் காரணமாக இச்செய்திட்டம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கு தீர்வாக, இதன் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கும் பொருட்டு, இந்திய அரசாங்கம் ஐக்கிய அமெரிக்க டொலர் 63.65 மில்லியன் நன்கொடையொன்றை வழங்குவதற்காக முன்மொழிந்துள்ளது. இந்நன்கொடையை பெற்றுக்கொள்ளும் பொருட்டு, இந்திய அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு மற்றும் அதற்கு மேலதிகமாக தற்போதுள்ள டொலர் கடன் ஒப்பந்தத்தை இரத்துச்செய்யுமாறு இந்திய அரசாங்த்திடம் கோரிக்கை விடுப்பதற்காக நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் 2024.04.29 திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தற்பொழுது இந் நன்கொடையை செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நிறைவுறும் தருவாயில் உள்ளது. நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் இந் நன்கொடை தொடர்பிலான நடவடிக்கைகள் நிறைவு

செய்ததன் பின்னர் செய்திட்டத்தின் நிர்மாணப் பணிகளிற்கான டென்டர் கோரும் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு முடியுமாக இருக்கும்.

### 3.1.12 இந்தியா மற்றும் காங்கேசன்துறைக்கு இடையே பயணிகள் போக்குவரத்து சேவையொன்றை ஆரம்பித்தல்

இவ்வசதி 2023.06.16 திகதி திறக்கப்பட்டதுடன் பூமி சேவைகள் வெளிதரப்பினரிடமிருந்து பெற்றுக்கொண்டு புதிதாக நிர்மாணிக்கப்படும் முனைய கட்டிடத்தை செயற்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் இயக்க பகுதி தீர்மானித்துள்ளது. அதற்கேற்ப, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முனைய கட்டிடத்தை பயன்படுத்தி தற்போதைய பயணிகள் போக்குவரத்து சேவைகள் (அண்ணளவாக வாரத்திற்கு 4 பயணிகள் கப்பல்கள்) முன்னெடுக்கப்படுகின்றன.

### 3.1.13 துறைமுக பிரவேச அதிவேக மேம்பால பாதை திட்டத்தின் கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் முன்னெடுக்கப்படும் செய்திட்டங்கள்

துறைமுக பிரவேச அதிவேக மேம்பால பாதை திட்டத்தின் கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செய்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

- வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் துறைமுக பிரவேச அதிவேக மேம்பால பாதை செய்திட்டத்தின் ஒப்பந்தக்காரருடன் ஒருங்கிணைப்பு மற்றும் வதிகள் வழங்குதல்.

- புதிய வேலைத்தள கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல்

துறைமுக பிரவேச அதிக மேம்பால திட்டம் காரணமாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் வேலைத்தளங்களை இடமாற்றுவதற்கு தேவைப்படுவதோடு, அது தொடர்பாக நான்கு கட்டிடங்களுடன் உள்ளடங்கும் வேலைத்தள கட்டிடத்தொகதியை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மதிப்பீட்டு ஆகுசெலவு ரூபா 2,089 மில்லியன் (விலை அதிகரிப்புடன்) ஆவதோடு, ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி பெற்றுக்கொடுக்கப்படுகின்றது.

இச்செய்திட்ட வேலைகளை அமுல்படுத்துவதற்கு ஒப்பந்தக்காரரான BEL – DGES JV கம்பனிக்கு 2021 செப்தெம்பர் 09 ஆம் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதோடு, 2023 வருட இறுதியாகும் போது நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது இறுதி பில்கள் செலுத்தும் நடவடிக்கைகள் தற்போது நடைபெறுகின்றது.

#### 3.1.13.1 சமுத்திர வசதிகள் வழங்கும் நிலையம் (இலங்கை துறைமுக அதிகாரசபை பிரதான காரியாலய கட்டிடம்)

துறைமுக அதிவேக மேம்பாலப்பாதை செய்திட்டத்தின் நிர்மாணிப்புகளுக்கு வசதிகள் ஏற்படுத்தும் பொர்ருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிக்குழுவினரை இடமாற்றுவதற்காக கனல் முனைய வளாகத்தில் 17 மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படுகின்றது. இதன் செய்திட்ட ஆகுசெலவு ரூபா 4,999 மில்லியன் ஆவதோடு, ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி வழங்கப்படுகின்றது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் இச்செய்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. செய்திட்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் தேவையை கருத்திற்கொண்டு சேவை பெறுனரின் தேவைகளை பூர்த்தி செய்யும் வேலைகள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் செயல்படுத்தப்படுவதோடு, 48% பௌதீக முன்னேற்றமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.செய்திட்டம் பூர்த்தி செய்யும் பரீட்சார்த்த திகதி 2025 மே ஆகும்.

### 3.1.13.2 இலங்கை துறைமுக அதிகாரசபையின் பிரதான காரியாலய கட்டிடம் தொடர்பாக தளபாடங்களை கொள்வனவு செய்தல்

சமுத்திர வசதிகள் வழங்கும் நிலையத்தின் தளபாட தேவைகள் தொடர்பான நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்காக கட்டிடக் கலைஞர் மற்றும் கட்டிட வடிவமைப்பாளரோருவரின் சேவையை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கேற்ப, கட்டிடக் கலைஞரோருவரினால் 3D வடிவம் மற்றும் விபரக்குறிப்புக்கள் தயாரிக்கப்படுகின்றன. சமுத்திரவியல் வசதிகள் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 2025 மே மாதமாகும் போது பூர்த்தி செய்யப்படவுள்ளதோடு,அதன் பின் தளபாடப் பொருட்களை கொள்வனவு செய்தல் ஆரம்பிக்கப்படும்.

### 3.1.14 துறைமுக தொடர்பாடல் தொகுதி

- தகுதிகளை வெளிப்படுத்தல் (EOQ) கோரப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு, சிறு பட்டியல்படுத்தப்பட்டது.
- பிரேரணைக்கான மனுக்கோரும் ஆவணம் தனியார் நிதிசார் மாதிரியொன்றின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது.
- இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவத்தினால் இச்செய்திட்டம் தொடர்பாக உள்ளக நிதியை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு, சிறு பட்டியல்படுத்தப்பட்ட விலைதாரர்களுக்கு பிரேரணைக்கான மனுக்கோருவதனை வழங்குவதற்கு முன் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவது அவசியமாகும்.
- பிரேரணைக்கான மனுக்கோரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு செய்வதற்காக துறைமுக அதிகாரசபையின் உள்ளக நிதிசார் மாதிரி தொடர்பாக அமைச்சரவையின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3.2 டிஎதிர்கால கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

### 3.2.1 கொழும்பு துறைமுகத்தின் ஜயா கொள்கலன் முனையம் V மேடைப் பிரதேசத்தில் கற்கள் பதித்து தார் இடும் பணிகள்.

அண்ணளவாக 31,000 சதுர மீட்டர் மேடை பிரதேசத்தில் கற்கள் பதித்து தார் இடுதல். இதன் பெறுகை செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. இதன் மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு ரூபா 895,787,500.00 ஆகும். செய்திட்ட கால எல்லை 365 தினங்களாவதோடு, 2025.03.01 ஆம் திகதி செய்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. 2025 ஆண்டினுள் செய்திட்ட பணிகளில் சுமார் 75% பூர்த்தி செய்யப்படவுள்ளது. எதிர்பார்க்கப்படுகின்றது. 2025 ஆண்டிற்கான வரவு செலவு ஒதுக்கீடு ரூபா 750 மில்லியன் ஆகும்.

### 3.2.2 கிழக்கு கொள்கலன் முனையத்தின் இயக்க கட்டிடத்திற்கான பிரவேசப் பாதையை நிர்மாணித்தல்.

மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு ரூபா 261 மில்லியன் ஆகும். செய்திட்ட கால எல்லை 270 தினங்களாவதோடு, 2025.03.01 ஆம் திகதி செய்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. 2025.12.31 ஆம் திகதியில் செய்திட்டம்

பூர்த்திசெய்யப்படவுள்ளது. 2025 ஆண்டிற்கான ஒதுக்கப்பட்ட வரவு செலவு ரூபா 195 மில்லியன் ஆகும்.

### 3.2.3 சேரம் வாயில் பிரதேசத்தில் சேரம் வளைவிலிருந்து பிரதான பாதைக்கு இடைப்பட்ட பகுதியை புனரமைத்தல்.

இதன் திட்டங்கள் தயாரிக்கப்படுவதோடு, 2025.05.01 திகதி செய்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2025.12.31 திகதி செய்திட்டம் பூர்த்தி செய்யப்படவுள்ளது. 2025 ஆண்டிற்கான ஒதுக்கப்பட்ட வரவு செலவு ரூபா 195 மில்லியன் ஆகும்.

### 3.2.4 திருகோணமலை துறைமுகத்தின் துறைமுக பிரவேச பாதை மற்றும் வாயில் கட்டமைப்பை நிர்மாணித்தல்

2025.07.01 திகதி செய்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதோடு, 2025 ஆண்டில் 55% செய்திட்ட இலக்கை அடைந்துகொள்ளவுள்ளது. 2025 ஆண்டிற்கான ஒதுக்கப்பட்ட வரவு செலவு ரூபா 550 மில்லியன் ஆகும்.

### 3.2.5 கிழக்கு கொள்கலன் முனையம் - வேலைத்தளக் கட்டிடம் மற்றும் வசதிகள் வழங்கும் கட்டிடம்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதியை பயன்படுத்தி கிழக்கு கொள்கலன் முனையத்தின் வேலைத்தளக் கட்டிடம் மற்றும் ஊழியர்கள் தொடர்பாக சேவைகள் நிலைய வசதிகள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. வேலைத்தளம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட ஆகுசெலவு ரூபா 900 மில்லியன் ஆவதோடு ஊழியர்கள் தொடர்பிலான வசதிகள் கட்டிடம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட ஆகுசெலவு ரூபா 750 மில்லியனாகும். தற்போது வசதிகள் பூர்த்தி செய்யும் செயற்பாட்டிலுள்ளதோடு, 2025 ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

### 3.2.6 துறைமுக விருது வழங்கும் விழா – 2025

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி பகுதியினால் கொழும்பு துறைமுகத்தின் ஏனைய முனையங்களின் ஒத்துழைப்புடன் 2025 ஆண்டில் துறைமுக விருது வழங்கும் விழா ஒழுங்கு செய்வதற்கு திட்டமிடப்படுகின்றது. இது சர்வதேச விழாவொன்றாவதோடு பிரதான கப்பல் கம்பனிகளின் பிரதானிகள் இவ்விழாவில் பங்குகொள்வர்.

### 3.2.7 வர்த்தக தெரிவு நிலையை மேம்படுத்துதல் மற்றும் தனியார் வலையமைப்பு தொடர்புகளை உருவாக்கும் சந்தர்பங்களை விருத்தி செய்தல் தொடர்பாக கப்பல் கம்பனிகளின் பிரதிநிதிகளை சந்தித்தல் மற்றும் கண்காட்சிகளில் பங்குபற்றுதல்.

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கையாளப்படுகின்ற முனையங்களில் கருத்திற்கொள்ளப்படத்தக்க கொள்திறன் விருத்தியொன்று ஏற்படுத்துவதற்கான சாத்தியத்தன்மையை எடுத்துக்காட்டும் பிரதான உலகளாவிய கடல்சார் நிறுவனங்களுடன் தொடர்புபடுவதற்காக, சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி பகுதியுடன் ஒன்றிணைந்து மூலோபாய திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாடுகளின் பிரதான அங்கமாவது தொடர்புகளை உறுதிபடுத்துவதற்காக பிரதான தரத்திலான கப்பல் கம்பனிகளின் பிரதானிகளை சந்தித்தல், ஒத்துழைப்போடு

செயற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஆராய்தல் மற்றும் உலகளாவிய கப்பலோட்ட மற்றும் சேவைகள் வழங்கும் சுற்றுச்சூழல் தொகுதியினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையை மூலோபாய பங்குதாரரொருவராக நிலைத்திருக்கச் செய்வதாகும்.

இது சுற்றுலா பயணிகளுக்கு புறம்பாக, பல்வேறு சர்வதேச கண்காட்சிகள் மற்றும் வர்த்தக ஒன்றியங்கள் தொடர்பில் இலங்கை துறைமுக அதிகாரசபை முனைப்பாக பங்கெடுத்துக்கொள்ளும். உலகளாவிய வர்த்தகத்தில் மாற்றமடைந்துவரும் கேள்வியை நிறைவுசெய்வதற்காக மூலோபாய அமைப்பு, வசதிகள் மற்றும் நெகிழ்ச்சித்தன்மை உள்ளடங்கலாக இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் கொழும்பு துறைமுகத்திலுள்ள பிரத்தியேகமான அனுகூலங்களை எடுத்துகாட்டுவதற்காக இம்முயற்சிகள் மூலம் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. கப்பல் கம்பனிகளின் பிரதானிகளுடன் நேரடி தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல் மற்றும் உலகளாவிய மேம்பாட்டு நிகழ்ச்சிகள் மூலம் மூலோபாய முன்னனியை மேம்படுத்துதல் மற்றும் நிலைபேறான வளர்ச்சியொன்றை ஏற்படுத்தி, ஸ்தாபிக்கப்பட்டுள்ள கப்பல் சேவைகள் மற்றும் புதிதாக உருவாகும் கப்பல் சேவைகள் ஆகிய இரு பிரிவுகளையும் கவர்ந்துகொள்வது துறைமுக அதிகாரசபையின் நோக்கமாகும்.

### 3.2.8 கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பான டிஜிடல் சந்தைப்படுத்தல் கட்டமைப்பு

டிஜிடல் சந்தைப்படுத்தல் கட்டமைப்பு தொடர்பான ஆய்வுகள் எம்மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அதன் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டில் முனைய அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டதுடன் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பாக டிஜிடல் சந்தைப்படுத்தல் கட்டமைப்பொன்றை ஆரம்பிப்பதற்கு ஆயத்தமாகவுள்ளோம்.

## 3.3 தொழில்பாட்டு செயலாற்றுகை 2024.12.31

### 3.3.1 கொழும்பு துறைமுகம்

- **கப்பல்களின் வருகை**

| விபரம் | 2023 | 2024 | % |
|---|---|---|---|
| **சரக்குக் கப்பல்கள்** | | | |
| கொள்கலன்களிலானவை | 3,890 | 3,522 | -9.5 |
| மரபு ரீதியானவை | 32 | 54 | 68.8 |
| ஏனைய கப்பலகள் சரக்குகள் | 180 | 230 | 27.8 |
| பழுதுபார்த்தல்களுக்காக வந்த கப்பல்கள் | 45 | 46 | 2.2 |
| எண்ணெய் நிரப்புவதற்காக வந்த கப்பல்கள் | 44 | 74 | 68.2 |
| ஏனைய கப்பல்கள் | 46 | 42 | -8.7 |
| **வருகை தந்த கப்பல்களின் மொத்த எண்ணிக்கை** | **4,237** | **3,968** | **-6.3** |

- **கொள்கலன் கப்பல்களின் வருகை**

| விபரம் | 2023 | 2024 | % |
|---|---|---|---|
| இலங்கை துறைமுக அதிகாரசபை (SLPA) | 1,521 | 1,337 | -12.1 |
| எஸ்.ஏ.ஜீ.ரீ கம்பனி (SAGT) | 1,000 | 937 | -6.3 |
| சீ.ஐ.சீ.ரீ (CICT) | 1,369 | 1,248 | -8.8 |
| **வருகை தந்த கப்பல்களின் மொத்த எண்ணிக்கை** | 3,890 | 3,522 | **-9.5** |

- **கொள்கலன் கையாளல் திறன் (இருபதின் சம அலகு)**

| விபரம் | 2023 | 2024 | % |
|---|---|---|---|
| **இறக்குமதிகள்** | 495,101 | 589,927 | 19.2 |
| **பொருட்கள் ஏற்றிய** | 438,234 | 541,155 | 23.5 |
| வெற்று | 56,867 | 48,772 | -14.2 |
| ஏற்றுமதிகள் | 494,905 | 579,328 | 17.1 |
| பொருட்கள் ஏற்றிய | 283,440 | 301,094 | 6.2 |
| வெற்று | 211,465 | 278,234 | 31.6 |
| **மீள் ஏற்றுதல் (Transshipment)** | 5,754,247 | 6,315,195 | 9.7 |
| **மீள் அடுக்குதல் (Re-stowing)** | 205,659 | 307,619 | 49.6 |
| மொத்த இருபதின் சம அலகு | 6,949,912 | 7,792,069 | 12.1 |
| மீள் ஏற்றுமதி விகிதம் % | 83 | 81 | |

- **கொள்கலன் கையாளல் கொள்திறனுக்கு (இருபதின் சம அலகுகள்)**

| விபரம் | 2023 | 2024 | % |
|---|---|---|---|
| இலங்கை துறைமுக அதிகாரசபை (SLPA) | 1,965,130 | 2,413,162 | 22.8 |
| எஸ்.ஏ.ஜீ.ரீ கம்பனி (SAGT) | 1,763,864 | 2,025,840 | 14.9 |
| சீ.ஐ.சீ.ரீ கம்பனி (CICT) | 3,220,918 | 3,353,067 | 4.1 |

- **கொழும்பு துறைமுகம் - கப்பல் சரக்கு கையாளல் (தொன்)**

| விபரம் | 2023 | 2024 | % |
|---|---|---|---|
| தரையிறக்கப்பட்ட சரக்குகள் (தொன்) | 53,569,162 | 62,112,102 | 15.9 |
| ஏற்றப்பட்ட (தொன்) | 46,104,426 | 52,481,808 | 13.8 |
| கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்கு | **99,673,588** | **114,593,910** | **15.0** |

- **கையாளப்பட்ட மொத்த தொன் பிரமாணம்**

| விபரம் | 2023 | 2024 | % |
|---|---|---|---|
| இலங்கை துறைமுக அதிகாரசபை (SLPA) | **27,986,968** | **36,487,633** | **30.4** |
| எஸ்.ஏ.ஜீ.ரீ கம்பனி (SAGT) | **22,812,891** | **25,563,582** | **12.1** |
| சீ.ஐ.சீ.ரீ கம்பனி (CICT) | **42,603,207** | **45,172,714** | **6.0** |
| இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (CPC) | **4,009,417** | **4,019,619** | **0.3** |
| ஏனைய துறைமேடைகள் | **2,261,105** | **3,350,362** | **48.2** |
| மொத்தம் | **99,673,588** | **114,593,910** | **15.0** |

✱ எஸ்ஏஜீரீ மற்றும் சீஜசீரீயின் கம்பனி தொடர்பாக மதிப்பிடப்பட்ட தொன் அளவு உள்ளடங்கலாக

- **கொள்கலன் கையாளல் திறன் - முனையம் / துறைமேடை (இருபதின் சம அலகு)**

| விபரம் | 2023 | 2024 | % |
|---|---|---|---|
| **இலங்கை துறைமுக அதிகாரசபை (JCT மற்றும் ECT)** | | | |
| உள்நாட்டு | 208,383 | 285,204 | 36.9 |
| மீள் ஏற்றுமதி | 1,729,272 | 2,042,577 | 18.1 |
| மீள் அடுக்குதல் | 27,476 | 85,381 | 210.7 |
| **மொத்தம்** | **1,965,131** | **2,413,162** | **22.8** |
| **சவுத் ஏஷியா கேட்வே டேர்மினல்ஸ் (SAGT)** | | | |
| உள்நாட்டு | 193,092 | 229,291 | 18.7 |
| மீள் ஏற்றுமதி | 1,528,824 | 1,757,097 | 14.9 |
| மீள் அடுக்குதல் | 41,947 | 39,452 | -5.9 |
| **மொத்தம்** | **1,763,863** | **2,025,840** | **14.9** |
| **கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT)** | | | |
| உள்நாட்டு | 588,531 | 654,760 | 11.3 |
| மீள் ஏற்றுமதி | 2,496,151 | 2,515,521 | 0.8 |
| மீள் அடுக்குதல் | 136,236 | 182,786 | 34.2 |
| **மொத்தம்** | **3,220,918** | **3,353,067** | **4.1** |
| **கொழும்பு துறைமுகம் (PORT OF COLOMBO)** | | | |
| உள்நாட்டு | 990,006 | 1,169,255 | 18.1 |
| மீள் ஏற்றுமதி | 5,754,247 | 6,315,195 | 9.7 |
| மீள் அடுக்குதல் | 205,659 | 307,619 | 49.6 |
| **மொத்தம்** | **6,949,912** | **7,792,069** | **12.1** |

### 3.3.2 அனைத்து துறைமுகஙகள்

திருகோணமலை துறைமுகமஇ ஹம்பாந்தோட்டை துறைமுகம்இ காலி துறைமுகம், ாங்கேசன்துறைஇ மயிலிட்டிஇ பருத்தித்துறை மற்றும் காரைநகர் துறைமுகங்கள்

| **விபரம்** | **மொத்தம்** |
|---|---|
| **கப்பல்களின் எண்ணிக்கை** | **4,605** |
| **இறக்கப்பட்ட கப்பற்சரக்குகள் (தொன்)** | **66,500,161** |
| **ஏற்றப்பட்ட கப்பற்சரக்குகள் (தொன்)** | **53,739,009** |
| **கையாளப்பட்ட மொத்த கப்பற்சரக்குகள் (தொன்)** | **120,239,170** |

## 3.4 நிதி செயலாற்றுகை 2024.01.01 – 2024.11.30 (ரூபா.மில்)

| **விபரம்** | **மொத்தம்** |
|---|---|
| **வருமானம்** | |
| இயக்க வருமானம் | 68,528.24 |
| ஏனைய இயக்க வருமானம் மற்றும் வட்டி வருமானம் | 19,919.74 |
| **மொத்த வருமானம்** | **88,447.98** |
| **செலவு** | |
| ஊழியர்களின் சம்பளம் | 17,990.06 |
| மேலதிக நேரம் | 7,362.03 |
| எரிபொருள், மின்சாரம் மற்றும் ஏனைய உராய்வு பொருட்கள் | 5,619.90 |
| சொத்துக்களை பராமரித்தல் | 2,572.71 |
| ஏனைய செலவுகள் (வெளி கூலி கட்டணம், ஒப்பந்த வேலைகள், போக்குவரத்து செலவுகள் போன்றவை) | 11,616.77 |
| **உப மொத்தம்** | **45,161.47** |
| **அந்நிய செலவானி (நட்டம்)/ இலாபத்திற்கு மற்றும் வெளிநாட்டு கடன் வட்டிக்கு முன்னரான இலாபம் (நட்டம்)** | **43,286.51** |
| வெளிநாட்டு கடன் மீதான வட்டி | 2,341.47 |
| **அந்நிய செலவானி (நட்டம்)/ இலாபத்திற்கு முன்னரான மற்றும் வெளிநாட்டு கடன் வட்டிக்கு பின்னரான இலாபம் / (நட்டம்)** | 40,945.04 |
| அந்நிய செலாவனி (நட்டம்)/ இலாபம்) | (1,490.84) |
| **அந்நிய செலவானி (நட்டம்)/ இலாபத்திற்கு பின்னர் மற்றும் வெளிநாட்டு வரிகளுக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)** | **39,454.20** |
| வருமான வரி | (8,290.05) |
| **அந்நிய செலவானி (நட்டம்)/ இலாபம் மற்றும் வரிகளுக்கு பின்னரான இலாபம் / (நட்டம்)** | **31,164.15** |

# 4. வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம், தேசிய கடல் போக்குவரத்து வழங்குநராக செயற்பட்டும், தேசிய பொருளாதார வளர்ச்சியில் ஒத்தழைப்பு வழங்கிகொண்டும், நாட்டின் பொருளாதார நோக்கங்களை எய்துக்கொள்வதற்கு பாரிய சேவையினை வழங்குகின்றது. மேலும், கப்பல்களை கையாளுதல், கப்பல்களை வாடகைக்கு எடுத்தல் மற்றும் வாடகைக்கு வழங்குதல், கப்பற் முகாமைத்துவம். தரகு சேவைகள், சரக்கு கப்பல் போக்குவரத்து மற்றும் கப்பற் முகவர் வலையமைப்பு பராமரிக்கப்படுதல் என்பன இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

## 4.1 அடிப்படை நோக்கங்கள்

### 4.1.1 வர்த்தக துறை மற்றும் வாடிக்கையாளர்களை நோக்கியதாக

- தேசிய பொருளாதாரத்தில் ஒத்துழைப்பு வழங்கிக்கொண்டு நாட்டின் பொருளாதார நோக்கங்களை எய்துக் கொள்ளும் வகையில் வசதிப்படுத்துநராக செயலாற்றுதல்
- குறுகிய காலப் பகுதிக்குள் ஆகக் குறைந்த விலை கணக்குகளின் கீழ் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பாதுகாத்துக் கொண்டு அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்

### 4.1.2 நாடு மற்றும் சமூகம் பொருட்டு

- எதிர்கால தேசிய அபிவிருத்தி செயற்பாட்டின்போது கப்பற்றுறை சார்ந்த கேந்திர நிலையமாக நாட்டின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- நுகர்வோரின் தேவைகளை அடையாளம் காணப்பட்டு போட்டியுடன் கூடிய விலை கணக்குகளை சமர்ப்பித்தல்.
- அரச இறக்குமதி செயற்பாட்டின் போது கப்பற் கட்டணங்களை இந்த நாட்டுக்குள் கொடுப்பனவு செய்வதன்மூலம் (குழுடீ டீயளளை) வெளிநாட்டு அந்நியச் செலாவணியை நாட்டில் சேமித்தல்.
- நாட்டில் அனல் மின் சக்தி உற்பத்தி துறையில் கப்பற்றுறை மற்றும் சரக்குக் கையாள்கை பங்காளர் ஒருவராக தொடர்ச்சியாக செயற்படல்.
- நாட்டில் வலுசக்தி.்.பெற்றோலியத் துறையில் கப்பற்றுறை சார்ந்த வழங்குநராக செயலாற்றுதல்.

### 4.1.3 உரிமையாளர்களை நோக்கியதாக

- இலாபத்தை நோக்கமாகக் கொண்டு அந்நியச் செலாவணியை சேமித்துக் கொள்வதன் ஊடாக, பொது திறைசேரியிடம் ஆகக் கூடிய பங்களிப்பை வழங்குதல்.

## 4.2 பிரதான கடமைகள்

- கப்பல் உடமையாக்கம், கப்பற் முகாமைத்துவம், கப்பற் வாடகைக்கு அமர்த்தல், தரகு சேவைகள்
- கடல் மார்க்கமாக கப்பற் சரக்குகளை கையாளுதல்
- சரக்கு கையாள்கைச் சேவைகள் (டுழபளைவஉைள) மற்றும் சுங்க இசைவாக்க சேவைகள் (ஏற்றுமதி மற்றும் இறக்குமதி )
- கப்பற் முகவர் சேவைகள் (யுபநஉெல ளுநசஎஉைநள)
- கப்பற் தரகு சேவைகள் (டீசழமநசயபந)

- கப்பல்களை வாடகைக்கு எடுத்தல் மற்றும் வாடகைக்கு வழங்குதல்
- புத்தளம் அனல் மின்நிலையத்திற்கு நிலக்கரியினை கொண்டுச் செல்லுதல் மற்றும் இடநகர்த்தல்.
- தேசிய இளையோர்களுக்கான கடல்சார் பயிற்சி

## 4.32023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் ஏப்பிரல் 1 ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதி சார்பில் தொடர்ந்து இடம்பெறும் வியாபாரச் செயற்பாடுகளின் நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

| | செயற்பாடு | உப செயற்பாடு | பௌதிகச் செயற்றிறன் | | வருமானம் (ரூபா. மில்லியன்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2024ஆம் ஆண்டு | 2023 ஆம் ஆண்டு | 2024ஆம் ஆண்டு | 2023 ஆம் ஆண்டு |
| 1.1 | சரக்கினை இடநகர்த்தல் – NVOCC தொழிற்பாடு (கப்பல் தொழிற்பாடுகளற்ற பொது சரக்கனுப்புநர்) | முழுமையாக கொள்கலனில் சரக்கினைக் காவிச் செல்லல் (FCL) | *793 கொள்கலன்கள் | 798 கொள்கலன்கள் | *368.75 | 473.19 |
| 1.2 | | கொள்கலன் அல்லாத சரக்கினைக் காவிச் செல்லல் (LCL) | * 2,033.84 (F/T) | 10,202.88 (F/T) | | |
| 2 | சரக்குக் கையாள்கைச் சேவைகள் | இசைவிணணக்கச் சேவை | **345 பணிகள் | 318 பணிகள் | 124.02 | 48.84 |
| 3 | முகவராண்மைச் சேவைகள் | உரத்தினைக் காவிச் செல்லும் கப்பல்கள் | 2 கப்பல்கள் | 2 கப்பல்கள் | - | - |
| | | நிலக்கரிக் கப்பல்களுக்கான துறைமுக முகவர் | ***22 கப்பல்கள் | 22 கப்பல்கள் | 27.27 | 39.23 |
| 4 | லக்விஜய மின்நிலையத்திற்காக நிலக்கரியினை இடநகர்த்தல் | இடநகர்த்தல் வாடகை மீதான சலுகை | - | - | - | - |
| | | படகு கட்டணங்கள் மீதான கழிவுகள் (சலுகை) | 1.27மில்லியன் மெற்றிக் தொன் | 1.29 மில்லியன் மெற்றிக் தொன் | 337.45 | 334.12 |
| 5 | 02 கடற்படை கப்பல்களை ஈடுபடுத்தல் | இ.க.கூ கப்பல் கட்டணங்களின் வருமானம் (நிலக்கரியை இடநகர்த்தல்) | - | - | - | - |
| | | இ.க.கூ கப்பல் வாடகை வருமானம் | ***** 5304 வாடகை நாட்கள் | ***** 533 வாடகை நாட்கள் | ***** 2,408.31 | ***** 2,021.14 |
| 6 | கடல்சார் பயிற்சி | 3 ஆம் தரப்பு கப்பல்கள் தொடர்பில் பயிலிளவல்களின் /உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | ****** 1 பயிலிளவல்கள் | ****** 2 பயிலிளவல்கள் | 0.11 | 1.13 |
| | *******மொத்த வருமானம் | | | | **3,265.91** | **2,917.66** |

அட்டவணை I மூலம்: நிதிச் செயற்றிறன் – வரைவுக் கணக்குகள் பௌதிகச் செயற்றிறன் திணைக்களப் பதிவுகள

**குறிப்பு:**

1. * கிட்டிய கடந்த காலத்தில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியான காலத்தின் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் இன்னும் முழுமையாக மீளவில்லை என்பதன் காரணமாக கருத்திற் கொள்ளப்பட்ட காலப்பகுதி சார்பில் கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட கொள்கலன் அளவீடானது (இருபது சமமான அலகுகள் மற்றும் கப்பற் சரக்கு தொன்கள்) குறைக்கப்பட்டிருந்தது. கடுமையான அரசிறைக் கொள்கைகள், மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட இறக்குமதிக் கொள்கைகள் மற்றும் அரச துறை நிறுவனங்களின் மீள்கட்டமைப்புச் செய்முறை என்பன அரசாங்கத் துறையின் இறக்குமதி அளவுகளை (அதாவது இலங்கைப் புகையிரத சேவை (SLR), தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை (NWSDB), இலங்கை மின்சார சபை (CEB) ஆகியவற்றின் சரக்கனுப்பல்களை) சடுதியாக வீழ்ச்சியடையச் செய்வதற்கு வழிவகுத்ததுடன் CSC இன் செயற்றிறனையும் அது பாதித்துள்ளது.

2. ** சரக்குக் கையாள்கைத் திணைக்களமானது வழமையான பணிகளைப் பூர்த்திசெய்த அதேவேளை மேலதிக புதிய பணிகளைப் பெற்றுள்ளது, அது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் செயற்றிறனில் ஒட்டுமொத்தமாக 8% அதிகரிப்பையும் வருமானத்தில் 154% அதிகரிப்பையும் காட்டுகின்றது.

3. *** இந்த வருடத்தின் போதும் தேவைப்படுத்தப்பட்ட முகவராண்மைச் சேவைகளைக் கொண்டு CSC இனால் உயர் எண்ணிக்கையிலான கப்பல் தேவைப்பாட்டை சமாளிக்க முடிந்தது.

4. **** வாடகைக்கமர்த்தல் மீதான வருமானமானது உலகளாவிய வாடகைக்கமர்த்தல் சந்தை வீதங்களில் தங்கியுள்ளது. 2025 ஜனவரி 03 ஆம் திகதிய கிளாக்சன் சுட்டெண்ணுக்கு (Clarkson Index) அமைவாக, 2024 ஆம் ஆண்டு சார்பில் நாளொன்றுக்கான சராசரி Ultramax வீதமானது 16,201/- ஐ.அ.டொலர் ஆகும், அதேநேரம் 2023 ஆம் ஆண்டு சார்பில் நாளொன்றுக்கான சராசரி Ultramax வீதமானது 14,315/- ஐ.அ.டொலர் ஆகும்.

5. ***** 3 ஆம் தரப்பு கப்பல்கள் மீது பயிலிளவல்கள் / உத்தியோகத்தர்கள் பயிற்றப்படுவது பயிற்சி வாய்ப்புகளின் கிடைப்பனவில் தங்கியுள்ளது.

6. ****** 2024 ஆம் ஆண்டில் கருத்திற்கொள்ளப்பட்ட காலப்பகுதியின் போது, மொத்த வருமானமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12% இனால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## 4.4 2024.12.31 திகதியில் கப்பலில் உள்ள பயிலிளவர்கள்

| தரநிலை | எம்வீ. சிலோன் பிறின்செஸ் | எம்வீ. சிலோன் பிறீஸ் |
|---|---|---|
| கப்பல் தளம் | - | 18 |
| இயந்திரம் | 06 | 02 |
| மின்சாரம் | 03 | 01 |
| சாதாரண மாலுமி (OS) | 12 | 03 |
| **மொத்தம்** | **21** | **24** |

ஆதாரம் - CSC தொழில்நுட்ப திணைக்களம்

## 4.5 CSC மொத்த நிதிசார் முன்னேற்றம்


### 4.5.1 இலாப நட்டக் கூற்று

**ஏப்பிறல் 01 இலிருந்து டிசெம்பர் 31 வரையான காலப்பகுதி சார்பில்**

| | 2024 ஆம் ஆண்டு மில்லியன் ரூபா | 2023 ஆம் ஆண்டு மில்லியன் ரூபா |
|---|---|---|
| **வருமானம்** | 3,265.91 | 2,917.65 |
| நேரடித் தொழிற்பாட்டுச் செலவினங்கள் | (1,718.94) | (1,907.06) |
| **மொத்த இலாபம்** | **1,546.97** | **1,010.59** |
| ஏனைய வருமானம் | 71.10 | 708.06 |
| நிர்வாகச் செலவினங்கள் | (174.50) | (179.33) |
| **தொழிற்பாட்டு இலாபம்** | **1,443.57** | **1,539.32** |
| நிதிச் செலவினங்கள் | | |
| வட்டிச் செலவினங்கள் - கப்பல் கடன் | (1,236.63) | (1,355.89) |
| செலாவணி நட்டம் | (40.56) | (119.61) |
| செலாவணி இலாபம் – கப்பல் கடன் (பெயரளவிலான பதிவு) | 388.21 | 368.78 |
| **வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | **554.59** | **432.60** |

**மொத்த நிதிசார் முன்னேற்றம்**

**(ஏப்பிறல் 01 இலிருந்து டிசெம்பர் 31 வரையான காலப்பகுதி சார்பில் CSC இனது ஒட்டுமொத்த நிதிச் செயற்றிறன்)**




**ஆதாரம் வரையுள் கணக்கு**

## 4.6 எதிர்காலத்திற்காக உத்தேசிக்கப்பட்ட புதிய வியாபாரங்கள்

### 4.6.1 இலங்கைக்கும் பங்களாதேஷ் நாட்டிற்கும் இடையில் கொள்கலன் வழங்கற் சேவையினைத் தொழிற்படுத்தல்

கூட்டு வியாபார வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு இலங்கைக்கும் பங்களாதேஷ்க்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை (MOU) ஒன்று ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, சிற்றகொங் மற்றும் கொழும்பு துறைமுகங்களுக்கிடையில் கூட்டுக் கொள்கலன் வழங்கல் சேவையொன்றை தொழிற்படுத்துவதற்கு பங்களாதேஷ் கப்பற் கூட்டுத்தாபனத்தினால் (BSC) பிரேரிப்பொன்று முன்னளிக்கப்பட்டது.

பங்களாதேஷ் கப்பற் கூட்டுத்தாபனமும் இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனமும் இவ்விரு தரப்பிலிருந்தும் நிலையியல் தொழிற்பாட்டு நடைமுறையினை (SOP) முற்றாக்கும் செய்முறையில் உள்ளதுடன் இந்நடவடிக்கையினை ஆரம்பிக்க முன்னர் அவற்றின் கருத்துக்களையும் முன்னுரிமைத் தேவைப்பாடுகளையும் நிலையியல் தொழிற்பாட்டு நடைமுறைக்குள் பரிமாறியுள்ளன.

இச்சேவையானது இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்கும் அவர்களின் பொருட்களை இடநகர்த்துவதற்கும் அத்துடன் ஐரோப்பா மற்றும் மத்தியதரைக்கடல் நாடுகளுக்கு கப்பலில் சரக்குகளை அனுப்புவதற்குங்கூட உதவிசெய்யும். இவ்விரு நாடுகளுக்குமிடையில் இந்நடவடிக்கையினை ஆரம்பிக்கும் பொருட்டு சாத்தியப்படக்கூடிய அளவில் மிக விரைவில் SOP ஐ முற்றாக்குவதற்கு இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கின்றது.

### 4.6.2 நிலக்கரி இறக்குதல் தொழிற்பாட்டிற்காக 5 எண்ணிக்கை கொண்ட தன்னுந்து படகுகளை நிர்மாணித்தல்/ கட்டுதல்

வருடாந்த நிலக்கரித் தேவைப்பாடான வருடமொன்றுக்கு சராசரியாக 2.25 மில்லியன் மெற்றிக்தொன் நிலக்கரியை நுரைச்சோலை நங்கூரமிடும் பகுதியிலிருந்து இறங்குதுறைக்கு 4.2 கி.மீ. தூரத்திற்கு இடநகர்த்தும் பொருட்டு சரக்கிறக்கல் பங்காளர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு கடந்த 13 ஆண்டுகளாக வரையறுக்கப்பட்ட இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனமானது கேள்வியை சமர்ப்பித்து வந்துள்ளது. பதிவுகளுக்கு அமைவாக, கடந்த 13 வருட காலப்பகுதியின் போது படகுகளைப் பயன்படுத்தி 21.84 மில்லியன் மெற்றிக்தொன் அளவான நிலக்கரி விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 46.98 மில்லியன் ஐ.அ. டொலர் தொகையான நிதியங்கள் நாட்டைவிட்டு வெளிச்சென்றுள்ளன.

அதிகம் தேவைப்படும் அந்நியச் செலாவணியைத் தக்கவைப்பதற்கும் தொழிற்பாட்டு நிலைபேற்றுத்தன்மை கருதியும், வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது இந்நடவடிக்கைக்கு சொந்தமாக நிர்மாணிக்கப்பட்ட அதன் படகுகளை ஈடுபடுத்த எதிர்பார்க்கின்றது.

# 5. ஜயா கன்டெனர் டர்மினல்ஸ் லிமிடெட்

கொழும்பு எண்ணெய் வங்கி என அழைக்கப்படும் ஜய கன்டேனர் டர்மினல்ஸ் லிமிடெட் (துஊவு லிமிடெட்) என்பது இலங்கை துறைமுக அதிகாரசபையின் முழுமையான துணை நிறுவனமாகும், இது பிராந்தியத்தில் முதன்மையான எண்ணெய் கிடங்கு குழி களஞ்சிய நிறுவனமாகும்.

## 5.1 2024 ஆண்டில் நடைமுறைப்படுத்தும் அபிவிருத்தி கருத்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம்.

| கருத்திட்டம் | நிதிசார் பங்களிப்பு | எதிர்பார்க்கப்பட்ட செலவினம் (ரூபா.மில்) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| 12000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 02 எரிபொருள் தாங்கிகளை நிர்மாணித்தல் | நீண்ட கால குத்தகை அடிப்படையில்/ இலங்கை துறைமுகஅதிகாரச்சபை/ஜே.சீ.ரி லிமிடெட் | 2400 மில்லியன் | இலங்கை துறைமுக அதிகாரச்சபை மூலம் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கல் கடிதம் வழங்கப்பட்டது. இதுவரை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை.<br><br>அபிவிருத்திஅனுமதிப்பத்திரம் பெறப்பட்டது.மண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. |
| எரிவாயு எண்ணெயை ஏற்றும் இயந்திரத்தால் இயக்கப்படும் பம்ப் வழங்கல் மற்றும் நிறுவல் | ஜே.சீ.ரி லிமிடெட் | 40 மில்லியன் | செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டது. |
| கொதிகலன், ஜெனரேட்டர் மற்றும் இயந்திர அறைகளுக்கான வெப்பம் கண்டறிதல் சாதனங்களின் வழங்கல் மற்றும் நிறுவல் | ஜே.சீ.ரி லிமிடெட் | 12 மில்லியன் | 75% நிறைவு.<br><br>மீதமுள்ள தொகை 2025 ஜூன் மாதத்திற்கு முன்னர் முடிக்கப்படும். |
| பாதுகாப்பு சென்சார் அமைப்பு மற்றும் பிற உபகரணங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் | 20 மில்லியன | 20 மில்லியன | தற்போதுள்ள எல்லைச் சுவரின் பாதுகாப்பற்ற பகுதியில் பாதுகாப்பு வலை அமைக்க இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு பணி வழங்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில் தேவையான பாதுகாப்பு உபகரணங்களை கொள்வனவு செய்ய நிர்வாகம் முடிவு செய்துள்ளது. |

## 3.2 தொழில்பாட்டு செயற்பாடுகள்

**2024 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான செயல்பாடுகளின் ஒப்பீடு**


| தயாரிப்பு | ஏற்றுதல் | | இறக்குதல் | |
|---|---|---|---|---|
| | 2024 மெ.தொன் | 2023 மெ.தொன் | 2024 மெ.தொன் | 2023 மெ.தொன் |
| **380(LSFO)** | 337,123.447 | 487,642.826 | 344,736.166 | 492,791.987 |
| **GO** | 75,243.343 | 76,694.246 | 75,449.809 | 75,913.226 |
| **மொத்தம்** | **412,366.790** | **564,337.072** | **420,185.975** | **568,705.213** |

மேற்கண்ட அட்டவணையின்படி, 2023 மற்றும் 2024 க்கு இடையில் மொத்த ஏற்றுதல் மற்றும் இறக்குதல் அளவுகளை ஒப்பிடும்போது, 2024 ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுதல் 151,970,282 மெட்ரிக் டன் அதிகரித்துள்ளது, இது 2023 உடன் ஒப்பிடும்போது 31.64மு அதிகரிப்பு ஆகும். அதேபோல், மொத்தமாக 148,519,238 மெட்ரிக் டன் அளவுக்கு ஏற்றுதல் அதிகரித்துள்ளது. இது 26.11 சதவீத அதிகரிப்பைக் குறிக்கிறது.

## 5.3 நிதி செயலாற்றுகை

2023 ஆண்டு மற்றும் 2024 ஆண்டின் நிதி செயலாற்றுகையுடன் ஒப்பிடுதல்

| | 2023 (ரூபா.) | 2024.01.01-2024.11.30 (ரூபா.) |
|---|---|---|
| வருமானம் | 612,328,282 | 662,489,515 |
| அண்ணளவான இலாபம் | 384,757,547 | 407,293,416 |
| தேறிய இலாபம் | 243,875,173 | 241,027,539 |




## 5.4 தொழில்பாட்டு நடவடிக்கைகளின் புதிய போக்குகள்

2024 ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுதல் மற்றும் இறக்குதல்

| தயாரிப்பு | ஏற்றுதல் | | இறக்குதல் | |
|---|---|---|---|---|
| | மெ.டொ | % | மெ.டொ | % |
| LSFO 380Cst | 487,642.826 | 86.41% | 492,791.987 | 86.65% |
| MGO | 76,694.246 | 13.59% | 75,913.226 | 13.35% |
| **மொத்தம்** | **564,337.072** | | **568,705.213** | |

மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மொத்த ஏற்றுதல் மற்றும் இறக்குதல் அளவுகள் மற்றும் அவற்றின் சதவீதங்களின்படி, ஜய கன்டேனர் டெர்மினல்ஸ் லிமிடெட் (துஊவு) 2024 ஆம் ஆண்டில் மொத்தம் 564,337.072 மெட்ரிக் டன் ஏற்றுதல்

அளவுகளை கையாண்டது. இதில் 86.41மூ குறைந்த சல்பர் எரிபொருள் எண்ணெய் 380ஊளவ (டுளுகுழு) மற்றும் 13.59மூ கப்பல் எரிவாயு எண்ணெய் (ஆபுழு) ஆகியவை அடங்கும். அதே ஆண்டில் மொத்தமாக 568,705.213 மெட்ரிக் டன் தண்ணீர் திறக்கப்பட்டது, இதில் 86.65மூ டுளுகுழு 380ஊளவ மற்றும் 13.35மூ ஆபுழு ஆகியவை அடங்கும்.

## 5.5 எதிர்கால திட்டங்கள்

- 12000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 02 எரிபொருள் தாங்கிகளை நிர்மாணித்தல்

# 6. ஸ்ரீ லங்கா சிவில் விமானச் சேவைகள் அதிகாரசபை

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை (CAASL) 2002 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை சட்டம் மற்றும் 2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது. சிவில் விமான சேவைகளின் தொழில்பாடுகளில் பாதுகாப்பு, வினைத்திறன், மற்றும் திலைபேண்தகு நிலைமை உறுதி செய்தல், தொழிலின் தொடர்ச்சி மற்றும் நம்பகத் தன்மை பராமரிப்பதற்காக இலங்கை சிவில் விமானம் சேவை ஆணையத்தின் முக்கிய கவனம் செலுத்தும் விஷயங்கள் உள்ளன. ஸ்ரீ லங்கா சிவில் விமான சேவைகள் அதிகார சபை அடிப்படையில் கவனம் செலுத்தும் விடயங்களாகும். சிவில் விமான சேவைகள் அதிகார சபையானது, பாதுகாப்பு ஒழுங்குவிதிகள், சான்றுப்படுத்தல், விமானங்களின் மேற்பார்வை அடங்கலாக விரிவான வெல்லைக்குள் விடயங்களை மேற்கொள்கின்றது.

## 6.1 செயலாற்றுகை 2024

### 6.1.1 தொழில்பாட்டு செயற்றிறன் - 2024 ஆம் ஆண்டு

- ISO 9001:2015 தர முகாமைத்துவ சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு தேவையான பணிகளில் 80% இற்கும் பார்க்க தர மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவால் வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டுள்ளது.

- ஒரு சுயாதீன விமான விபத்து ஆய்வு பணியகத்தை நிறுவுவதற்கான சட்ட வரைவு இறுதி அனுமதிக்காக நிரல் வரிசை அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக, விமானச் சேவைகளின் பாதுகாப்பு பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பிரதானமாக ஐந்து விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

- 2024 ஆம் ஆண்டில் அதிகார சபை, சட்டமா அதிபர் திணைக்களத்தின் அலுவலர்களின் உதவியுடன், சட்டங்கள் மற்றும் வலுவூட்டல் பிரிவால், இரண்டு உச்ச நீதிமன்ற வழக்குகள், மூன்று மேல்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள் மற்றும் இரண்டு உயர் நீதிமன்ற வழக்குகள் உட்பட 36 நீதித்துறை நடவடிக்கைகளில் பங்கேற்றுள்ளது.

- இலங்கையில் சிறிய தலைமுறையினரிடையே விமானப் போக்குவரத்து அறிவை வளர்ப்பதற்காக, 300 பாடசாலை மாணவர்களை தொடர்புபடுத்திக்கொண்டு ஐந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும், இரண்டு விமான நிலையப் பட்டறைகளும் நடத்தப்பட்டன. இந்த முயற்சிகளின் வெற்றி, ”குவன்சர’’ சஞ்சிகையில் வெளியீடுதல் மற்றும் ”குவன் சரிசர” தொலைக்காட்சி நிகழ்ச்சியின் ஒளிபரப்புடன் நெருக்கமாக தொடர்புள்ளதுடன், அதன் மூலம் குறித்த முயற்சிகளின் தாக்கம் கணிசமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

- அதன் முக்கிய நோக்கங்களை வெற்றிகரமாக எய்துக்கொண்டு, விமான மருத்துவ சேவைகள் பிரிவால் ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளுக்கும் தமது செயற்பாடுகளை விரிவுபடுத்தி, விமான மருத்துவ நிபுணத்தவம் மற்றும்ப பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை கணக்காய்வு திட்டம் - (Universal Safety Oversight Audit Programme) இதன் கீழ் இலங்கையின் முன்னேற்றம் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யும் அணுகுமுறை USOAP CMA) -

அவ்வப்போது மதிப்பாய்வுகள் மற்றும் துறை சார் கூட்டங்கள் ஊடாக முறையாகக் கண்காணிக்கப்பட்டது, இதன் விளைவாக ICAO-விற்கு நெறிமுறை கேள்விகளுக்கு (PQ) 738 பதில்கள் கிடைத்தன.

- சர்வதேச பாதுகாப்பு தரநிலைகளுக்கு இணங்குவதை உறுதி செய்தல், சான்றளிக்கப்பட்ட சர்வதேச செயல்பாடுகள் ஊடாக சுற்றுலா மற்றும் வர்த்தகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், ரத்மலானை கொழும்பு சர்வதேச விமான நிலையம் மற்றும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையங்களுக்காக வான் பயணப் பிரிவால் சான்றிதழ்களை புதுப்பிக்கும் கணக்காய்வு நடாத்தப்பட்டது. கூடுதலாக, மட்டக்களப்பு விமான நிலையத்தின் உரிமப் பத்திரங்கள் புதுப்பித்தல் பூர்த்தி செய்யப்பட்டதுடன், அதனை இலங்கை விமானப் படையிலிருந்து சிவில் விமான சேவைகள் அதிகாரசபைக்கு மாற்றப்பட்டது. தற்போது உள்நாட்டு தொடர்புகளை மேம்படுத்துவதற்காக விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நிறுவனம் (AASL) ஆல் நிர்வகிக்கப்படுகிறது.

- விமான வழிசெலுத்தல் சேவைப் பிரிவு கவனிக்கத்தக்க முன்னேற்றத்தை அடைந்துக்கொண்டுள்ளதுடன், அவற்றுக்கிடையில் விமானச் சேவை வழங்குநர்களின் களைப்பின் முகாமை செய்தலை மேம்படுத்துவதற்காக இலங்கை சிவில் விமானச் சேவைகளின் பிரகடணம் (SLCAP 2290) வெளியிடுதலும் உள்ளடக்கப்பட்டது. பிரதான செயற்பாடுகளுக்கிடையில் 5 AIP திருத்தங்களும், மேலதிகமாக 6 AIP திருத்தங்களும், 6 விமானத் தகவல் சுற்றறிக்கைகளும் (AIC) மற்றும் NOTAM 311 ஆன அங்கீகரித்தல்களும் உள்ளடங்கும். இந்தப் பிரிவு 1,290 விமான அனுமதிகளையும், வர்த்தக நேரத்திற்கு புறம்பாக தொழிற்பாடுகள் அடங்கலாக அட்டவணைப்படுத்தப்படாத தொழில்நுட்ப நிறுத்தங்கள்/வணிக நோக்கமற்ற தரையிறக்கங்கள் 719 இற்கு வசதிகளை அளித்தள்ளது. மேலும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடம் 358 உடன்பாடுகள்/ஆட்சேபனைகள் இல்லாத குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளதுடன், இதன் விளைவாக 158 இராஜதந்திர தரையிறக்கங்களும் 200 இராஜதந்திர வான்வழிப் பயணங்களும் இலங்கைப் பிரதேசத்தில் நிகழ்ந்தன, இது செயல்பாட்டுச் சிறப்பிற்கும் சர்வதேச ஒத்துழைப்பிற்கும் வலுவான அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது.

- ஆட்கள் உரிமப் பத்திரப் பிரிவால், 2,657 விமானப் போக்குவரத்து நிபுணர்களுக்கு வெற்றிகரமாக சான்றிதழ் வழங்கப்பட்டதுடன், விமானச் சேவைகளின் பயிற்சி அமைப்புகளின் பொருட்டு 15 சான்றுப்படுத்தும் அவதானிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. விமானச் சேவைகள் தொழிலின் உயர் திறன் மற்றும் இசைவு தரங்களை பராமரிப்பதற்காக, விமானப் பதவியணி உரிமப் பத்திரங்கள், விமானப் பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் விமான dispatches தொடர்பிலான 3,174 அறிவுப் பரிசோதனைகள் இப் பிரிவால் அர்ப்பணிப்புடன் நிருவகிக்கப்பட்டது.

- விமானப் பாதுகாப்பு ஒழுங்குமுறைக் கிளையின் கீழ் இயங்கும், விமான செயல்பாட்டுப் பிரிவால், 2024 ஆம் ஆண்டில் பல முக்கியமான திருப்புமுனைகளை அடைந்தது. இந்த திருப்புமுனைகளுக்கிடையில் ஐரோப்பிய ஒன்றிய விமானப் பாதுகாப்பு நிறுவனத்தின் (EASA) செயல்பாட்டு விதிகளுக்கு இணங்க செயல்பாட்டு விதிமுறைகளை அபிவிருத்தி செய்தல் உள்ளடக்கியதுடன், 2018 ICAO கணக்காய்வால் வெளிப்படுத்திய விடயங்களுக்கான தீர்வுகளை சமர்ப்பித்து ஆண்டு இறுதியில் 80% ஐ பூர்த்தி

செய்யப்பட்டத. எயார் செயிலாஓ (Air Ceilao), ப்ளு ஸ்கய் எவியேஷன் (Blue Sky Aviation) அயுரா எவியேஷன் ( Aura Aviation) ஆகியவற்றிற்கான சான்றிதழ் வழங்கும் செயல்முறைகள் தொடங்கப்பட்டுள்ளதுடன், மேலும் ஐந்து செயற்பாட்டாளர்கள் பொருட்டு விமான செயற்பாட்டு சான்றிதழ்கள் புதுப்பிக்கப்பட்டன. இலங்கை விமானச் சேவைகளுக்கான தரைவழி கையாளுதல் சேவை வழங்குநர் உரிமப் பத்திரம் வெற்றிகரமாக புதுப்பிக்கப்பட்டது.

- இலங்கை விமானச் சேவை மற்றும் FITS விமானச் சேவையில் மேற்கொண்ட விரிவான கணக்காய்வு மூலம், சர்வதேச சிவில் விமானச் சேவைகள் அமைப்பின் (ICAO) தரநிலைகள், பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் (SARPs) மற்றும் உள்நாட்டு விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதிப்படுத்தியதுடன், விமானப் பயணங்கள், கேபின் மற்றும் தரைவழிச் செயல்பாடுகள் உள்ளடங்கும் வகையில் 67 சோதனைகள் மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. இந்தோனேசியாவின் BBN விமான சேவை, ஜெட் ஸ்டார் மற்றும் Arkia இஸ்ரேலிய விமானச் சேவை நிறுவனங்களுக்காக வெளிநாட்டு விமான நிறுவனச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 31 வெளிநாட்டு விமான நிறுவனச் செயற்பாட்டு சான்றிதழ்கள் (FAOC) புதுப்பிக்கப்பட்டன, இதன் விளைவாக 46 வெளிநாட்டு செயற்பாட்டாளர்கள் இலங்கையுடன் தொழில்பாடுகளை மேற்கொண்டனர்.

- இந்த ஆண்டில், 2018 ICAO கணக்காய்வு மற்றும் 2023 மே மாதம் IS M செயல்படுத்தல் கணக்காய்வின் கண்டுபிடிப்புகளின் பிரகாரம், CAASL இன் விமானப் பதிவுகள் மற்றும் விமான தகவு பிரிவினால், ஐரோப்பிய ஒன்றிய விமானப் பாதுகாப்பு நிறுவனத்தின் (EASA) செயல்பாட்டு விதிகளுக்கு இணங்க விதிமுறைகளை தயாரிக்கப்பட்டது. EU-SA APP II இன் நிபுணர்களின் ஒத்துழைப்புடன், ஏற்கனவே உள்ள விதிமுறைகளை திருத்துவதற்கான ஒரு வரைபடம் உருவாக்கப்பட்டது. மேலும் ஐரோப்பா ஒன்றியத்தின் உதவியுடன் இரண்டு செயலமர்வுகள் மற்றும் மூன்று தொகுதிகள் அடங்கலாக உள்ளக நடைமுறைகள் கையேட்டின் முதல் வரைவை நிறைவு செய்தல் ஆகியவை அடங்கலாக கவனிக்கத்தக்க முன்னேற்றத்தை அடைந்துக்கொள்ளப்பட்டது.


- 2024 ஆம் ஆண்டில் இலங்கையில் விமானப் போக்குவரத்துத் துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டது. கட்டுநாயக்காவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (BIA) மற்றும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (MRIA) ஆகிய இரண்டிற்கும் சேவையாற்றி, இலங்கையில் அட்டவணைப்படுத்தி நடைமுறைப்படுத்திய வெளிநாட்டு விமான சேவைகள் 28 ஆகும். உள்நாட்டு விமான சேவைகள் வழங்குநர்களுக்கான இலங்கை விமானச் சேவைகள் மற்றும் ∴பிட்ஸ் எயார் ஆகியன அவற்றின் உள்நாட்டு நடவடிக்கைகளைத் தொடர்ந்து நாடத்தின. ஜெட்ஸ்டார் ஆசியா ( Jetstar Asia) மற்றும் மாலத்தீவு விமனாச் சேவைகளைத் (Maldivian Airlines) தொடங்கிய போதும், பின்னர் விமானப் பற்றாக்குறை காரணமாக இடைநிறுத்தப்பட்டன. கேத்தே பசிபிக் ஏர்வேஸ் (Cathay Pacific Airways) கோவிட் 19 தொற்று நோயின் பின்னர் மீண்டும் செயல்பாடுகளைத் தொடங்கியதுடன், சோங்கிங் (Chongqing) சேவை சிறிது காலம் செயல்பட்ட போதும் தொழில்பாட்டு சிக்கல்களை எதிர்கொண்டது.

- துருக்கிய விமானச் சேவையால் இஸ்தான்புல்லில் இருந்து சரக்கு சேவைகளை பேணியதுடன், அதிக சரக்கு தேவை காரணமாக, இந்தோனேசியாவின் பிபிஎன் ஏர்லைன்ஸ் மூலம் விசேட அனுமதியின் கீழ் கொழும்புக்கும் மாலேக்கும் இடையில் சரக்கு நடவடிக்கைகளைத் தொடங்கியது.

### 6.1.1.1 விமானப் போக்குவரத்து புள்ளிவிபரங்கள் 2024

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் சர்வதேச விமானப் போக்குவரத்து நேர அட்டவணைப்படுத்தப்பட்ட மற்றும் நேர அட்டவணைப்படுத்தாத பயணிகள் மற்றும் பொருட்கள் கையாளள்களின் மாதாந்த தரவுகள் ஒன்றுசேர்த்து தயாரிக்கப்பட்டுள்ளது.

- **வருடாந்த பயணிகளின் போக்குவரத்து**





இந்த வரைப்படம் மூலம் 2014 முதல் 2023 வரையிலான வருடாந்திர பயணிகள் இயக்கங்களையும் அதனுடன் தொடர்புடைய ஆண்டுக்கு ஆண்டு (லுழுலு) வளர்ச்சி விகிதங்களையும் பிரதிபலிக்கின்றது. 2014 முதல் 2018 வரை, பயணிகள் போக்குவரத்து படிப்படியாக 7.8 மில்லியனிலிருந்து 10.8 மில்லியனாக உயர்ந்ததுள்ளதுடன், இது ஒரு மேல்நோக்கிய வளர்ச்சிப் போக்கைக் குறிக்கிறது. கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் தொடர்புடைய பயணக் கட்டுப்பாடுகள் காணரமாக 2.4 மில்லியனில் பயணிகள் போக்குவரத்துக் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக (ஆண்டுக்கு ஆண்டு 76.0மூ - குறைவடைதல்). 2020 இல் ஏற்பட்ட கடும் சரிவுக்குப் பின்னர், 2022 இல் பயணிகளின் இயக்கம் 5.5 மில்லியனை நெருங்கி, இயல்பு நிலையை அடைந்தது. இந்த நிலைமையானது 2023 வரை தொடர்ந்து, பயணிகள் இயக்கங்கள் 7.5 மில்லியன் வரை அதிகரித்தன. எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டில் பயணிகளின் இயக்கங்கள் 2018 இல் எட்டப்பட்ட 10.8 மில்லியன் என்ற எண்ணிக்கை தொற்றுநோய்க்கு முந்தைய உச்சத்தை விட குறைவாகவே உள்ளது.


2024 சனவரி-செப்டெம்பர் தரவுகளின்படி, தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளிலிருந்து பயணிகள் போக்குவரத்து 80% அதிகரித்துள்ளது. இந்த ஆண்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் பயணிகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன், இந்த ஆண்டு இறுதிக்குள் இலங்கை அதன் கோவிட் தொற்று நோய்க்கு முந்தைய போக்குவரத்தில் 90% ஐ எட்டும் அல்லது அதை விட அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விமானம் மற்றும் சரக்கு இயக்கங்களின் போக்குவரத்து தொடர்பாக பின்வரும் வரைப்படம் மூலம் பயணிகளின் இயக்கங்களைப் போன்றே உள்ளன என்பதைக் காட்டுகின்றது


- **வருடாந்த சரக்கு இயக்கம்**




- **வருடாந்த விமான இயக்கம்**




- **மாதாந்த பயணிகளின் இயக்கம்**




வரைபடத்திற்கு அமைவாக, பிரதேசங்களின் வரைப்படத்தில் 2024 புள்ளிவிபரங்கள், தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளை மாதந்தோறும் படிப்படியாக நெருங்கி வருகின்றன. அவை பெரும்பாலும் 2019 தரவுகளுடன் ஒத்துப்போகின்றன, மேலும் 2025 ஆம் ஆண்டளவில் அந்த நிலைகளை விட அதிகமாக இருக்கும் என்று எதிர்வு கூறப்படுகிறது.

### 6.1.1.2 சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் பிரதான செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்ட இயக்க செயலாற்றுகை.

இலங்கையின் சிவில் விமானசேவைகள் அதிகாரசபையின் புள்ளிவிபரவியல் நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் நிறுவனத்தின் சகல பிரிவுகளினதும் மாதாந்த செயலாற்றுகை திரட்டப்படுவதுடன் கீழ்வரும் பகுப்பாய்வின் மூலம் 2024 வருடத்தின் அமைப்பின் செயலாற்றுகை வெளிக்காட்டப்படுகின்றது.


**அடிப்படை/இற்றைப்படுத்திய ஒழுங்குவிதிகள்**

2024 சனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில் விமான செயல்பாடுகள், விமான வழிசெலுத்தல் சேவைகள், விமான நிலையங்கள் மற்றும் விமான மருத்துவ சேவைகள் உள்ளிட்ட முக்கியமகா கவனம் செலுத்தும் துறைகளின் ஊடாக CAASL ஆல் அபிவிருத்தி செய்யப்பட்ட விதிமுறைகள், அறிவிப்புகள் மற்றும் விதிகளின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ள வரைப்படம் மூலம் பிரதிபலிக்கின்றது.




**சிவில் விமான சேவைகள் அதிகார சபையால் வழங்கப்படும் சான்றிதழ்கள்**

2024 சனவரி தொடக்கம் செப்டெம்பர் வரை விமானப் பயணங்களின் பாதகாப்பு, விமானச் சேவைகள் தொடர்பில் வழங்கிய சான்றிதழ்கள் மற்றும் உரிமப் பத்திரங்களின் எண்ணிக்கை வரைப்படத்தில் பிரதிபலிக்கின்றது.




**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையால் வழங்கிய அனுமதி**

| **சுட்டி** | **எண்ணிக்கை** |
|---|---:|
| கொழும்பு விமானத் தகவல் பிரதேசத்திற்கு உட்பட்டு பயணம் செய்யும் விமானங்களின் எண்ணிக்கை | 29853 |
| வான்வழி பணி அனுமதிகளின் எண்ணிக்கை | 172 |
| தரையிறங்கும் அனுமதிகளை வழங்குதல் | 472 |
| மேலே விமானங்கள் செல்வதற்கு அனுமதிகளை வழங்குதல் | 1007 |
| நேர அட்டவணைப்படுத்தப்படாத விமானப் பயண அனுமதிகளின் எண்ணிக்கை | 1479 |
| விமான நடவடிக்கைகள் குறித்த அறிவிப்புகளை வெளியிடுவதற்கான அனுமதி (NOTAM) | 263 |
| உயரமான கட்டிடங்கள் கட்டுவதற்கான அனுமதி | 95 |
| கோபுரங்களை அனுமதிக்கும் எண்ணிக்கை | 114 |
| சரக்கு களஞ்சியத்தில் ஆயுத போக்குவரத்து | 54 |
| உள்நாட்டு விமான நேர அட்டவணைகளை அனுமதித்தல் | 41 |
| சர்வதேச விமான நேர அட்டவணைகளை அனுமதித்தல் | 381 |
| ஆபத்தான பொருட்கள் உரிமத்தின் தற்காலிக அனுமதி | 8 |
| ஆலோசகர் அனுமதிகள் | 9 |
| சிறப்பு செயல்பாடுகள் (விசேட விமானப் பயணங்களின் அனுமதிகள்) | 3 |

### 6.1.1.3 மனித வள செயலாற்றுகை

அதிகாரசபையின் எதிர்கால வெற்றிக்குத் தேவையான திறன்களையும் அறிவையும் ஊழியர்கள் வளர்த்துக் கொள்வதை உறுதி செய்வதற்காக, CAASL மனிதவள மேம்பாட்டில் தொடர்ந்து முதலீடு செய்தல் மற்றும் அதன் தொலைநோக்குப் பார்வையுடன் இணைந்த பயனுள்ள தொழிற்படையைச் செயல்படுத்தியது. 2024 ஆம் ஆண்டில் உள்நாட்டு, சர்வதேச மற்றும் நிகழ்நிலை தளங்கள் மூலம் நடாத்தப்பட்ட பயிற்சி/மாநாடுகள் மற்றும் பட்டறைகள் உள்ளிட்ட மனித வள மேம்பாட்டுத் திட்டங்களுக்காக (ரூபா. 13,031,080.91) செலவிடப்பட்டுள்ளது.

மதிப்பாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில், மனித திறன்களை மேம்படுத்தல் மற்றும் பயன்படுத்துவதற்கான மாற்று பயிற்சி முறைகளை அடைவதே இலக்காக இருந்ததால், நிகழ்நிலை வசதிகள் மூலம் ஊழியர்களுக்கு பரந்த அளவிலான பயிற்சி வழங்கப்பட்டது.

**2023 சனவரி 1 தொடக்கம் திசெம்பர் 10 வரை**

| | பயிற்சிப் பெற்ற எண்ணிக்கை | பயிற்சிப் பெறுபவர்களின் எண்ணிக்கை | பயிற்சி - மனித நாள்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| உள்ளக பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள் | 5 | 89 | 157 |
| வெளிநாட்டு கூட்டங்கள்/ மாநாடு/ கலந்துரையாடல்கள் | 12 | 12 | 59 |
| வெளிநாட்டு பயிற்சி/ கருத்தரங்குகள/ செயலமர்வுகள் | 20 | 21 | 102 |
| உள்நாட்டு பயிற்சி/ கருத்தரங்குகள், / செயலமர்வுகள் | 19 | 72 | 334 |
| நிகழ்நிலை பயிற்சி, கருத்தரங்குகள்/ செயலமர்வுகள் | 6 | 19 | 114 |
| நிகழ்நிலை கூட்டங்கள/ மாநாடு/ கலந்துரையாடல்கள் | 0 | 0 | 0 |
| **மொத்தம்** | 62 | 213 | 766 |

## 6.1.2 நிதி மற்றும் முகாமைத்துவ பிரிவு

| **வருமானம்** | **வரவு செலவு வருமானம் - 2024 ரூபா.மில்லியன்** | **உண்மையான வருமானம் ரூபா.மில்லியன்** | **நிதி முன்னேற்றம் %** |
|---|---|---|---|
| வெளிநாட்டு விற்பனைகளின் மிகைகட்டணம் | 1,080 | 1,080 | 100% |
| (Embarkation Levy) விலகல் வரி சேவை கட்டணம் | 350 | 254 | 73% |
| ஒழுங்குபடுத்தல் சேவைகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் | 138 | 143 | 104% |
| வட்டி ருமானம் | 600 | 608 | 101% |
| ஏனைய தொழில்பாட்டு அல்லாத வருமானம் | 5 | 3 | 60% |
| மொத்த வருமானம் | **2,173** | **2,088** | **96%** |

| செலவினம் | வருமானம் - செலவினம் - 2023 ரூபா.மில்லியன் | வருமானம் - செலவினம் - 2023 ரூபா.மில்லியன் | வருமானம் - செலவினம் - 2023 ரூபா.மில்லியன் |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 976 | 893 | 91% |
| மூலதன செலவினம் | 41 | 40 | 97% |
| மொத்த செலவினம் | 1,017 | 933 | 92% |

- **வெளிநாட்டு விற்பனை மிகைகட்டணம் (OSS)**

CAASL இன் 2024 ஆம் ஆண்டிற்கான வெளிநாட்டு விற்பனை மிகைகட்டண (OSS), வருவாய் ரூபா. 1,080,000,000.00 ஆவதுடன், 2023 ஆம் ஆண்டில் வருவாய் ரூபா. 3,771,642,993.00 ஆகும். ஒப்பீட்டு அளவில் இது 71% ஆன குறிப்பிடத்தக்க குறைவைக் குறிக்கின்றது.

திறைசேரி தொழில்பாட்டு திணைக்களம் 2024 ஏப்ரல் 22 ஆம் திகதி தனது கடிதத்தில் (தொடர் TO/REV /01/14/14-11) மூலம், 2024.02.19 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானம் பிரகாரம், மாதாந்தம் ரூபா.மில்.90 ஐ பிடிபணமாக வைத்துக் கொண்டதன் பின்னர், வெளிநாட்டு விற்பனை மிகைகட்டண வருவாய் பொது திறைசேரியிடம் மாதந்தோறும் அனுப்பி வைக்குமாறு CAASL இடம் ஆலோசனை வழங்கப்பட்டது.

இந்த அறிவுறுத்தல்களின்படி, CAASL, வெளிநாட்டு விற்பனைகளின் மிகை கட்டண வருவாயை (OSS) பின்வரும் வகையில் திறைசேரியிடம் உரிய வகையில் அனுப்பி வைத்துள்ளது.

| காலப்பகுதி | செலுத்திய திகதி | பணம் சலுெத்தல் (ரூபா) |
|---|---|---|
| 2024 சனவரி 24 | 24- மே -16 | 377,549,950.14 |
| 2024 பெப்ருவரி 24 | 24- மே -16 | 319,250,486.41 |
| 2024 மார்ச் 24 | 24- மே -16 | 316,180,430.16 |
| 2024 ஏப்ரல்24 | 24- மே -30 | 277,209,399.77 |
| 2024 மே 24 | 24- யூலை-2 | 335,481,034.01 |
| 2024 யூன் 24 | 24- யூலை -22 | 211,108,303.03 |
| 2024யூலை 24 | 24-ஆகஸ்ட்-23 | 273,225,128.50 |
| 2024 ஆகஸ்ட 24 | 24-செப்-26 | 387,626,807.85 |
| 2024 செப்தெம்பர் 24 | 24-ஒக்-30 | 257,125,131.81 |
| 2024 ஒக்டோபர் 24 | 24-நவ-27 | 214,526,946.31 |
| 2024 நவம்பர் 24 | 24-திசெ-27 | 219,696,971.22 |
| | **மொத்தம்** | **2,175,999,722.50** |

- **சேவை கட்டணங்கள் (Embarkation Levy)**

2024 ஆண்டுக்காக Embarkation Levy திரட்டும் மதிப்பிடப்பட்ட சேவைக் கட்டணங்கள் ரூபா 311,211,122.46 ஆகும். சிவில் விமான சேவை அதிகார சபையால் பின்வரும் வகையில் Embarkation Levy வரி திரட்டுப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

| **Embarkation Levy செலவிடப்பட்ட பெறுமதி** | **தொகை (மில்லியன)** |
|---|---|
| பொது திறைசேரி | 36,642 |
| விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நிறுவனம் (AASL) | 7,894 |
| இலங்கை சுற்றுலா அதிகார சபை (SLTDA) | 3,947 |
| இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை (CAASL) | 311 |
| **மாதம் பொருட்டு செலவிடப்பட்ட Embarkation Levy வரியின் பெறுமதி** | **48,794** |

- **ஒழுங்குபடுத்தல் சேவை வருமானம்**

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் ஒழுங்குபடுத்தல் சேவை வருமானம் 8% ஆல் விருத்தியடைந்துள்ளதுடன், அதன் பெறுமதி ரூபா.மில் 142 ஆகும்.

பொது திறைசேரியிடம் மேற்கொள்ளப்பட்ட மேற்படி கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, 2024 ஆம் ஆண்டில் சிவில் விமான சேவைகள் அதிகார சபையானது, திரட்டிய நிதியத்திடம் ரூபா.மில் 750 ஆன பங்களிப்பை வழங்கியிருந்தது.

### 6.1.3 காலப்பகுதியில் எதிர்நோக்கிய சவால்கள்

- பணியாளர் பற்றாக்குறை
- தொழில் மற்றும் பிராந்தியத்துடன் ஒப்பிடும்போது நிலவும் சம்பள அளவு காரணமாக தகுதிவாய்ந்த பதவியணியை ஈர்ப்பதும் தக்கவைத்துக்கொள்வதும் ஒரு சவாலான பணியாக மாறியுள்ளது. அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக ஆட்சேர்ப்பு செயல்முறை முடிவடைவது அவ்வப்போது தாமதமாகி வருகிறது.
- அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் அந்நியச் செலாவணி கட்டுப்பாடுகள் காரணமாக தேவையான வெளிநாட்டுப் பயிற்சியை வழங்குவதில் சிரமம்.
- ICAO கூட்டங்கள்/பணி அமர்வுகள்/பயிற்சிகள் குறித்து பங்குபற்றாமை.
- சட்டம் வகுத்தல் மற்றும் ஒழுங்குமுறைகளை வெளியிடுவது தொடர்பாக, ஏறத்தாழ 70% ஆன பணிகள் சட்ட வரைவுத் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் போன்ற ஏனைய அரச நிறுவனங்களின் உதவியுடன்

மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், மேலும் குறித்த நிறுவனங்களில் தாமதங்களைக் நிருவகிப்பதற்கு பிரிவிற்கு ஆற்றல் இல்லாமை.

- விரைவான தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் செயற்பட வேண்டிய நிலை காணப்படுதல்
- முக்கியமான விமானத் தரவுகளுக்காக அதிகரித்து வரும் சைபர் பாதுகாப்பு அபாயங்கள் அதிகரித்தல்
- கட்டமைப்புகள் ஊடாக இயங்குதன்மை மற்றும் தரப்படுத்தலை உறுதி செய்தல்.

## 6.1.4 2025 ஆண்டுக்கான எதிர்கால செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

- இலங்கை விமான விபத்து ஆய்வுப் பணியகத்தின் (AAIBSL) சட்ட வரையுளின் இறுதி வரைவு சட்ட வரைஞரிடமிருந்து பெறப்பட உள்ளதுடன், அதன் பின்னர், சட்ட வரையுளுக்காக அமைச்சரவையிடமிருந்து புதிய அனுமதி பெறப்படுதல் வேண்டும்.
- விமானங்களின் தேசியம், பதிவு அடையாளங்கள் மற்றும் விமானத்தில் ஆபத்தான பொருட்களை கொண்டு செல்வது குறித்த விதிமுறைகளை வெளியிடுதல்.
- கேப் டவுன் மாநாடு மற்றும் பீஜிங் மாநாட்டின் ஏற்பாடுகளை செயல்படுத்துவதற்கான சட்ட வரைஞரால் சட்ட வரையுள் தயாரிக்கப்படுகிறது.
- சட்ட வரைஞரால் 2014 ஆம் ஆண்டில் மொண்ட்ரியல் நெறிமுறையின் விதிகளை செயல்படுத்துவதற்கான சட்டத்தை தயாரிக்கப்பட்டதுடன், அதனை கௌரவ சட்டமா அதிபரின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் அதை அங்கீகரிப்பதற்காக அமைச்சரவையின் புதிய அனுமதிப் பெறப்படுதல் வேண்டும்.
- 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானச் சேவைகள் அதிகார சபைச் சட்டம் (CAASL) மற்றும் 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமானச் சேவைகள் சட்டம் ஆகியவை அரசாங்கக் கொள்கைகள் மற்றும் தொழில்துறை தேவைகளுக்கு ஏற்ப திருத்தம் செய்யப்படும். திருத்தம் செய்யப்பட்ட சட்டங்கள் சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டு வருவதுடன், திருத்தங்கள் பொருட்டு அமைச்சரவையின் புதிய அனுமதி பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.
- கைமுறையாக இயக்கப்படும் AIS (விமான தகவல் சேவை) முறையிலிருந்து தானியங்கி AIM முறை (விமான தகவல் முகாமை) வரை செயற்படுதல்.
- உட்கட்டமைப்பு வசதிகளின் திட்டங்கள்.
    - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் முனையம் II இன் கட்டுமானம்.
- பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்நாட்டு முனையத்தை நிர்மாணித்தல்.
- விமானச் சேவைகள் தொழில் துறையில் ஏற்புடைய ஆய்வுகள் பின்வருமாறு மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது
    - இலங்கையில் பொது விமானப் போக்குவரத்துத் துறையில் உள்ள சவால்களை எதிர்கொள்வது மற்றும் எதிர்கால அபிலாஷைகளை அடையாளம் காணுதல்

- இலங்கை விமானப் போக்குவரத்துத் துறையில் வேலைவாய்ப்பு வாய்ப்புகள் மற்றும் தொழிற்படையின் இயக்கவியலை வரைபடமாக்குதல், ஒரு விரிவான வேலைவாய்ப்பு சந்தை பகுப்பாய்வு.

- தேசிய நிலையான விமான போக்குவரத்து சுற்றுச்சூழல் கொள்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளுதல்
- விமானப் போக்குவரத்துத் பிரிவில் CO2 உமிழ்வைக் குறைப்பதற்கான அரச செயற்றிட்டம் தொடர்பான பணிகள் நிறைவடைந்தன.
- தேசிய சுற்றுச்சூழல் கொள்கையை செயல்படுத்தல் தொடர்பில் தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள் (NDCs) மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் (UN) நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) ஆகியவற்றுடன் ஒத்து போதல்.
- ICAO தரநிலைகளுக்கு இணங்க ஆளில்லா விமானக் கண்காணிப்பு அமைப்பை (UAMS) செயல்படுத்துதல்.
- ஆளில்லாத விமானிகளுக்கான உரிமம் வழங்கும் முறையை மேம்படுத்தல் மற்றும் செயல்படுத்துதல், இதில் ஆளில்லாத விமானிகளின் பொருட்டு உரிமங்களை வழங்குவதும் அடங்கும்.
- CAASL பணிகளை தானியக்கமாக்குதல்
- உரிமம் வழங்கும் முறையை நவீனமயமாக்குதல்
- LK மற்றும் வெளிநாட்டு விற்பனை மிகை கட்டணம் (EJ) வரிகளை வசூலிப்பதற்கான தானியங்கி மென்பொருள் அமைப்பை நிறுவுவதை நிறைவு செய்தல்
- ICAO தரநிலைகளுக்கு இணங்க, விமானக் குழுவினர் மற்றும் விமானம் அல்லாத குழுவினர் இருவருக்கும் ஒரு புதிய கணினி அடிப்படையிலான தேர்வு முறையை நிறுவுதல்.
- விமானச் சேவை பயிற்சியில் மிக உயர்ந்த மட்டத்திலான திறன் மற்றும் பாதுகாப்பைப் பராமரித்தல், இசைவிணக்கத்தை சான்றுப்படுத்துவதற்காக ICAO தரநிலைகளுக்கு இணங்க புதிய பயிற்சி நிறுவனங்களைச் சான்றுப்படுத்தல்
- விமானச் சேவை பயிற்சியில் மிக உயர்ந்த மட்டத்திலான திறன் மற்றும் பாதுகாப்பைப் பராமரித்தல், இசைவிணைக்கத்தைச் சான்றுப்படுத்துவதற்காக ICAO தரநிலைகளுக்கு இணங்க புதிய பயிற்சி நிறுவனங்களைச் சான்றுப்படுத்தல்
- தொழில்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தல் மற்றும் உயர்தரத் தரங்களைப் பேணுவதற்காக விமானத் தரநிலைகளுக்கு ஏற்ப CAASL இல் ISO 9001:2015 சான்றிதழ் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தர முகாமைத்துவ கட்டமைப்பை நடைமுறைப்படுத்தல்.
- பாதுகாப்பு நெறிமுறைகளை மேம்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறை இணக்கத்தை உறுதி செய்வதற்காக ICAO தரநிலைகளுக்கு இணங்க தொழில்துறை அளவிலான பாதுகாப்பு முகாமைத்துவ கட்டமைப்பை (SMS) செயல்படுத்துதல்.
- எதிர்கால விமானப் போக்குவரத்து நிபுணர்களை மேம்படுத்துகையில் அதன் செல்லுபடியாகும் தன்மை மற்றும் செயல்திறனை உறுதி செய்து, ICAO தரநிலைகளுக்கு இணங்க, தேசிய அளவில் அடுத்த தலைமுறையின் விமானப் போக்குவரத்து வல்லுநர்கள் (NGAP) திட்டத்தை தொடர்ந்து நடாத்துதல்.
- கொழும்பு விமானத் தகவல் பிராந்தியத்திற்குள் (FIR) செயல்திறன் அடிப்படையிலான தொடர்பாடல் மற்றும் கண்காணிப்பு (PBCS) நடைமுறையை செயற்படுத்தல், கட்டமைப்பு ரீதியாக விரிவான தகவல் முகாமைத்துவம்,

(SWIM), கூட்டுச் சூழலுக்கான விமானம் மற்றும் ஓட்டத் தகவல்கள் (FF-ICE) மற்றும் முக்கியமான விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு நிலையங்களுக்குள் (ATC) விதிக்கப்படும் அணுகுமுறையைப் பயன்படுத்தி சோர்வு இடர் முகாமைத்துவத்தை மேற்கொள்ளுதல்.

- விமானத் தகவல் வெளியீட்டின் புதிய பதிப்பை (2025 இல் 4 ஆவது தொகுப்பை) வெளியிடுவதற்குத் தயாராதல்.
- விமான வழிசெலுத்தல் சேவை வழங்குநர் உரிமம் பத்திரம் வழங்குதல் (AISP, ATSP, ACOM, CNSP)

# 7. வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமானச் சேவைகள் (இலங்கை)(தனியார்) நிறுவனம

வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பெனி (AASL) என்பது 2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் சட்டத்தால் அளிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் நியதிச்சட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட முற்றுமுழுதாக அரசுக்குரிய கம்பெனியாகும். அது, இலங்கையின் சில விசேட சிவில் விமான சேவைகளில் ஒரே நியதிச் சட்ட சேவை வழங்குநராக தமது கடமைப் பொறுப்புகளை தொடர்ச்சியாக நிறைவேற்றுகின்றது.

## 7.1 2024 ஆண்டின் செயலாற்றுகை

### 7.1.1 2024 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்திய பிரதான மூலதன கருத்திட்டங்களின் முன்னேற்றம்

- **பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய(ப.ச.வி) அபிவிருத்தி கருத்திட்டம், பகுதி இரண்டு – கட்டம் - II A பெகேஜ் - பயணிகள் முனைய கட்டிடம் நிருமாணித்தல் மற்றும் அதனைச் சார்ந்த பணிகள்**

இரண்டாவது பயணிகள் முனையக் கட்டிடத்தின் கட்டுமானத்தின் ஊடாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பயணிகளைக் கையாளும் திறனை வருடத்திற்கு 15 மில்லியனாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. பயணிகள் முனையக் கட்டிடம் நிருமாணிக்கும் பணிகளுக்கு இணையாக மேம்பாலங்கள் கொண்ட புதிய உட்பிரவேச வீதி கட்டமைப்பு, பல அடுக்குமாடிகளைக் கொண்ட வாகன நிறுத்துமிடம், நீர் தாங்கி, உயிர்வாயு திட்டம் மற்றும் சேதனை பசளை தயாரிக்கும் அமைப்புடன் கூடிய திண்ம கழிவு பொருட்களின் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மின்சார விநியோக அமைப்பு வசதிகளுடன் மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

நிதி நெருக்கடியின் மத்தியிலும் அனைத்து வெளிநாட்டு கடன்கள் மீள செலுத்துவதை நிறுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்தின் பின்னர், இந்த திட்டத்திடம் நிதி அளிக்கும் முகவர் நிறுவனம் (JICA) கடன் விடுவித்தலை நிறுத்தியதால், கட்டுமான ஒப்பந்த உடன்படிக்கை 2022 திசெம்பர் மாதம் முடிவுறுத்தப்பட்டது.

ஒப்பந்தம் முடிவடைந்தவுடன், கட்டுமான தளத்தின் பராமரிப்பு பணிகள் வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தால் (முதலீட்டாளர்) கையகப்படுத்தப்பட்டது. கட்டுமானப் பணி இடைநடுவில் நிறுத்தப்பட்ட பிரதான பயணிகள் முனையக் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் மீண்டும் தொடங்கும் வரை, சாத்தியமான சேதங்களைக் குறைப்பதற்கு அடையாளம் காணப்பட்ட பாதுகாப்புப் பணிகள் ரூபா. 477 ஆன ஒப்பந்த செலவுகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2024 பெப்ருவரி மாதம் வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டது.

பிரதான முனையக் கட்டிடம், 2 பியெர், மற்றும் 3 பியெர் என்பவற்றின் பொருட்டு பயிலிங், பியெர் கெப், மற்றும் மாடி விட்டங்கள் உள்ளிட்ட குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்வதற்காக 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புதிய திட்டம்

ஆரம்பிக்கப்பட்டது. மொத்த ஒப்பந்த பெறுமதி ரூபா.3,255 மில்லியன் ஆவதுடன், இத்திட்டம் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் 69% ஆன பௌதீக முன்னேற்றத்தையும், ரூபா.மில்லியன் 1,212 ஆன நிதி முன்னேற்றத்தையும் அடைந்துள்ளது. இந்த திட்டம் 2025 ஆம் ஆண்டு பெப்ருவரி நடுப்பகுதியில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கத்தின் தீர்மானம்படி, நிறுத்தப்பட்ட இந்த திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கு AASL 2024 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் கேள்வி செயல்முறையைத் தொடங்கியது. விலைமனு கோரல் செயற்பாடுகளை முதலாவதாக 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்படினும், விலைமனுதாரர்களின் வேண்டுகோளின் பேரில் 2025 ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டது. மீண்டும் தொடங்கப்படும் இந்த திட்டம் 2028 ஆம் ஆண்டு மார்ச் மாதமாகும் போது முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- **புறப்படும் முனையத்தில் பயணப் பொதிகளை செயலாக்குவதற்கான வசதியை மேம்படுத்துதல்.**

இந்த திட்டத்தின் நோக்கம் யாதெனில், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் (ப.ச.வி) புறப்படும் முனையத்தில் பிரயாணப் பொதிகளைக் கையாளும் திறனை அண்ணளவாக 45% ஆல் மேம்படுத்தலாகும். இந்த திட்டத்தின் கீழ், பயணப் பொதிகளை செயலாக்கும் கெரொசல் மறுசீரமைக்கப்படுதல் மற்றும் நீடித்தல் மேற்கொள்ளப்படும். இதற்கு தேவையான கட்டுமானங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு 852 மில்லியன் ரூபாவாகும். 2024 ஆம் ஆண்டின் இறுதியில், இத்திட்டம் 82% ஆன பௌதீக முன்னேற்றத்தையும் ரூபா.861 மில்லியன் ஆன நிதிசார் முன்னேற்றத்தையும் அடைந்துள்ளது.

- **இறக்குமதி சரக்கு முனையங்களின் கட்டிடம் - முதலாவது கட்டம்**

இறக்குமதி விமான சரக்குகளின் முனையக் கட்டிடம் நிருமாணிக்கும் கருத்திட்டம் மூலம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருடாந்த விமானச் சரக்குகளை கையாளும் ஆற்றல் மெட்ரிக் தொன் 150,000 ஆல் அதிகரிக்கப்படும். 2.4 பில்லியன் ரூபா தொகை செலவிடப்பட்டு இந்த திட்டம் மூலம் மூன்று மாடி கட்டிடம் நிருமாணித்தல், வீதிகளை விரிவாக்குதல் மற்றும் 1,620 சதுர அடியில் வாகன தரிப்பிட விசதிகளை அளித்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. இதன் நிருமாணிப்பு பணிகள் 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2024 திசெம்பர் மாதம் முடிவுறுத்துவதற்கு இலக்காக கொள்ளப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த திட்டம் 98% ஆன பௌதீக முன்னேற்றத்தையும், ரூபா.மில்லியன் 3,830 ஆன நிதிசார் முன்னேற்றத்தையும் பதிவு செய்துள்ளது.

- **பயணிகளின்  முனையத்தில் மலசலகூட வசதிகளை மேம்படுத்தல்**

இந்தக் கருத்திட்டத்தின் கீழ், பயணிகளின் முனையத்தில் மற்றும் பியெர் கட்டிடத்தில் காணப்படும் ஆறு மலசலகூட கட்டமைப்புகள் புனரமைக்கப்பட்டன. இந்தக் கருத்திட்டம் 2024 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்டதுடன், மொத்த செலவினம் ரூபா.மில்லியன் 304 ஆகும்.

- **விமான வழிசெல்லுதல் உட்கட்டமைப்பை மேம்படுத்தல்**

– **அவதானிப்பு ரேடார் கட்டமைப்பு (Secondary Surveillance Rada System) பிதுருதலாகலையில் தாபித்தல்:** 1,710 மில்லியன் ரூபா செலவில் இத்திட்டம் 2018 இல் ஆரம்பிக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டின் இறுதியில், குறித்த தளத்திற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன, சிவில் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதுடன், பௌதீக முன்னேற்றம் 78% ஐ அடைந்திருந்தது. 2024 ஆம் ஆண்டு வரை நிதிசார் முன்னேற்றம் மில்லியன் ரூபா.536 ஆக பதிவு செய்திருந்தது.

– **விமனாப் பயண முகாமைத்துவ கட்டமைப்பு (Air Traffic Management System) தாபித்தல்:** விமானப் பயணக் கட்டுப்பாட்டு தொழில்பாடுகளை மேம்படுத்தும் நோக்கத்தில் புதிய ATM கட்டமைப்பு தாபிக்கப்பட்டதுடன், அதன் பணிகள் 2023 ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து தொழில்பாட்டு பணிகளின் பொருட்டு பயன்படுத்தப்படுகிறது. இந்த கட்டமைப்பு குறைந்த பட்சம் எதிர்வரும் 10 ஆண்டுகளின் பயன்பாட்டுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. திட்டத்தின் மொத்த மதிப்பீட்டு செலவினம் 1.15 மில்லியன் ரூபாவாகும். திட்டம் 99% ஆன பௌதீக முன்னேற்றத்தையும், 717 மில்லியன் ரூபா நிதிசார் முன்னேற்றத்தையும் பதிவு செய்திருந்தது.

– **பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமான ஓட்டப் பாதையில் 04 ஆவது முனைக்கு உபகரணங்களின் உதவியோடு விமானங்களை தரையிறக்கும் முறைமை (Instrument Landing System) தாபித்தல்:** 875 மில்லியன் ரூபா பெறுமதியிலான இந்த திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு 2023 ஆம் ஆண்டில் அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றதுடன், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் இறுதியில், திட்டத்தின் மீளாய்வு பணிகள் முடிவுறுத்தப்பட்டதுடன், ஒட்டு மொத்த கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

– **பண்டாரநாயக்க சர்வதேசவிமான நிலையம் பொருட்டான எக்ஸ்- ரே பிரயாண பொதிகளின் பரிசோதனை கட்டமைப்பு (X-Ray Baggage Screening System):** பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் பொருட்டான எக்ஸ்- ரே பிரயாண பொதிகளின் பரிசோதனை கட்டமைப்பை உருவாக்குதல், தாபித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பிலான மதிப்பிடப்பட்ட மொத்த செலவினம் ரூபா.மில்லியன் 319 ஆகும். புதிய கட்டமைப்பு 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் நடைமுறைப்படுத்தியதுடன், இறுதி ஏற்றுக்கொள்ளும் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

– **தானியங்கி வானிலை அவதானிப்பு கட்டமைப்பு (*Automatic Weather Observation System*):** இந்த 307 மில்லியன் ரூபா கருத்திட்டம் 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்காலிக ஏற்றுக்கொள்ளுதல் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

## 7.1.2 தொழிற்பாட்டு செயலாற்றுகை

- **பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (ப.ச.வி.நி)**

2024 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தால் 59,263 விமானங்களின் தொழிற்பாடுகளை கையாளப்பட்டுள்ளதுடன், சர்வதேச தொழிற்பாடுகள் 54,804 ம், உள்நாட்டு தொழிற்பாடுகள் 4,459 ம் என்ற வகையில் உள்ளடங்கும். விமான நிலையத்தில் 8,711,992 சர்வதேச பயணிகளைக் கையாளப்பட்டுள்ளன. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தால் கையாளப்பட்ட மொத்த சரக்குகளின் அளவு 118,191 ஆகும். 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பயணிகளின் போக்குவரத்து 18% ஆண வளர்ச்சியைப் பதிவு செய்வதுடன், விமானப் போக்குவரத்து 18% ஆல் அதிகரித்துள்ளது. இதற்கு மிகையாக சரக்கு போக்குவரத்து 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21% ஆல் அதிகரித்துள்ளது. சர்வதேச விமான நிலையத்தில் இவ்வாண்டில் திட்டமிடப்பட்ட விமான தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் 26 விமானக் கம்பெனிகளை கொண்டமைந்த பயண வலையமைப்பு காணப்பட்டதுடன், அது முன்னரான கோவிட் காலத்தில் இருந்த நிலைமையை அண்மித்தலாகும்.

- **மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (ம.ரா.ச.வி.நி)**

2024 ஆம் ஆண்டில், மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தால் 709 விமானங்களின் தொழிற்பாடுகளை கையாளப்பட்டுள்ளதுடன், அதில் 654 சர்வதேச தொழிற்பாடுகளும், 55 உள்நாட்டு தொழிற்பாடுகளும் உள்ளடங்குகின்றன. விமான நிலையத்தில் 132,852 பயணிகளின் தொழிற்பாடுகளுக்கு வசதிகள் அளிக்கப்பட்டதுடன், அவை அனைத்தும் சர்வதேச பணிகளாகும். ஆண்டில் 23 மெ.தொன். சரக்குகள் கையாளப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில்பயணிகளின் தொழிற்பாடுகள் 6% ஆல் விருத்தியடைந்துள்ளதுடன், விமானச் சேவைகளின் தொழிற்பாடுகள் 17% ஆல் அதிகரித்துள்ளன. சரக்குகளின் தொழிற்பாடுகள் முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் 21% ஆன வளர்ச்சியைக் காட்டுகின்றது. அதேபோன்று, ரெட்வின்ங்ஸ் (Redwings Airlines) விமானச் சேவை 2024 ஆம் ஆண்டில் மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் தொழில்பாடுகளை ஆரம்பித்தது.

- **யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் (யா.ச.வி.நி)**

778 சர்வதேச விமானப் பயனங்களும் 378 உள்நாட்டு விமானப் பயனங்களும் (பயிற்சி விமானப் பயணங்கள் அடங்கலாக) அடங்கலாக 1,156 விமான நிலைய தொழிற்பாடுகள் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தால் இக் காலப் பகுதியில் கையாளப்பட்டது. 2024 ஆம் ஆண்டில், 39,156 சர்வதேச பயணிகள் அடங்கலாக 46,680 பயணிகளுக்கு யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தில் வசதிகள் அளிக்கப்பட்டன. பயணிகளை கையாளுதல் 37% ஆல் வளர்ச்சியடைந்துள்ளதுடன், 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 34% ஆல் விமானப் போக்குவரத்துகள் அதிகரித்துள்ளன. தற்போது எலாயன்ஸ் எயார் (Alliance Air) யாழ்ப்பாணம் மற்றும் சென்னைக்கிடையில் ஒரு வாரத்திற்கு 07 தடவைகள் விமானப் பயணங்களை மேற்கொள்கின்றது.

- **இரத்மலானை -கொழும்பு சர்வதேச விமான நிலையம் (கொ.ச.வி.நி)**

2024 ஆம் ஆண்டில் கொழும்பு சர்வதேச விமான நிலையம், 23,229 விமானங்களின் தொழில்பாடுகளை (பயிற்சி விமான பயணங்கள் அடங்கலாக) கையாளப்பட்டுள்ளதுடன், 2,756 விமானப் பயணிகளுக்கு வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதற்குள் 53 சர்வதேச விமானங்களின் தொழிற்பாடுகளும், 10 சர்வதேச பயணிகளும் உள்ளடங்குவதுடன், அதன் மூலம் குறிப்பிடப்படுவது யாதெனில், இந்த விமான நிலையமானது, பயணிகளுக்கு பிரயாண வசதிகளை அளிப்பதிலும் பார்க்க திடீர் தொழில்நுட்ப தேவைகளை பூர்த்தி செய்யுமிடமாக அல்லது குறுகிய காலத்திற்கு விமானங்களை நிறுத்துமிடமாக பயன்படுத்தியுள்ளமையாகும். கொழும்பு சர்வதேச விமான நிலையத்தின் தொழில்பாடுகளில் கவனிக்கத்தக்க ஒரு பகுதியான பயிற்சி விமானப் பயணங்கள் அடங்கலாக உள்நாட்டு விமானங்களின் தொழில்பாடுகள் 2024 ஆம் ஆண்டில் 3% ஆல் அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உள்நாட்டு பயணிகளின் போக்குவரத்து 3% ஆன வளர்ச்சியைக் காட்டுகின்றது.

- **மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையம் (ம.ச.வி.நி)**

2024 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையம் 432 உள்நாட்டு விமானப் போக்குவரத்துகளுக்கும், 1,107 உள்நாட்டு பயணிகளின் போக்குவரத்துகளுக்கும் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. தொழில்பாட்டு மட்டம் 2023 ஆம் ஆண்டுக்கு இசைவாகவே காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் மீண்டும் திறக்கப்பட்டதன் பின்னர் இது வரை மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையத்தில் சர்வதேச தொழில்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

**2024 ஆம் ஆண்டில் விமான நிலையங்கள், விமானங்கள் மற்றும் பயணிகளும் சரக்கு தொழிற்பாடுகளும்**

| விமான நிலையம் | மொத்தமாக விமானங்களின் தொழில்பாடுகள் | | | மொத்தமாக பயணிகளின் தொழில்பாடுகள் | | | மொத்தமாக விமானச் சரக்குகளின் தொழிற்பாடுகள் (மெ.தொன்) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2023 | 2024 | விருத்தி | 2023 | 2024 | விருத்தி | 2023 | 2024 | விருத்தி |
| ப.ச.வி.நி | 49,664 | 59,263 | 19% | 7,398,257 | 8,718,163 | 18% | 158,867 | 192,475 | 21% |
| ம.ரா.ச.வி.நி | 608 | 709 | 17% | 125,658 | 132,852 | 6% | 44 | 23 | -47% |
| யா.ச.வி.நி | 864 | 1,156 | 34% | 29,717 | 40,680 | 37% | - | - | 0% |
| மட்.ச.வி.நி | 436 | 432 | -0.9% | 1,309 | 1,107 | -15% | - | - | 0% |
| கொ.ச.வி.நி | 22,667 | 23,229 | 2% | 3,594 | 3,227 | -10% | - | - | 0% |
| மொத்தம் | 74,239 | 84,789 | 14% | 7,558,535 | 8,896,029 | 18% | 158,911 | 192,498 | 21% |

### 7.1.3 நிதி செயலாற்றுகை

**ரூபா.மில்**

| உருப்படி | 2023 | 2024 **கணக்காய்வு செய்யப்படாத** |
|---|---|---|
| வருமானம் | 38,376 | 42,665 |
| தொழில்பாட்டு செலவினம் | 19,061 | 23,734 |
| தொழில்பாட்டு இலாபம் /நட்டம் | 19,315 | 18,930 |
| தேறிய நிதிசார் வருமானம் / செலவினம் | 10,428 | 7,740 |
| கடன் வட்டி | 2,225 | 1,352 |
| பரிமாற்றம் (இலாபம்/நட்டம்) | (6,121) | (2,034) |
| வரிக்கு முன்னரான இலாபம் /நட்டம் | **33,639** | **27,352** |

## 7.2 எதிர்கால திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

1. **பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் காணப்படும் பயணிகளின் முணையக் கட்டிடம் மீள்கட்டமைத்தல் மற்றும் மறுசீரமைத்தல்.**

பயணிகளின் முனையக் கட்டிடத்தில் காணப்படும் ஆற்றலை பயனுள்ள வகையில் பயன்டுத்தல் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் முனையத்தின் திறனை கடந்து செல்லுதல் தொடர்பான பிரச்சினை தீர்ப்பதற்காக, 2025 ஆண்டுக்காக சில மீள்கட்டமைப்பு மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

- **புறப்படும் முனையத்தில் விமானப் பயணிகளின் பரிசோதனை கருமபீடங்கள் 30 ஐ சேர்க்கப்படுதல்:** சன்கென் தனியார் கம்பெனியால் (Sanken (Pvt) Ltd.) தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற வழக்கு காரணமாக, புறப்படும் முனையத்தில் கூடுதலாக 30 புறப்படும் முனையங்களை சேர்க்கும் திட்டம் தற்போது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கட்ட விசாரணைக்குப் பின்னர், அடுத்த ஆண்டில் திட்டம் செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- **விமானப் பயணிகள் புறப்படும் முனையத்தில் பயணிகளை பரிசோதனை செய்கின்ற கருமபீடங்களின் எண்ணிக்கையை விரிவுபடுத்துதல்:** விமானப் பயணிகள் புறப்படும் முனையத்தில் ஏற்கனவே காணப்படும் பரிசோதனை கருமபீடங்கள் 58 இன் பரப்பளவைக் குறைத்து, மேலதிகமாக 16 புதிய கருமபீடங்களை சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 300 மில்லியன் ரூபா செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- **வருகை முனையத்தில் குடிவரவுத் தடுத்துவைப்பு பகுதியை நிறுவுதல்:** ரூபா.350 மில்லியன் முதலீட்டில் வருகை குடிவரவுத் தடுத்துவைப்பு பகுதியை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இலத்திரனியல் விற்பனை நிலையங்களை மேல் தளங்களுக்கு கொண்டுச் சென்றதன் பின்னர், வெற்றிடமாகிய இடத்தில் தீர்வை வரியற்ற கடைகளை தாபிப்பதற்கு முன்னர் மேற்கொண்ட தீர்மானத்தைப் மாற்றப்பட்டு, இந்த திட்டத்தின் படி குடிவரவு பயணிகளின் பரிசோதனை கருமபீடங்களை 25 தொடக்கம் 36 வரை அதிகரிக்கப்படுவதுடன், குடிவரவு பயணிகளின் பரிசோதனை வரிசைகளை 12 மீட்டர் தொடக்கம் 16.6 மீட்டர் வரை விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது மேலும், வரியில்லாத கடைகளுக்கான இடவசதி மேம்படுத்தப்படும்.
- **வருகை முனையத்தின் லொபி பிரதேசம் பெருட்டு புதிய தோற்றத்தை வழங்குதல்:**

  வருகை முனையத்தின் லொபி பிரதேசம் பொருட்டு ரூபா.மில்லியன் 500 செலவிடப்பட்டு மறுசீரமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## 2. தானியங்கு குடிவரவு மற்றும் குடியகழ்வு கட்டுப்பாடு - இ-கேட்ஸ் (E-gates) திட்டம்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில், மனித தலையீடு இன்றி குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு செயல்முறைகளை மேற்கொள்ளும் ஆரம்ப கட்டமாக, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் நான்கு இலத்திரனியல் கதவுகளை (E-gates) நிறுவுவதற்கு AASL திட்டமிட்டுள்ளது. இந்த திட்டம் AASL, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கூட்டாக செயல்படுத்தப்படுகிறது. சர்வதேச இடம்பெயர்வு அமைப்பு (IMO) மேலும் நான்கு இலத்திரனியல் கதவுகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதுடன், அவற்றை வருகை தரும் முனையங்களில் தாபிக்கப்படவுள்ளது. இதன்மூலம் வருகை மற்றும் வெளியேறும் முனையங்களுக்காக 4 இலத்திரனியல் கதவுகளை நிறுவுவதற்கு இயலும்.

இந்த திட்டம் பொருட்டான ஒப்பந்தம் 2023 யூன் 08 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. எவ்வாறாயினும், உடன்படிக்கையின் விதிமுறைகளுக்கமைவாக பொருட்களை வழங்குவதற்கு ஒப்பந்தக்காரருக்கு இயலவில்லை. அதன்படி தவறுதல் கடிதம் ஒப்பந்தக்காரரிடம் வழங்கப்பட்டதுடன், மீளவும் விலைமனு கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

## 3. தொழில்முயற்சி வளங்களின் திட்டமிடல் (ERP) திட்டம்

அனைத்து தகவல் தேவைகளையும் ஒரு மென்பொருள் கட்டமைப்பின் ஊடாக, நாட்டின் விமானப் போக்குவரத்து சேவைகள் எதிர்காலத் திட்டங்களுடன் ஒழுங்கமையும் வகையில், நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் மூலோபாய இலக்குகளை மிகவும் திறம்பட பூர்த்தி செய்வதை நோக்கமாக கொண்டு தொழில்முயற்சி வளங்களை திட்டமிடல் (ERP) திட்டம் தற்போது செயற்படுகின்றது. இந்த திட்டம் இரண்டு பிரதான கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுகின்றது.

முதலாவது கட்டத்தின் கீழ், 2021 யூலை 15 ஆம் திகதி நிதி மற்றும் விநியோகச் சங்கிலி முகாமைத்துவ செயல்முறை மொடியுலை நடைமுறைப்படுத்தியதுடன், இறுதி ஏற்றுக்கொள்ளும் சான்றிதழ் 2023 இறுதியில் வழங்கப்பட்டது. இரண்டாம் கட்டம் 2025 ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. முதலாவது கட்டத்தின் மொத்தச் செலவு ரூபா. 160 மில்லியன் ஆவதுடன், இரண்டாவது கட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவினம் (ஆலோசனை சேவை செலவுகள் உட்பட) ஏறத்தாழ ரூபா. 370 மில்லியன் ஆகும்.

## 4. கொழும்பு சர்வதேச விமான நிலையம் - இரத்மலானை (கொ.ச.வி.நி.இ) விமான நிலையத்தின் தொழில்பாட்டு கட்டிடங்களின் தொகுதியை நிருமாணித்தல்.

கொழும்பு சர்வதேச விமான நிலையம் - இரத்மலானைக்கான 2030 மூலதனத் திட்டத்தின் கீழ் ஐந்து தொழில்பாட்டு துறைகளில் நான்கு மட்டுமே தற்போது நடைமுறைப்-படுத்தப்பட்டுள்ளதுடன், பிராந்தியங்களின் நடவடிக்கைகளை மேம்படுத்தல் மேலும் அமுல்படுத்தப்பட வேண்டி உள்ளது. தற்போது, செயல்பாடுகள் குறைந்த திறனில் இயங்குவதுடன், ஐந்து துறைகளிலும் மேலும் வளர்ச்சிக்கான சாத்தியம் உள்ளது. கொழும்பு சர்வதேச விமான நிலையமான இரத்மலானையில் செயற்பாட்டுத் திறனை அதிகரிப்பதற்காக, புதிய விமான நிலைய செயற்பாட்டு வளாகத்தின் நிர்மாணப் பணிகள் 2025 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2026 நவம்பர் மாதம் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு 4.6 பில்லியன் ரூபாவாகும்.

## 5. மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (ம.ரா.ச.வி.நி.) தொழிற்பாடுகள்

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் தொழிற்பாடுகளை பராமரிப்பதற்கு விருப்பம் தெரிவித்த ஷௌரியா ஏரோனாட்டிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (Shaurya Aeronautics (Pvt) Ltd) மற்றும் ரஷ்ய நிறுவனத்திற்கு எதிராக ஐக்கிய அமெரிக்கா விதித்துள்ள தடைகளால் எழுந்துள்ள சட்ட சூழ்நிலை காரணமாக, மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் தொழிற்பாடுகளை இந்தியா – ரஷ்யா இணைந்த கூட்டு முயற்சியிடம் ஒப்படைக்கும் (J/V) தீர்மானம் இடை நிறுத்தப்பட்டுள்ளது. மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் மேற்கொண்டு தொழிற்பாடுகளை பராமரிப்பதற்காக மாற்று தீர்மானங்களை விரைவில் அறிவிக்கும்.

## 6. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்தி

பெரிய விமானங்களுக்கு வசதிகளை அளிக்கும் வகையில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை மேலும் விரிவாக்கம் செய்யப்படுமா என்பது குறித்து இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லை. இந்த நோக்கத்திற்காக 2025 ஆம் ஆண்டில் ஒரு விரிவான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சிவில் விமான ஒழுங்குபடுத்தல் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு வீதிகளின் நிருமாணிப்பு, பயணிகளின் முனையம் மாற்றப்படுதல் மற்றும் ஏனைய விமான நிலைய மேம்படுத்துதல் உள்ளிட்ட அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி திட்டங்களையும் உள்ளடக்கியதாக யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்தி பொருட்டு கம்பெனியிடமிருந்து 2025 பாதீட்டில் ரூபா.மில்லியன் 500 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. BIA இல் சூரிய வலுசக்தி உருவாக்க கருத்திட்டம்

நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் முன்னோக்கிச் செல்லும் அதே வேளையில் மின்சாரம் மற்றும் எரிசக்தி துறையில் வளர்ந்து வரும் சவால்களை எதிர்கொள்வதற்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டை அதிகரிப்பதற்கு AASL திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் ஒரு

பகுதியாக, 2025 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கொழும்பு சர்வதேச விமான நிலையம் - இரத்மலானை மற்றும் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றில் 2500 kWp விநியோகிக்கப்படும் சூரிய சக்தி அமைப்பு நடைமுறைப்படுத்தப்படும், இதன் மொத்த மதிப்பீடு 200 மில்லியன் ரூபாவாகும். கூடுதலாக, முனைய கட்டிடத்தின் கூரையில் 600 kWp சூரிய சக்தி அமைப்பு 2025 இல் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இதன் மொத்த மதிப்பீடு ரூபா 120 மில்லியன் ஆகும்.